February-2018 | Volume-4 | issue-41

# காட்டாறு

## அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

பிப்ரவரி - 2018 பருவம் - 4 புனல் - 41 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only



நேர்காணல்

# ஜாதி-தாலி-
# சடங்குகளைத் துறந்த
# காதலர்கள்

## இறையரசி-தமிழமுதன்

பல்லடம் நாராயணமூர்த்தி, வடிவேல்



ஜாதிமறுப்பு, காதல் திருமணம் என்றாலே குடும்பங்களில் வெறுப்பும், மிரட்டலும் உள்ள இன்றைய காலகட்டங்களில், காதல் திருமணங்கள் பற்றி இந்து மத சமூகத்தின் பார்வை என்னவென்றால், காதல் திருமணங்களால்தான் ஜாதிக்கலவரங்கள் நடக்கிறது; ஜாதி மாறி திருமணங்கள் செய்பவர்களால்தான் நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகள் குவிகின்றன என்பதாகவே உள்ளன. இந்துச்சமூகத்தின் பொதுப்புத்திக்குத் துணைபோகும் விதமாக பத்திரிகைகளும், ஊடகங்களும் நூற்றில் ஒன்று, இரண்டு ஜாதிமறுப்பு காதல் திருமணங்கள் தோல்வியுற்றால், அதை ஊதிப் பெருக்கி பெரிதாகக் காட்டுகின்றன.

இந்த மாதிரியான செய்திகள் இனிவரும் இளைய தலைமுறைகள் ஜாதிமறுப்பு, காதல் திருமணங்கள் செய்து ஜாதியற்ற சமூகமாக மாறுவதைத் தடுக்கும் விதமாகவும், மிரட்டும் விதமாகவும் பரவுகின்றன. இச்சூழலில் இரு குடும்பங்களின் சம்மதத்துடன் ஜாதிமறுத்து, சடங்கு மறுத்து காதல் திருமணம் செய்து கொண்ட திருச்சி இறையரசி - தமிழமுதன் இவர்களின் காதலைப் பற்றி காட்டாறு குழுவுடன் பகிர்ந்து கொள்ளும் நேர்காணல்.

**தோழர் இறையரசி:** இயற்பெயர்இராஜேஸ்வரி. ஊர் கைலாசபுரம். அம்மா வெள்ளையம்மாள், அப்பா ரங்கன். எனக்கு ஒரு அக்கா, ஒரு தம்பி உள்ளனர். திருமணத்திற்குப் பிறகு பெயரை இறையரசி என்று மாற்றிக்கொண்டார்.

**தோழர் தமிழமுதன்:** அப்பா அரசெழிலன். அம்மா அனுராதா. சொந்த ஊர் தேவக்கோட்டை. திருச்சி பாவேந்தர் பாரதிதாசன் கல்லூரியில் படித்தவர். திருச்சியில் வசிக்கிறார். இவர்களுக்கு 2 வயதில் ஒரு குழந்தை. பெயர் இரா.த.இசை.

**உங்கள் காதல் வரலாறைத் தொடங்குங்க. யார் முதலில் ப்ரொபோஸ் செய்தீர்கள்?**

நாங்கள் இருவரும் ஒரே பள்ளியில் படித்தோம். 6 ஆம் வகுப்பிற்கு இறையரசி வேறு பள்ளிக்குச் சென்றுவிட்டார். அதன் பின்பு இறையரசி கல்லூரியில் படிக்கும் போது அதே கல்லூரியில் என்னுடைய நண்பரும் படித்தார். அவர் இறையரசியுடைய பக்கத்து டிபார்ட்மெண்டில் படித்தார். அவர்தான் செல்போன் எண்ணை எனக்கு அனுப்பி வைத்தார். அப்போதுதான் இறையரசி என்னிடம் நன்றாகப் பேசிப் பழகினார். இரண்டு வருடம் நல்ல நண்பர்களாகப் பேசினோம். அதன் பிறகு நான் தான் என்னுடைய விருப்பத்தை முதலில் சொன்னேன். ஆனால் இறையரசி அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

அதற்கு, ஜாதியைக் காரணம் காட்டினார். நான், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள். இது எல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு நான் பேசினேன். என்னுடைய அப்பா பெரியாரியல் வழியைப் பின்பற்றி வாழ்பவர். அவர் நம்முடைய காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார். முதலில் நாம் கல்லூரிப் படிப்பை முடிப்போம். அதன் பிறகு இதைப்பற்றி வீட்டில் பேசுவோம் என்று சொன்னேன். அதேபோல வீட்டில் பேசினோம்.

**இறையரசி... உங்க ரெஸ்பான்ஸ் எப்படி இருந்தது?**

நான் முதலில் மறுப்பு தெரிவித்தேன். நண்பர்களாகவே பழகுவோமே என்று சொன்னேன். ஏன்னா, நாங்க தாழ்த்தப்பட்ட ஜாதிங்கறதுனால, காதல் வேண்டாம்னு சொன்னேன். அதன் பிறகு அவர் என்னுடைய அப்பா ஒரு பெரியாரியல்வாதி, அவர் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார். என்னுடைய அப்பாவை உங்கள் வீட்டில் போய் பேசச் சொல்கிறேன் என்று சொல்லி என்னைக் கன்வின்ஸ் பண்ணினார். அதுக்கு அப்புறம் தான் எனது காதலைத் தெரிவித்தேன். அதேபோல எனது மாமனாரும் என் அப்பாவிடம் வந்து பேசினார்.

**தமிழமுதனின் அப்பா பெரியாரியல்வாதி. அதனால் சிக்கல் இல்லை. இறையரசியின் அப்பா, அம்மா இதை எப்படி எடுத்துக்கிட்டாங்க?**

எங்களுடைய இரு வீட்டாரின் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. எதிர்பாராத விதமாக என்னுடைய அப்பாவின் நண்பர் இணையருடைய அப்பாவிற்கும் நண்பர். அவர்தான் இறையரசியின் அப்பாவிடம் பேசினார். அப்படிப் பேசியும் அவருக்கு ஜாதிமறுப்புத் திருமணத்தில் நம்பிக்கை இல்லை. எப்படியிருந்தாலும் பிரித்து வைத்து விடுவார்கள் என்று நினைத்தார். திருமணத்திற்கு முந்தைய நாள் வரைக்கும் அப்படித்தான் நினைத்தார். ஒரு வழியாக நண்பரின் அறிவுரையை ஏற்று திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார்.

**உங்களுடைய திருமண நிகழ்வு எப்படி நடந்தது? யார் முன்னிலையில் நடந்தது?**

எங்களுடைய திருமணம் 2015 இல் ஜனவரி 18 ஆம் தேதி, தேவக்கோட்டையில் நடந்தது. ‘மூத்தோர் விழா’, அதாவது, எங்கள் குடும்பங்களில் உள்ள மூத்தோர்களுக்கு என்று ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில் மூத்தோரின் வாழத்துகளுடன் நடந்தது.

எங்களுடைய திருமணத்தில் என்னுடைய தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, இறையரசியின் அப்பா, அம்மா, இவர்கள் 6 பேரின் முன்னிலையில் எந்த ஒரு சடங்கும் இல்லாமல், மாலை மாற்றித் திருமணம் செய்துகொண்டோம். உறுதிமொழி எடுத்துக்கொண்டோம். அதன்பின்பு எங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கினோம்.

**இறையரசி, உங்க கல்யாணத்துக்கு முன் ‘தாலி இல்லாம கல்யாணம்’ என்பதைக் கேள்விப்பட்டிருக்கீங்களா?**

என்னுடைய திருமணம் ‘மூத்தோர் விழா’ வில் நடந்தது. மற்ற திருமணங்களில் ஐயர் வைத்து மந்திரங்கள் ஓதி, தாலி கட்டித் திருமணம் செய்வார்கள். அந்த மாதிரியான திருமணத்தைத் தான் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால், எனக்கு நடந்தது புதுமையாக இருந்தது. தாலி இல்லாமல், எந்த ஒரு சடங்கு, சம்பிரதாயம் இல்லாமல் வெறும் மாலையை மட்டும் மாற்றிக்கொண்டு உறுதிமொழி எடுத்தோம். அவர் எனக்கு ஒரு செயின் மட்டும் போட்டுவிட்டார். உறுதிமொழி எடுத்தது எனக்குப் புதுமையாக இருந்தது.

**உங்கள் மாமனார் அரசெழிலன் ஒரு பெரியாரியல்வாதி என்பதால், இந்த மாதிரியான ஜாதி மறுப்புத் திருமணம், தாலியே இல்லாத திருமணத்தைப் பற்றி அவங்களுடைய சொந்தக்காரங்களுக்குத் தெரிந்திருக்கும். அவங்க தரப்பில் எதிர்ப்பு இருந்தாலும் அவர் சமாளிப்பார். ஆனா, உங்க சொந்தக்காரங்க இதை எப்படிப் பாத்தாங்க? அவங்கள எப்படிக் கையாண்டீங்க?**

என்னுடைய உறவினர்களுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை. இந்த மாதிரியான ஜாதி கடந்த திருமணம் என்னுடைய உறவுகள் வட்டாரத்தில் நடந்தது இல்லை. அதிலேயும் தாலி இல்லாமல், எந்த ஒரு திருமணமும் நடந்தது இல்லை. தாலி இல்லாத திருமணத்தைப் பார்த்து எப்படி இந்த மாதிரியான திருமணத்திற்கு சம்மதித்தீர்கள்? நாளைக்கு அந்தப் பையன் விட்டுட்டு போக மாட்டான் என்பது என்ன நிச்சயம்? என்று என்னுடைய அப்பாவைக் கேட்டார்கள்.

அதற்கு என்னுடைய அப்பா யாரும் எதுவும் சொல்லவேண்டாம். என்னுடைய மகளுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இருக்கிறது. அவளும் படித்து இருக்கிறாள். அவளுக்கான வாழ்க்கையைச் சரியாகத்தேர்ந்தெடுத்திருப்பாள் என்று நம்புகிறேன். அதனால் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன் என்று சொன்னார். முதலில் உறவினர்கள் என்னை வெறுத்தாலும், இப்போது எல்லோரும் என்னிடம் பேசுகிறார்கள். பரவாயில்லை நல்லமுறையில் வாழ்கிறார்கள் என்று பொறாமைப்படுகிறார்கள். அந்த மாதிரிதான் நாங்களும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

**காதலர் தினத்தைப் பற்றி மற்ற மூன்று மதத்தினரின் பார்வை எப்படி இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள்?**

கிறிஸ்துவ மதம் காதலை பெரிதாக எதிர்ப்பதில்லை. அப்படி எதிர்த்தால் அது பொருளாதார வித்தியாசத்தால் எதிர்க்கும் என்று நினைக்கிறேன். இஸ்லாமிய மதம் தங்களின் பெண்கள் வேறு மதத்தைச் சார்ந்த ஆண்களை தேடிப் போகக்கூடாது என்றும், பெண்கள் சுதந்திரமாகத் தங்கள் துணையைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்றும் பார்க்கிறார்கள். ஆனால், இந்த இந்துமதம் இருக்கிறது பாருங்கள்... மற்ற மதங்களுக்கு எல்லா ஏற்றத்தாழ்வு ஜாதி, சாஸ்திர, பழக்க வழக்கம், பெண் அடிமைத்தனம் இவைகள் அனைத்தையும் கற்றுக் கொடுக்கும் மதம் இதுதான்.

காதலர் தினத்தை எதிர்க்கும் இந்து அமைப்புகளுக்கு மொத்த பாடத்திட்டமாக இருப்பவை பார்ப்பனியச் சிந்தனை தான். இந்த பார்ப்பனர்களின் நலனுக்காகத்தான் இந்த எதிர்ப்பு பயன்படுகிறது.

முதலில் இருவர் இணையும் திருமண விழா என்றால் ஜாதகம், பெயர்ப் பொருத்தம், நிச்சய தார்த்தம், முகூர்த்தம் நடத்துதல், சாந்தி முகூர்த்தம், இந்த மாதிரியான நிகழ்வுகள் அனைத்தும் பார்ப்பனர்கள் சொல்லும் நாட்களில்தான் நடக்க வேண்டும். அப்போதுதான் குடும்பம் செழிக்கும். வம்சம் விரித்தியாகும் என்றும் மக்கள் நம்புகிறார்கள். இதைப் பயன்படுத்தி பார்ப்பனர்கள் உடம்பு நோகாமல், மந்திரங்கள் என்ற பெயரில் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்க முடியும். இவைகளை எல்லாம் நம்பாமல் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பழகி, காதலித்துத் திருமணம் செய்து கொண்டால் விடுவார்களா இந்தப் பார்ப்பனர்கள்.

**காதலைப் பற்றி உங்களது கருத்து?**

சிறுவயதில் ஏற்படும் காதல்கள் 14 வயது முதல் 18 வயது வரை ஏற்படும் காதல் ஒருவிதமான அட்ராக்சன் என்றுதான் கூறவேண்டும். வாழ்க்கையின் தேவைகள், ஒருவரை ஒருவர் அறியாத வயதுதான்.

20 முதல் 25 வயது அதற்கு மேலாக ஏற்படும் காதல் என்பது ஒருவரை ஒருவர் பார்த்து, பழகி இருவரின் வாழ்க்கை நிலையையும் உணர்ந்து தங்களின் வாழ்க்கையைச் சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் பக்குவம் இருவரிடமும் இருக்கும். இதனால் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும்.

**தமிழமுதன்...உங்களுடைய ஜாதிமறுப்பு, காதல் திருமண வாழ்க்கை எப்படியிருக்கிறது?**

எங்களுடைய திருமணம் குடும்பத்தாரின் அனுமதியுடன் நடந்ததால் இன்றும் எங்கள் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறது. அதற்குக் காரணம் எங்கள் வாழ்க்கைமுறைதான். எங்கள் குடும்பத்தில் இந்துமத சாஸ்திர சடங்குகள், குலதெய்வ வழிபாடுகளும் எதுவும் நடத்துவது இல்லை. இதற்குக் காரணம் என்னுடைய அப்பாதான். அவர் பெரியாரியலைக் கடைப் பிடிப்பதால் எங்கள் வாழ்க்கை சிறப்புடன் இருக்கிறது. அனைவருக்கும் காதலர் தின வாழ்த்துகள்.





# புரட்டு மதங்களில் சமரச சன்மார்க்கம் என்பதும் ஒன்றே!

தோழர் பெரியார்

உலகத்தில் உள்ள எத்தனையோ புரட்டு மதங்களில் சமரச சன் மார்க்கம் என்பதும் ஒன்றேவொழிய உண்மையில் எல்லோருக்கும் ஏற்ற சமரசத்தையும் சன்மார்க் கத்தையும் கொண்டது எதுவும் இல்லை என்றே சொல்வேன். - 08.04.1928 ஆம் நாள் அம்பலூர் சமரச சன்மார்க்க சங்கத்தாரால் வழங்கப்பட்ட வரவேற்பு உபசாரப் பத்திரத்திற்கு பதில் அளித்து உரை.

குடி அரசு - 22.04.1928

சகோதரிகளே! சகோதரர்களே!!

சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக்கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில் எது எது சமரச சன்மார்க்கம் என்கிறோமோ எது எது உண்மையான - இயற்கையான சமரச சன்மார்க்க மென்று கருதுகின்றோமா அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நமதுநாட்டில் மட்டும் அல்ல உலக முழுவதிலுமே அப்படித்தான் அமைக்கப்பட்டுப் போயிற்று. ஆனால் நமது நாட்டில் மற்ற நாடுகளைவிட வெகு தூரம் அதிகமான வித்தியாசம் வைத்து அமைக்கப் பட்டு விட்டது.

முதலாவது கடவுள், மதம், விதி, ராஜா, ஜாதி, பணம், தொழில் முதலாகியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்க மல்லாமல் நியாய பூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டி ருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப் பற்றி பேச வேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்பட வேண்டும் என்கின்ற முறையில் யோக்கியர்களா லோ, அறிவாளிகளாலோ பேசமுடியாது. ஏனெனில் அவை ஒன்றுக் கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும். அதோடு மாத்திரமல்லாமல் சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின் மீதே அமைக்கப் பட்டவைகளாகும்.

ஆகையால் நான் சமரச சன்மார்க்கத்தைப் பற்றி பேசவேண்டு மானால் அவைகள் சம்மந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பது தான் சமரச சன்மார்க்கம் என்று சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம்பக்க ஜாதியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவை களாயுமிருக்கும் என்று கருதுகின்றேன். நான் உண்மை யான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார், அடைந்த சமூகத்தார், அடைந்த தனி மனிதர்கள் என்று யார் யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறான வைகளைத் தகர்த்தெறிந்து தான் சமரச சன் மார்க்கம் அடைந்தார்கள் - அடைகின்றார்கள் - அடைய முயற்சிக்கின்றார்கள். இவைகளில் சிறிது தாட்சண்யப்பட்டவர்கள் கூட தோல்வியே யடைந்து விட்டார்கள்.

*( ஈரோடு பெருந்துறையை அடுத்த கிரே நகரில் 26.01.1931 அன்று நடைபெற்ற ஆதிதிராவிட ஆண்டு மாநாட்டில் ஆற்றிய உரை.)* குடி அரசு - 08.02.1931

இராமகிருஷ்ண ‘பரமஹம்சர்’, விவேகானந்த ‘சுவாமிகள்’, லோகமன்ய திலக ‘மகரிஷி’, இராமலிங்க ‘வள்ளலார்’ என்கின்ற சமீபகால மக்களால் நாட்டுக்கு ஏற்பட்ட பயன் என்ன? இவர்கள் படம் பூஜிக்கப்படுவது எனக்கு தெரியும். இவர்களை 100க்கு 75 மக்களுக்கும் தெரியும். ஆனால் 100 ல் ஒருவருக்கு நடந்த நன்மை என்ன?

குடி அரசு - 11.10.1931

பட்டினத்தார் - தாயுமானவர் - இராமலிங்க அடிகள் எல்லாம் தமிழ் படித்து சாமியானவர்கள் தமிழ்ப் படித்தவனெல்லாம் சாமியானனே ஒழிய, எவனும் பகுத்தறிவுவாதியாகவில்லை.

*(29.9.1967 அன்று சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் பெரியார் உரை)* - விடுதலை 03.10.1967

தாராபுரம் பூங்கொடி

# பெண் ஊடகவியலாளர்கள் கிளிப்பிள்ளைகளா?

மிரர் நவ் (MIRROR NOW) தொலைக்காட்சியில் (இந்தத் தொலைக்காட்சி முழுக்க பெண்களாலேயே நடத்தப்படுகிறது. வாய்ப்புள்ளவர்கள் பார்க்கவும்). நெறியாளர் ஃப்யா டிசோசா (Fiye Disoza) தலைமையில் (Urban Debate) விவாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பங்கு கொண்ட மௌலானா யாசீப் அப்பாஸ் அவர்கள் நடிகை சனா குறைவான உடையணிந்திருந்ததை வன்மையாகக் கண்டித்துப் பேசினார். மறுத்துப் பேசிய பெண் நெறியாளரையும் பெண்கள், ஆண்களுக்குச் சமம் என்று நிருபிக்க உள்ளாடையோடு வந்து இந்நிகழ்ச்சியை நடத்துங்கள் என்று கூறினார். நெறியாளர் உள்பட அனைவருமே ஒரு நிமிடம் அதிர்ச்சியில் உறைந்து விட்டனர்.

நெறியாளர் ஃப்யா டிசோசா பேனலில் இருந்த அனைவரையும் அமைதி காக்கும்படி கூறிவிட்டு பார்வையாளர்களை நோக்கித் திரும்பி, திரு








'தங்கல்' படம் நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள். அந்தப் படத்தின் நாயகனான அமீர்கான் தன் மகள்கள் மூவரையும் ஆண்களைப் போல் வளர்த்து, மல்யுத்தப் போட்டிக்கும் தயார் செய்திருப்பார். என்னப்பா இது திரை விமர்சனமான்னு யோசிக்காதீங்க, கதை சொல்லவில்லை. அந்தப் பெண்களில் ஒருவராக நடித்த 'சனா பாத்திமா சேக்' என்கிற நடிகை ரமலான் மாதத்தில் உள்ளாடையுடன் இருந்த படம் சமூக வலைத் தளங்களில் வந்தது.

அதை எதிர்த்து இஸ்லாமிய பிற்போக்கு மத வாதிகள் குரல் கொடுத்தனர். அதெப்படி ஒரு இஸ்லா மியப் பெண் ரமலான் மாதத்தில் இந்த மாதிரி ஆபாச மாக போட்டோவுக்கு போஸ் கொடுக்கலாம் (மத்த மாசத்தில இதே மாதிரி இருந்தால் கூப்பிட்டு பாராட்டுகிற மாதிரி) என்று பிரச்சனையக் கிளப்ப ஆரம்பித்தார்கள். இது சம்பந்தமாக ஒரு தொலைக் காட்சியின் நேரடி விவாத நிகழ்ச்சியில் நடந்தது தான் மிகவும் அருவருப்பானது.

மௌலானா அவர்கள் என்னை வெறுப்பேற்றுவதன் மூலம் நான் நிதானத்தை இழந்து கூச்சல் போட்டு வேலையை மறந்து விடுவேன் என எண்ணுகிறார். நான் புனிதமாக எண்ணிப் பணிபுரியும் என்னுடைய அலுவலகத் திலேயே வந்து அமர்ந்து கொண்டு என்னை உள்ளாடையோடு வந்து நிகழ்ச்சியை நடத்தச் சொல்கிறார்.

"திரு மௌலானா ஜி இது எனக்குப் புதிதல்ல, நான் உங்களைக் கண்டு அஞ்ச மாட்டேன், நீங்கள் என்னை மிரட்ட முடியாது. நீங்கள் எங்களைப் (பெண்களை) பின்வாங்கச் செய்ய முடியாது" சனா பாத்திமா அவர்கள் வேலை (நடிப்பு) செய்யும் போதும், சானியா மிஸ்ரா விளையாடும் போதும் உடை குறித்தான விமர்சனத்தை முன்வைத்துத் துரத்துவதன் மூலம் திரும்பவும் நாங்கள் வீட்டுக்குள், சமையலறைக்குள் முடங்குவோம் என எண்ணுகிறீர்கள். நான் உங்களுக்கு ஒரு செய்தி வைத்திருக்கிறேன். நாங்கள் எங்கும் ஓடப் போவதில்லை. ஆண்களாகிய நீங்களே உலகத்தை ஆளட்டும் என்று விட்டு விடுவோம் என நினைக்கா

தீர்கள். உடை என்பது எனது உரிமை, அதில் தலையிடும் உரிமை உங்களுக்குக் கிடையாது என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக் கொள்கிறேன்''

என்று பொட்டிலடித்தாற் போல பதில் கூறினார். இதே கருத்தைத்தான் தோழர் பெரியார் 50 ஆண்டுகளுக்கு முன்பே கூறினார்.

"16 முழத்தில் புடவைகளை உடல் முழுவதும் சுற்றிச் சுற்றிக் கட்டுவது என்பது பெண்களுக்கு வசதிக் குறைவு. ஒரு அவசர நேரத்தில் தப்பிப் பிழைக்க, வேகமாக வெளியேறிட இது தடையாக இருக்கிறது. பெண்கள் ஆண்களைப்போல உடை உடுத்த வேண்டும். ஆண் - பெண் வித்தியாசம் காட்டத் தேவையில்லை; பெயரை வைத்தேகூட ஆணா பெண்ணா என்று தெரிந்து கொள்ளக் கூடாது'' - தோழர் பெரியார்.

ஆண்கள் கோலோச்சி வந்த பத்திரிகைத் துறையில் முதல் பெண் புகைப்பட நிருபராக ஹோமாய் வியார்வாலா ( Homai vyarawalla) 1952 ஆம் ஆண்டில் நுழைந்தார். ஏறத்தாழ 65 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது தான் பெண்கள் பெருமளவில் பங்கு கொள்கின்றனர். உலகளவில் பாதுகாப்பான பணி என்று நம்பப்படும் ஊடகத்துறை இந்தியாவில் மட்டும் தன் நம்பகத்தன்மை இழந்திருக்கிறது என்பதையே பின்வரும் புள்ளிவிபரம் நமக்கு உணர்த்துகிறது .

International Womens Media Foundation (IWMF)

ஊடகங்களில் பணிபுரியும் ஏறத்தாழ 977 பெண்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் கொலை மிரட்டல் மற்றும் பாலியல் சீண்டல் களுக்கு உள்ளாவதாகவும், சர்வதேச ஊடகப் பெண்கள் அமைப்பு International Womens Media Foundation (IWMF) தெரிவிக்கிறது. கணக்கில் வந்த விபரம் இது. (வெளியே சொன்னால் வேலையை விட்டு விட நேருமோ? வாழ்வாதாரம் பறிபோகுமோ என்கிற பயத்தில் கணக்கில் விடுபட்டது எத்தனையோ)

இக்குழுவின் கணக்கெடுப்புப்படி ஆசியாவில் ஊடகத்துறையில் உயர் மட்டக்குழுக்களில் வெறும் 13% பெண்களே அங்கம் வகிப்பதாகவும் அதே சமயம் தெற்கு ஆப்பிரிக்காவில் 79.5% பெண்கள் உயர் அதிகாரிகளாக இருப்பதாகவும் தெரிவித்தது. பத்திரிகைச் சுதந்திரத்தை எடுத்துக்கொண்டால் 180 நாடுகளில் இந்தியா சென்ற வருடத்தைக் காட்டிலும் மூன்று இடங்கள் பின்னோக்கி நகர்ந்து 136 வது இடத்தில் இருக்கிறது.

செய்திகளில் உடன்பாடில்லை என்றால் உடனே தேசிய விரோதிகள், இந்து விரோதிகள் என்று கூறுவதும், கொலை மிரட்டல் விடுப்பதும் பெண்களாக இருந்தால் பாலியல் சீண்டல்கள், அச்சுறுத்தல் தருவது, நடத்தை சார்ந்த அவதூறுகளை (Character Assassination) சமூக வலைதளங்களில் பரப்பும் போக்கும் இப் பின்னடைவுக்கான காரணியாக இருக்கக்கூடும்.

**மாற்றுக்கருத்துக் கொண்ட பெண்களைக் கொச்சைப்படுத்தும் பா.ஜ.க ட்ராலிங் டீம்**

எடுத்துக்காட்டுக்காக இந்தியாவில் அரங்கேறிய ஒன்றிரண்டு சம்பவங்கள் உங்கள் கவனத்துக்கு வைக்கிறேன். சமீபத்தில் பிரதமர் மோடி அவர்களுடனான சந்திப்பில் நடிகை பிரியங்கா சோப்ரா அவர்கள் அணிந்திருந்த உடையையும், அவர் கால் மேல் கால் போடு உட்கார்ந்திருந்ததையும் கண்டித்து தொடர்ச்சியாக சமூக வலை தளங்களில் ட்ராலிங் செய்யப்பட்டார்.

புகழ்பெற்ற CNN – IBN தொலைக்காட்சியின் முதன்மைச் செய்தி வாசிப்பாளர் மற்றும் முன்னணிப் பத்திரிகை ஒன்றில் தொடர்ச்சியாக எழுதி வருபவர் சங்காரிகா கோஸ் (Sangaraika ghose). இவரை டிவிட்டரில் ஏறத்தாழ 1,77,000 பேர் பின்தொடர்கின்றனர். ஆனால் தற்போது இவர் டிவிட்டரில் எழுதுவதையே கைவிட்டுவிட்டார். ஆபாசமான வசவுகளைப் பொது வெளியில் பதிவிடுவது மிகுந்த துயரத்தைத் தருகிறது வேறு என்ன செய்ய முடியும் என்றார் சங்காரிகா கோஸ்.

இவ்வாறே மும்பையைச் சேர்ந்த பெண்ணியச் செயல்பாட்டாளர் கவிதா கிருஷ்ணன் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் கவிதா முரளிதரன், சமூகச் செயல்பாட்டாளர் லீனா மணிமேகலை, தனியார் தொலைக்காட்சியைச் சேர்ந்த சுகிதா, இணையஊடகத்தின் தான்யா என்று ஒரு நீளமான பட்டியல் உள்ளது.

இவர்கள் உணவு, உடை குறித்தோ, ஊடகத்திற்கு எதிராகவோ, அரசுக்கு எதிராகவோ, மதவாதிகளுக்கு எதிராகவோ, சில அரசியல் கட்சிகளுக்கு எதிராகவோ - நேரடியாகவும், சமூக வலை தளங்களிலும் தங்கள் கருத்துக்களைக் கூறினால், உடனடியாகச் சமூக வலைதளங்களில் ட்ராலிங் செய்யப்படுகின்றனர். இம்மாதிரி மோசமான இணைய வசவுகளுக்கு ஆளான ஒருவர் தான் டெல்லியைச் சேர்ந்த மூத்த புலனாய்வுப் பத்திரிகையாளர் சுவாதி சதுர்வேதி.

பா.ஜ.கவின் மதவாத அரசியலை விமர்சித்ததையடுத்து ட்ராலிங் செய்யப்பட்டார். மேலே சொன்ன அனைத்துப் பெண்களும் காவல்துறையில் புகார் அளித்தும் எந்தப் பயனும் இல்லை என்று அமைதியாகி விட்டனர் ஆனால் அடிப் படையிலேயே புலனாய்வுப் பத்திரிகையாளரான சுவாதி சதுர்வேதிக்கு மட்டும், "அவரவர் வேலையையே கவனிக்க முடியாத இந்த அவசர காலத்தில், ஒரு சிலரால் மட்டும் எப்படி வலை தளங்களில் ஓயாமல் இயங்க முடிகிறது'' என்ற கேள்வி தொக்கி நின்றது. கேள்விக்கான விடையைத் தேடி இரண்டு ஆண்டுகள் புலனாய்வு செய்து கண்டுபிடித்த உண்மைகளை ' ஐ ஆம் எ ட்ரால்' என்கிற புத்தகமாக வெளியிட்டார்.

புத்தகத்தில் அவர் கூறிய விசயங்கள் அத்தனையும் திடுக்கிடும் ரகம். நாம் எந்தமாதிரியான அரசாங்கத்தின் கீழ் இயங்குகிறோம் என்று

பீதியையும், வேதனையையும் ஒருங்கே தருகிறது. சமூக வலைதளங்களில் பா.ஜ.க. வின் மதவாத அரசியலை விமர்சிப்பவர்களை ட்ராலிங் செய்த தற்குப் பின்னால் ஒரு தனிநபர் இருக்கிறார் என்ற எண்ணத்தை முற்றிலும் தவிடுபொடியாக்கி விட்டதையும், பா.ஜ.க.வின் செய்திப்பிரிவில் ட்ராலிங் செய்வதற்கென்றே ஆயிரக்கணக்கான முழுநேர ஊழியர்கள் பணி அமர்த்தப் பட்டிருக் கிறார்கள் என்ற விசயத்தையும் சுவாதி சதுர்வேதி புத்தகத்தில் எடுத்துரைக்கிறார்.

**துணிவுடன் எதிர்கொண்ட தோழர் ஜோதிமணி**

அகில இந்திய இளைஞர் காங்கிரசின் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் ஜோதிமணி அவர்கள் பணமதிப்பு நீக்கம் மற்றும் காஷ்மீர் தாக்குதல் என மத்திய அரசின் செயல்பாடுகளை விமர்சித்ததையடுத்து போன் மூலமாகவும், சமூக வலைதளங்களில் அவரை ஆபாசமாக விமர்சித்தும், அவரது தனிப்பட்ட எண்ணை வாட்ச்அப் குழுவில் இணைத்தும் ஆபாச, வக்கிரப்பதிவுகளை பி.ஜே.பி.யைச் சேர்ந்த நபர்கள் முன்னெடுத்ததையும் - கண்டித்து காவல்துறையில் புகார் அளித்ததோடு நில்லாமல், பொதுவெளியிலும் இப்பிரச்சனையை தைரியமாகக்கூறி எதிர்கொண்டு வெளிவந்ததும் நம் கண்முன் நிழலாடுகிறது.

பெண் என்பதால், அதுவும் கருப்பான பெண் என்பதால், பா.ஜ.க.வின் தமிழ்நாட்டுப் பொறுப் பாளர் தமிழிசை அவர்கள்கூட, பல திராவிடர் இயக்க மற்றும் திராவிட இயக்கத் தோழர்களால்கூட மிகக் கேவலமாகச் கொச்சைப்படுத்தப்படுகிறார். பா.ஜ.க.வின் கொள்கைகள், செயல்பாடுகள் காரணமாக தமிழிசை அவர்களை விமர்சிப்பதும், எதிர்ப்பதும் கட்டாயத் தேவைதான். ஆனால், பாலினத்தை வைத்தும், உருவத்தை வைத்தும் ட்ரால் செய்வது, மீம்ஸ் போடுவது என்பதைத் திராவிடர் இயக்கத்தினரே செய்வது மிகவும் தவறு.

இந்தியாவில் தகவல் தொழில்நுட்பச் சட்டம் *(India's Information Technology (IT) Act) 66 A* வின் படி இணையத்தில் பெண்கள் மீது ஏவப்படும் வக்கிரச் செய்திகளைப் பதிவிடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வழிவகை இருந்தும், பெரும்பாலும் ஒரு பயனும் இல்லை. ஏனென்றால் புகார் கொடுக்கச் செல்லும் பெண்களின் புகார்களை உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல், சமூக வலைத்தளங்களில் பெண்கள் தேவையற்ற கருத்துக்களைக் கூற வேண்டாம் என்று காவல்துறை பாடம் நடத்திக் கொண்டிருக்கிறது.பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகள், சமத்துவத்தை நிலை நாட்டத் தொடங்கப்பட்ட தேசிய மகளிர் ஆணையகம், 25 ஆண்டுகள் நிறைவடைந்து, இந்தமாதம் வெள்ளி விழாக் கொண்டாடப்பட்டது, ஆனால் மகளிருக் கான சமத்துவமும் மட்டும் இன்னமும் எட்டிய பாடில்லை.

ஊடகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்துப் பேசுவதற்காக கேரள அச்சுக் கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் கருத்தரங்கில் உரையாற்றிய பெண் பத்திரிகை யாளர் கல்பனா சர்மா, ஊடகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு வெளியிலிருந்து வரும் அச்சுறுத் தல்கள் ஒருபுறம். பணிபுரியும் இடத்தில் உயரதிகாரி களால் உண்டாகும் பாலியல் தொந்தரவுகள், பாலியல் சீண்டல்கள் மறுபுறம் என்று தொடர்வது விரக்தியை உண்டாக்கி வேலையை விடும் சூழ்நிலைக்குப் பெண்களைத் தள்ளுவதாகத் தெரி வித்தார். (பாலியல் தொந்தர வுகள் அற்ற, சமத்துவ மான பணிச்சூழல் பெண் களுக்குக் கனவில் தான் சாத்தியப்படும் போல)

**கிளிப்பிள்ளைகளாக வாழ வேண்டாம்**

"உலகுக்கு உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம்" எனப் பீற்றிக்கொள்ளும் ஊடகங்கள், பெண்கள் மீது மட்டும் தன் இருண்ட பக்கத்தையே காட்டும் இந்நிலை மாற வேண்டும். அழகுக்கலை, சமையல், வீட்டுக்குறிப்புகள், ஆடல், பாடல் நிகழ்ச்சிகளைப் பெண்கள் தொகுத்து வழங்கச் செய்வதும், நேரடி அனல் பறக்கும் விவாத நிகழ்ச்சிகளை பெரும்பாலும் ஆண்களே நடத்தும் நிலையும் மாற வேண்டும்.

குறிப்பாக, தமிழ்நாட்டுத் தனியார் தொலைக்காட்சிகளில் பணியாற்றும் பெண்கள், செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்ற சிறு வட்டத்திற்குள்ளேயே பறந்து கொண்டிருப்பது போதாது. தனியாக, நிகழ்ச்சிகளை வழங்குவது, விவாதங்களை முன்னின்று நடத்துவது, தலைமை ஆசிரியர்களாக உயர்வது என்ற இலக்குகளை நிர்ணயித்துப் போராட வேண்டும்.

வடமாநிலங்களில் உள்ள இந்தி மற்றும் ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் பார்ப்பன மற்றும் உயர்ஜாதிகளைச் சேர்ந்தவர்களும், கேரளப் பெண் களும் தங்களது திறமையாலும் உயர்ந்து வருகி றார்கள். அதேசமயம்,

**இந்தியா முழுவதும்**
**உள்ள பார்ப்பனரல்லாத பெண்**
**ஊடகவியலாளர்கள் வெறும்**
**அழகுப் பதுமைகளாகவோ,**
**சொல்வதைச் செய்யும்**
**கிளிப்பிள்ளைகளாகவோ**
**மட்டுமே வலம் வருகின்றனர்.**
**கிளிப்பிள்ளைகளாக**
**நாம் இருக்கும் வரை**
**நம்மைச்சுற்றி**
**எதுவும் மாறாது.**

ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து-இலண்டன்



# மாசற்ற காற்றே மானுடத் தேவை

நாற்று நட்டு நெல் வளர்த்த சோழ நாடு, சோறுடைத்து என்பது பழைய மொழி. காற்று கெட்டு மாசுடைத்து தமிழ்நாடு என்பது இன்றைய மொழி. பகையது எதுவும் இல்லை தமிழனுக்கு என்பது அன்றைய மொழி. புகையது எங்கும் உள்ளது தமிழருக்கு என்பது இன்றைய மொழி.

மனிதனுக்கு இயற்கையின் கொடையில் மிக அத்தியாவசியமானது காற்று. காற்றின்றி மனிதன் உயிர் வாழவே இயலாது. தண்ணீர் கூட காற்றின் அத்தியாவசியத்திற்குப் பிறகே வருகிறது. அவ்வளவு அத்தியாவசியமானது காற்று.

மனிதன் சுவாசிக்கும் காற்றில் மாசு கலப்பது வேதனையானது. காற்று மாசு என்பது காற்றில் துகள்களையும் தீங்கு விளைவிக்கக் கூடிய வாயுக்களை கலப்பதும் ஆகும். காற்று மாசாவதை இரண்டு வகையில் பிரிக்கலாம்.

1. இயற்கை, 2. செயற்கை

மாசு முற்றிலும் தவிர்க்க இயலாதுதான். அதாவது இயற்கையாகவே ஏற்படுகிற சில மாசை ஏற்றுக்கொள்ளலாம். அதென்ன இயற்கையாகவே ஏற்படுகிற மாசு என்றால்? இயற்கை மாசு என்பது கடலில், மண்ணில், மரம், செடி, கொடி போன்றவற்றால் இயற்கையாகவே காற்றில் கலக்கக் கூடியது. இது தவிர்க்க இயலாத ஒன்று.

செயற்கை மாசு என்பது நிலக்கரி, எண்ணெய், பெட்ரோல், டீசல் போன்றவற்றை எரிப்பதில் இருந்து வரக்கூடியது. இவற்றை எரிப்பதன் மூலம் வரக்கூடிய மிக முக்கிய மாசுகள் கார்பன் மோனாக்ஸைட்(CO), நைட்ரஜன் டையாக்சைட்(NO2), சல்பர் டையாக்சைட்(SO2) போன்றவை. சாலையில் இயங்கும் வாகனங்கள் பெரும்பாலும் வெளியிடுவது கார்பன் மோனாக்ஸைட்(CO) மற்றும் நைட்ரஜன் டையாக்சைட்(NO2). எரி மின்சார உற்பத்தித் தொழிற்சாலைகள், வேதியியல் தொழிற்சாலைகள், ஆகியவற்றில் இருந்து சல்பர் டையாக்சைட்(SO2) வெளியிடப்படுகிறது.

சொல்லப்போனால் இயற்கை வழங்கும் வளம் ஏராளம், காற்று, நீர், மலை, காடு என்று ஏராளமாக இருக்கிறது. காற்று இயற்கையின் சமத்துவ வளம். காற்று பார்ப்பனர்க்கு என்றோ, சூத்திரருக்கு என்றோ, பஞ்சமருக்கு என்றோ, ஏழைக்கு என்றோ, அல்லது பணக்காரருக்கு என்றோ தனியாக இயங்காது. தண்ணீரையாவது கண்டெயினரில் விற்கும் நிலை உண்டு. நல்ல வாய்பபாக காற்றை இன்னும் கண்டெயினரில் விற்கும் அவல நிலை வரவில்லை.

ஓசோன் என்பது உலகத்தைச் சுற்றி உள்ள ஒரு வாயு மண்டலம். அந்த மண்டலம் இருப்பதால் கதிரவனின் வெப்பம் மிதமாக உலகை வந்து சேர்கிறது. ஓசோன் படலம் ஓட்டையாக அல்லது வலுவிழந்து இருந்தது. இப்போதுதான் பல கட்டமாக காற்றில் மாசு குறைக்கப்பட்டப் பிறகு சிறிது சிறிதாக ஓசோன் படலம் வலுப்பெற்று வருகிறது.

காற்றில் முக்கியமாக இருக்கும் இரண்டு வாயுக்கள் பிராணவாயுவும்(O2), கரிஅமில வாயுவும்(CO2). மரங்கள் கரிஅமில வாயுவை(CO2) உண்டு பிராணவாயுவை(O2) தருகின்றன.

மனிதர்கள் பிராண வாயுவை உண்டு கரிஅமில வாயுவைத் தருகின்றனர். மனிதர் வாழ பிராணவாயு அத்தியாவசியம். பிராணவாயு கிடைக்க மரங்கள் அத்தியாவசியம். மரங்கள் வளர தண்ணீரும், கதிரவனும் அத்தியாவசியம். இப்படி இயற்கையானது ஒன்றை ஒன்று ஒட்டி, சார்ந்தே வாழ்கிறது.

மனிதன்தான் பிறந்தவுடன் பிரம்மாவின் முகத்தில் பிறந்ததாகவும், பூணூல் அணியும் உயர் ஜாதி பார்ப்பனர் என்றும், காலில் பிறந்தவர் இழி ஜாதி என்றும், பூணூல் போட உரிமை இல்லாத பார்ப்பானுக்கு அடிமையான சூத்திரர் எனும் பிரிவினைகள் கொண்டு, ஒருவரை ஒருவர் ஒட்டாமலும் ஒருவரை ஒருவர் சாராமலும், அதே வேளையில் ஒருவர் மற்றொருவருக்கு அடிமையாக்கப்பட்டும் வாழ்கின்றனர்.

மரம் செடி கொடி கொடுக்கும் காற்றை உண்ணும் சிறிய மிருகம்தான் மனிதன். இந்த மனித மிருகத்துள், பார்ப்பனர் உருவாக்கிய செயற்கையான திட்டம்தான் ஜாதிய படி நிலை அமைப்பு. இயற்கை எப்போதும் செயற்கையை விழுங்கும். பிராணவாயு மாசடைந்து பிராணனை வாங்குகிறதோ இல்லியோ, இந்தப் பார்ப்பனீய மாசு தமிழரை படுத்தி எடுக்கிறது.

இலண்டனில் மாசு அளவு சிறிது அதிகமானாலே அது முக்கிய செய்தி ஆகிவிடுகிறது ஊடகங்களில். சென்ற முறை இந்தியர்கள், ஹிந்துக்கள் தீபாவளி கொண்டாடிய மாதத்திற்குப் பிறகு காற்றில் மாசு பெரும் அளவு அதிகரித்ததை புள்ளிவிவரம் துல்லியமாகத் தெரிவிக்கிறது. இதனை ஊடகங்கள் உடனடியாகப் பதிவு செய்தன.

ஒரு ஹிந்து ஏற்படுத்தும் காற்று மாசு ஆங்கிலேயரையும் விடுவதில்லை, சீக்கியரையும் விடுவதில்லை, தமிழரையும் விடுவதில்லை, அய்ரோப்பியரையும் விடுவதில்லை. ஏன்? மாசு ஏற்படுத்திய இந்திய ஹிந்துவையும் விடுவதில்லை. ஒருவர் செய்கிற தீங்கால் தொடர்பே இல்லாத பிறர் ஏன் துன்பப்பட வேண்டும்? என்பது அடிப்படை நாகரிகம். தீபாவளி கொண்டாடுவது பட்டாசு வெடிப்பது ஒருவர் விருப்பம் என்றால் அதனால் அடுத்தவர் பாதிப்படையக் கூடாது அல்லவா? பட்டாசு வெடிப்பவருக்கே அது தீங்குதானே?

காற்று மாசைத் தடுக்க பல முன்னெடுப்புகளை அக்கறை உள்ள அரசாங்கங்கள் எடுக்கின்றன. மின்சாரத் தயாரிப்பை இயற்கை வழியில், சூரியஒளி மூலமாக, காற்றாலை மூலமாக, கடலலை மூலமாக தயாரிக்கத் தொடங்குகின்றனர். வாகனங்கள் மின்சாரம் கொண்டு இயங்க வைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 2040-இல் இங்கிலாந்தில் பெட்ரோல், டீசல் வாகனங்களை தடை செய்ய இப்பொழுதே திட்டமிடத் தொடங்கி விட்டனர்.

இலண்டனில் ஆராய்ச்சியாளர் ஒருவர் காற்று மாசால் ஏற்படும் தீங்குகளை அறிவியல் பூர்வமாக ஆவணப்படுத்தி இருக்கிறார். காற்று மாசைத் தடுக்கக் கூடிய அதி நவீன முகமூடிகளை, உடைகளை ஒருவருக்கு அணிவித்து, மாசுள்ள புகை சூழ்ந்த சாலையில் சில உடற்பயிற்சிகள் செய்யச் சொல்லி சில மருத்துவப் பரிசோதனைகள் எடுக்கப்பட்டது. பிறகு மூன்று மணி நேரம் அதே சாலையில் உலாவி, அதே நபர் இயல்பான நிலையில் அதாவது காற்று மாசைத் தடுக்கும் அணிகலன் இல்லாமல் மாசுள்ள, புகை சூழ்ந்த சாலையில் மீண்டும் உடற்பயிற்சிகள் செய்கிறார்.

இப்பொழுது மீண்டும் அதே மருத்துவப் பரிசோதனைகள் எடுக்கப்பட்டது. பரிசோதனை என்ன சொல்லிற்றுத் தெரியுமா? இரத்த அழுத்தம் அதிகரித்துள்ளது, இரத்தத்தின் பிசுபிசுப்பு அதிகரித்துள்ளது. இதயத்தில் சிறுது அழுத்தம் அதிகரித்துள்ளது. அது மட்டுமல்ல காற்று மாசு இருக்கும் போது சிந்திக்கும் திறனில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் கூறுகின்றனர். அந்தக் காணொலி இங்கே *https://www.bbc.co.uk/iplayer/episode/b09m2djj/fighting-for-air*

சாலையில் வாகனங்களால் காற்றில் கலக்கும் மாசைக் கண்களால் பார்க்கும்போது கண்களுக்குப் புலப்படாது. காற்றில் உள்ள மாசை தனிவிதமான ஒரு கருவியை வைத்து லண்டன் மாணவர் ஒருவர் பார்க்கும் காணொலியை இங்கே காணலாம் *(http://www.bbc.co.uk/newsround/42601711)*.

சென்னை போன்ற மாநகரங்களுக்கு இப்படிப்பட்ட கருவிகூடத் தேவையில்லை. கண்ணாலேயே பார்க்கக் கூடிய அளவுக்கு மாசு அடர்த்தியை அடைகிறது. இது சொல்வதற்கு வேண்டுமானால் வேடிக்கையாக இருக்கலாம். இந்தக் காற்று மாசு ஒரு இனத்தின் சராசரி வயதை நேரடியாகவே பாதிக்கிறது. காற்று மாசு அதிகரிக்க அதிகரிக்க வாழும் வயதும் குறையும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். காற்று மாசு நுரையீரல் பாதிப்பு மற்றும் ஆஸ்துமா போன்ற வியாதிகளைக் கொண்டு வருவதே இதற்குக் காரணம். அது மட்டுமா காற்று மாசு இதயத்தையும் பாதிக்கச் செய்கிறது. உதவாதினி தாமதம். உடனே ஏந்த வேண்டும் அறிவாயுதம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
மாசற்ற காற்றே மானுடத் தேவை!





திருப்பூர் இராவணன், பல்லடம் வடிவேல்



# சந்தையூர் தீண்டாமைச் சுவர்

## தோழர் குருசாமியின் நேர்காணல்

என் பெயர் குருசாமி, சந்தையூர் அருந்ததியர் உறவின்முறை தலைவராக இருக்கிறேன். உறவின் முறை தலைவராக பத்து ஆண்டுகளாக இருக்கிறேன். அந்த இடங்கள் காமராஜர் ஆட்சியில் வழங்கப் பட்டது. ஏழு பட்டா பறையருக்கும் பதினான்கு பட்டா அருந்ததியருக்கும் வழங்கப்பட்டது. அரசு வழங்கிய இடம் ஒரு ஏக்கர் அறுபது செண்ட். ஒரு ஏக்கர் பத்து செண்ட் இடம் ஐந்து ஐந்து செண்ட் இடங்களாக பிரித்து வழங்கப்பட்டது. மீதம் அய்ம்பது செண்ட் பொதுப் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டது. அவர்கள் அய்ம்பது செண்ட் இடத்தை ஆக்கிரமித்து விட்டார்கள்.

இங்கே நாற்பது வீடு உள்ளன. அங்கே ஒரு இருபது வீடு உள்ளன. நாங்கள் சாமி கும்பிட அங்கேதான் செல்லவேண்டும். நாங்கள் சாமி கும்பிடச் செல்லும் போது அவர்கள் அய்ந்து அடி நிலத்தை விட்டுவிட்டு முள்வேலி அமைத்து விட்டார்கள். நாங்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாக இடம் விட்டு வேலி அமையுங்கள் என்று சொல்லுகிறோம். அவர்கள் மறுத்து விடுகிறார்கள். பட்டா நிலம் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் வி.ஏ.ஓ. அவர்களைச் சந்திக்கிறோம். சந்தித்து விட்டுத் தலைவர் ஜக்கையன் அவர்களைச் சந்திக் கிறோம். அவரிடம் விபரங்களை சொல்லுகின்றோம்.

தலைவர் ஜக்கையன் அவர்கள் கலெக்டர் அவர்களை சந்திக்கச் சொல்லுகிறார். தோழர்களை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லுகிறார். அதன்படியே கலெக்டரிடம் நான் மனு அளிக்கிறேன். அந்த மனுவில் எங்கள் குடியிருப்பு களைச் சுற்றி முள்வேலி அமைத்துத் தீண்டாமை செய்கிறார்கள் என்று கூறினோம். தலைவர் அவர்களும் எங்களுடன் வந்தார். அப்போது திரு. சகாயம் அவர்கள் கலெக்டராக இருக்கிறார். அவர் விசாரித்து விட்டு இருபத்திநான்கு மணி நேரத்தில் வேலியை இடித்துவிட உத்தரவு இடுகிறார். ஊர் நடுவே பொதுமக்களுக்கு இடையூறாகத் தீண்டா மையைக் கடைப்பிடிக்கும் முள்வேலி இருக்கக் கூடாது. உடனே அகற்ற வேண்டும் என்று கலெக்டர் உத்தரவு இடுகிறார். முள்வேலி அகற்றப்படுகிறது.

எங்கள் மக்கள் எல்லாமே வேலை வாய்ப் புக்காக கேரளாவுக்கு மற்றும் கோவைக்குச் செல்வோம். நாங்கள் வறுமையில் வாடுபவர்கள். அப்படி வேலைக்குச் சென்ற நேரத்தில் எங்கள் பகுதியைச் சேர்ந்த மூன்று பெரிய ஆட்களை வைத்து கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் தைரியமானவர்கள் அல்ல. கீழப்பட்டிக்குச் செல்லும் போது கையெழுத்து வாங்கி விடுகின்றனர். அதிலும் சுவர் கட்டிக் கொள்ளலாம் என்று எழுதவில்லை. அந்த இடத்தில் இலவசமாக இருந்து கொள்ளலாம்

என்றுதான் உள்ளது. எங்கள் மக்கள் இல்லாத போது சில ஏற்பாடுகளைச் செய்து சுவரைக் கட்டி விட்டார்கள்.

நமது பெண்கள் அந்தப்பக்கம் போனால் தூக்கிகிட்டுப் போயிருவேன் என்று மிரட்டுகிறார்கள். ஏன் சுவர் கட்டுகிறாய்? என்று கேட்டால், "நீ மாட்டுக்கறி தின்னுகிறாய், நீ குழி வெட்டுகிறாய், நீ செருப்புப் போட்டு வரக்கூடாது... எங்க கோவிலுக்குள்ள வரக்கூடாது..." என்று கூறுகிறார்கள்.

நாங்கள் "என்னாப்பா நீயும் நானும் ஒண்ணு அப்படின்னுட்டு இப்படிப் பேசுகிறாய், நீயும் மாட்டுக்கறிதான் திங்கிறாய்" என்று சொன்னால், "நீ சக்கிலியன் என்றால் சக்கிலியன்தான். நாங்க பறையர்லயும் பற அய்யராக இருக்கிறோம். அய்யர்ல பாதியாக இருக்கிறோம். அதனால் நீங்கள் வரக்கூடாது. செருப்பு போட்டு வரக்கூடாது. உங்கள் பெண்கள் வரக்கூடாது." என்கிறார்கள்.

ஒரு நாய் உள்ளே போனதற்கு அடித்து விட்டார்கள். சக்கிலிய நாய் வரக்கூடாது என்று. அப்படிப் பல தொந்தரவுகள் கொடுக்கிறார்கள். இந்தச் சுவரைப் புறம்போக்கில் கட்டிக்கிட்டு இவ்வளவு தொந்தரவு கொடுக்கும்போது நாங்கள் தலைவரிடம் சொன்னோம். தலைவர் பல முறை பேசினார். பேச்சுவார்த்தை ஒத்துவரவில்லை. எனவே கோர்ட்டில் வழக்குப் போடுகிறோம். வழக்கின் தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாக வருகிறது. நான்கு மாதத்தில் இடித்தாக வேணடும் என்று வழக்கு, தீர்ப்பு ஆகிறது.

தீர்ப்பைப் பெற்றுக் கொண்டு கலெக்டரைச் சந்திக்கிறோம். கலெக்டரிடம் மட்டும் ஆதித்தமிழர் கட்சி தலைவர் உள்பட அய்ந்து முறை போராட்டம் நடத்தியிருக்கிறோம். போராட்டம் நடத்தி கைதாகி உள்ளோம். கலெக்டர், ஆர்.டி.ஓ. தாசில்தார் என அனைவரையும் பார்த்தும் போராட்டம் நடத்தியும் ஒன்றும் ஆகவில்லை.

உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. பறையர் சமூகத்தைச் சார்ந்தவர். பேரையூர் டி.எஸ்.பி. பறையர் சமூகத்தைச் சார்ந்தவர். அதனால் அலட்சியப்படுத்துறாங்க. அலட்சியப் படுத்த படுத்த லேட் ஆகிறது. அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். பேரையூர் தாசில்தார் நாங்கள் பார்க்கும் போதல்லாம் 10 நாளில் எடுத்து விடுகிறோம், 5 நாளில் எடுத்து விடுகிறோம் என சாக்குப் போக்குச் சொன்னார். ஆர்.டி.ஓ அவர்களிடம் கேட்டால் கோர்ட்டு டைம் கொடுத்துருங்காங்க என்கிறார்.

என்னஙகம்மா டைம் கொடுத்தருங்காங்க? என்று கேட்டால், "இன்னும் இருபதுநாள் டைம் இருக்கு" என்கிறார்கள். இருபது நாள் கழித்துக் கேட்டால், "பொறுங்க, போலிஸ் இல்லை" என்று கூறுகின்றனர். நீங்கள் நினைத்தால் எத்தனை போலிஸ் வேண்டுமானாலும் குவிக்கலாம்மா என்று கூறினால், "கவர்னர் மீட்டிங் இருக்கு. மினிஸ்டர் வருகிறார். போலிஸ் இல்லை" எனக் கூறுகிறார். நான் அம்மா நீங்கள் நினைத்தால் முடியும் ஏன் இப்படி லேட் பண்றிங்க? எனக் கேட்கும் போது, "எனக்கு நேரம் கிடைக்கும் போதுதான் இடிக்க முடியும்" என்று சொல்லிட்டாங்க.

ஏன் இப்படி லேட் பண்றாங்க என்றால், பறையர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஸ்டே வாங்கட்டும். ஸ்டே வாங்குனா இடிக்க முடியாது. எனவே காலதாமதம் செய்கிறார்கள். நான் கலெக்டர் அவர்களை வீட்டில் சந்தித்துப் பேசும்போது தீண்டாமை இல்லைன்னு எப்படிச் சொல்லலாம் என்று கேட்டேன். ஆதாரம் என்ன என்று கலெக்டர் கேட்டார். நான் சொன்னேன், சுவற்றில் பி.ஆர். என்று எழுதியுள்ளார்கள் அப்படி எழுதினாலே தீண்டாமை தானே, நான் சக்கிலியர் என்று எழுதச் சொன்னால் எழுதுவார்களா எனக் கேட்டேன். தீண்டாமை இல்லை என்று எப்படி சொல்றீங்க என்று கலெக்டரிடம் கேட்டேன்.

**சுவரைத் தவிர வேறு என்ன வகையான தீண்டாமைகள் இங்கு உள்ளன?**

அவர்கள் தெருவில் நடக்கக் கூடாது, ஏனெனில் நாங்கள் மாட்டுக்கறி சாப்பிடுபவர்கள், குழி வெட்டுகிறவர்கள் அதனால் எங்கள் மேல் வீச்சம் வருகிறது எனவே நடக்கக் கூடாது. இரண்டு ஜாதிக்கும் பொதுவான இடமாக அரசு கொடுத்ததை அவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். அதை அரசு கைப்பற்றி பொதுப்பயன்பாட்டிற்கு தரவேண்டும். அங்கே உள்ள கோவிலில் எங்கள் மக்கள் சாமி கும்பிட முடியாது. எங்கள் அப்பா காலத்தில் எதுவும் கும்பிட்டார்களா எனத் தெரியாது. ஆனால் நாங்கள் கட்டிய பிள்ளையார் கோவிலில் யார் வேண்டுமானாலும் வணங்கலாம் எனக் கூறுகின்றோம். நான் 9 வது வார்டு மெம்பர். அரசு அங்கன்வாடி கட்ட அனுமதித்துள்ளது. இந்த இடத்தில் கட்டலாம் என்றால் முடியாது என மறுக்கின்றனர். இடம் தர முடியாது என்கின்றனர்.

**பறையர் கோவிலுக்கு பூசாரியாக சக்கிலியர் அய்ந்து பேரும், சக்கிலியர் கோவிலுக்கு பறையர் அய்ந்து பேரும் என பூசாரிகளை மாற்றி நியமிக்கலாம் என எவிடன்ஸ் கதிர் கூறகின்றனரே?**

எவிடன்ஸ் கதிர், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் கனியமுதன், தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் செல்லக்கண்ணு ஆகியோர் பேச்சு வார்த்தையில் ஈடுபடுகின்றனர். மூன்று சுற்றுப் பேச்சு வார்த்தை நடக்கிறது. எவிடன்ஸ் கதிரும், கனியமுதனும் சுவரைக் காப்பாற்றும் நோக்கில் பேசினார்கள். செல்லக்கண்ணுவும், தலைவர் ஜக்கையனும் இது தீண்டாமைச் சுவர்தான். இது எந்த விதத்திலும் இருக்கக்கூடாது. சுவரை எடுத்துவிட்டு மற்ற விபரங்கள் பேசலாம் எனக் கூறிவிட்டனர்.

பூசாரியாக நியமிக்கும் மனது இருந்தால் சுற்றுச் சுவர் கட்டியிருக்கவே மாட்டார்கள். எங்களைச் சாமி கும்பிட விட்டிருப்பார்கள். இது தீண்டாமைச் சுவர்தான் என்பதற்கு எங்களிடம் ஆதாரம் உள்ளது. எங்களை நடக்க விட மறுக்

கிறார்கள். நாங்கள் வந்தால் வீசுகிறது என்கிறார்கள். எங்கள் பெண்கள் வந்தால் தூக்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். பேரையூர் போலிஸ் ஸ்டேஷனில் வழக்கு உள்ளது. சென்ற ஆண்டு ஒரு வழக்கு ஆகி நடந்து கொண்டிருக்கிறது.

**சந்தையூரில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?**

மற்ற சமூதாயத்திற்கும் எங்களுக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை. எல்லோரும் ஒன்றாகப் பழகுகிறார்கள். ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு டீக்கடையில் இரண்டு கிளாஸ் முறை இருந்தது. இப்போது அனைவருக்கும் 'கப்' லதான் டீ, காபி கொடுக்குறாங்க. எல்லாரும் ஒன்றாகத்தான் டீ, காபி சாப்பிடுகிறோம்.

**அங்கன்வாடியில் தீண்டாமை உள்ளதாக அறிந்தோமே?**

அருந்ததியருக்கான இடஒதுக்கீட்டில் இரண்டு அருந்ததியப் பெண்கள் வேலையில் சேருகின்றனர். அவர்கள் சமைத்தால் நாங்கள் சாப்பிட மாட்டோம் எனப் பிரச்சனை செய் கிறார்கள். இது நூற்றுக்கு நூறு உண்மை. கலெக்டர், ஆர்.டி.ஓ, அங்கன்வாடி சூப்பர்வைசர் ஆகியோர் கவனத்திற்கும் போய்விட்டது. டீச்சரிடமும் சொல்லியாச்சு. அருந்ததியர் சமைத்தால் நாங்கள் சாப்பிட மாட்டோம் என சொல்கிறார்கள். வாடகையில் அங்கன்வாடி நடக்கிறது. பொது இடத்தில் கட்டலாம் என்றால் வர மறுக்கின்றனர்.

**சுவரை அகற்ற நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?**

மதுரையில் எவிடன்ஸ் கதிர் அலுவலகத்தில் மூன்று சுற்று பேச்சுவார்த்தை நடக்கிறது. எவிடன்ஸ் கதிர் அவர்கள் சுவர் இருந்தால் என்ன? என்று கேட்கிறார். சுவர் இருப்பதால்தானே தீண்டா மையைக் கடைப்பிடிக்கிறார்கள். செருப்புப் போட்டு வரக்கூடாது என்றும் பெண்களை அவ மதிக்கும் செயலும் நடக்கிறது எனவே அதை அகற்ற வேண்டும் என்று தோழர் செல்லக்கண்ணுவும், தலைவர் ஐக்கையனும் சொல்கின்றனர். பேச்சு வார்த்தை உடன்பாடு எட்டவில்லை. சுவரை இடிக்க முடியாது என்ற போது தோழர் செல்லக்கண்ணுவும், ஐக்கையனும் எழுந்து வந்துவிடுகிறார்கள்.

அதன்பிறகு கோர்ட்டுக்குப் போகிறோம். தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாக வருகிறது. அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் தீர்ப்பு அமுல்படுத்த முடியவில்லை. அதன்பிறகு தலைவர் ஐக்கையன் தலைமையில் சுவர் இடிக்கும் போராட்டம் என அறிவிக்கின்றோம். அப்போது தாசில்தார் வந்து என்னிடம் ஜனவரி 29 க்குள் சுவரை இடித்து விடுகிறோம் என்று கூறுகின்றார். 29 ஆம் தேதி இடிக்கவில்லை என்றால் நாங்களே 30 ஆம் தேதி நாங்கள் இடித்துவிடுவோம் என கூறுகின்றோம். ஆனால் 29 ஆம் தேதி வரவில்லை.

எனவே நாங்கள் ஆதித்தமிழர் கட்சி விருதுநகர் மாவட்டச் செயலாளர் விஸ்வக்குமார் தலைமையில் பட்டினிப் போராட்டம் நடத்து கிறோம். 29, 30 ஆம் தேதி வரை நடத்துகிறோம். எந்த அதிகாரியும் எங்களிடம் வரவில்லை. நாங்களாக இடித்தால் போலிஸ் வழக்கு போடும். அடிக்க வரும். மேலும் மேலப்பட்டி கிராமத்தில் பறையர் சமூக மக்கள் அதிகம். அங்கிருந்து 200க்கும் மேற்பட் டோரை இறக்கி உள்ளனர். அவர்கள் எங்களை மிரட்டுகின்றனர். போலிஸ் இருக்கு. ஆனாலும் மிரட்டப்படுகிறோம். எனவே நாங்கள் எங்கள் ரேஷன்கார்டுகளை வி.எ.ஓ.விடம் ஒப்படைத்து விட்டு வெளியேறிவிட்டோம்.

ஏனென்றால் கலெக்டர், ஆர்.டி.ஓ யாரும் சரியான பதில் தரவில்லை. எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. நாங்கள் அனைவரும் தேன்மலை யாண்டி கோவிலில் தஞ்சம் புகுந்தோம். அங்கு இரண்டு நாள் இருந்தோம். அதன் பிறகு இந்த கண்மாயில் இருக்கின்றோம். இங்கு வனவிலங்குகள் அதிகம், யானை, புலி எல்லாம் இருக்கிறது. விஷ வண்டுகள் என பல ஆபத்துக்கிடையே இருக்கின் றோம். ஏழாவது நாளாக இருக்கின்றோம். எங்கள் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு, காய்ச்சல் என பல நோய்கள் வருகிறது. எந்த ஒரு அதிகாரியும் வரவில்லை. எவ்வளவு துன்பம் வந்தாலும் சுவர் அகற்றப்படாமல் இங்கிருந்து ஊருக்குள் வர மாட்டோம். எவ்வளவு நாளானாலும் சுவரை இடிக்காமல் வரமாட்டோம்.

**தோழர் செல்லக்கண்ணுவை கைது செய்யச் சொல்லி சுவரொட்டி அடித்துள்ளனரே?**

தோழர் செல்லக்கண்ணு எங்கள் பிரச்சனைக்கு நியாயமாகக் குரல் கொடுத்ததால் "அருந்ததியர் மக்களுக்குத் துணை போகும் செல்லக் கண்ணுவை உடனே கைது செய்" என்று போஸ்டர் போடுகின்றனர். ஆனால் போலிஸ் நம்பவில்லை. ஏனெனில் அவர் மீது குற்றம் சொல்ல எந்த ஆதாரமும் இல்லை. தோழர் செல்லக்கண்ணுவும் என்னைக் கைது செய்தாலும் பரவாயில்லை என்று களத்திற்கு வருகின்றார். அவரும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி விருதுநகர் மாவட்டத் தலைவர் சாமுவேல் அவர்களும் வந்தனர். எங்களைப் பேட்டி கண்டனர். அதன் பிறகு இது தீண்டாமைச்சுவர் தான் என ஆதாரத்துடன் வெளியிட்டனர். அய்க்கோர்ட் சொல்லியும் ஏன் இடிக்கவில்லை இதைத்தான் எங்கள் தலைவரும், தோழர் செல்லக்கண்ணுவும் கேட்கின்றனர்.

**சுவர் கட்டுவதற்கு முன்பு ஒற்றுமையாக இருந்தீர்களா?**

முள்வேலி போட்டதிலிருந்தே பிரச்சனை தான். 7, 8 வருடங்களாக நடக்கிறது. எப்போதும் ஒன்றாக இருந்ததில்லை. எங்களைத் தீண்டாமை செய்கிறார்கள். எங்களைவிடக் குறைவான வீடுதான். நாங்கள் அதிகம்தான். ஆனாலும் தீண்டாமை செய்கின்றார்கள். அவர்கள் செய்த தொழிலை யெல்லாம் நாங்கள் செய்வதாகச் சொல்கிறார்கள். நாங்கள் அந்தத் தொழிலில் இல்லை. இந்த இடம் முள்வேலி போடுவதற்கு முன்பு அனைவரும் பயன்படுத்திய இடம்தான். அவர்கள் கூடை பின்னுவார்கள். நாங்க போய் உட்காருவோம்.

**சுவரைக் கட்டுவதற்கு முன்பு, அருந்ததியர் தரப்பிலும் சுவரைக் கட்டலாம் என்று ஒத்துக்கொண்டு, பத்திரத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்ததாகச் சொல்கிறார்களே?**

பத்து ரூபாய் பத்திரத்தில் கீழப்பட்டிக்குச் டீ சாப்பிடச் சென்ற மூன்று பேரிடம் மிரட்டி கையெழுத்து வாங்கிவிட்டனர். இரண்டு பேர் இருக்கின்றனர். ஒருவர் இறந்துவிட்டார். ஊர் மக்களிடம் கலந்து பேசவில்லை. அனைவரும் கேரளாவிற்கு வேலைக்குச் சென்றுவிட்டனர். மக்களிடம் கேட்கவில்லை. மூன்று பேரில் நானும் ஒருவன். கையெழுத்துப் போட்டால்தான் தப்பித்து வர முடியும். பணத்தைக் கொடுத்து வேறு ஜாதியினரையும் சேர்த்துக் கொண்டு எங்களைச் சுற்றி வளைத்தனர். வேறு வழியில்லாமல் கையெழுத்துப் போட்டோம். அதன்பிறகு, அவர்களாகவே பத்துப் பேரின் கையெழுத்தைப் போட்டுவிட்டனர். நான் கலெக்டரிடம் பேசும் போது இது கட்டப்பஞ்சாயத்துப் பத்திரம். இது செல்லாது எனக் கூறினேன்.

**இது இடப் பிரச்சனைதான். தீண்டாமைப் பிரச்சனை இல்லை என்று எவிடன்ஸ் கதிர் போன்றோர் கூறுகின்றனரே? அதாவது சுவருக்குள் இருக்கும் இடம்தான் பிரச்சனை என்று கூறகின்றனரே?**

இது இடப்பிரச்சனை இல்லை. தீண்டாமைப் பிரச்சனைதான். அந்தச் சுவர் கட்டப்பட்டதே தீண்டாமைக்காகத்தான் கட்டப்பட்டது. சுவருக்குள் நாங்கள் வரக்கூடாது என்பதுதான் பிரச்சனை. சுவர் கட்டுவதற்கு முன்பு நாங்கள் உள்ளே போகலாம். கட்டிய பின்புதான் போக முடியாது. கதிர் சொல்லுகிறபடி இடம்தான் பிரச்சனை என்றால் எங்களை உள்ளே விடலாம் அல்லவா?

நாங்கள் உள்ளே வரக்கூடாது என்பதற்காகத் தான் சுவர் கட்டப்பட்டுள்ளது. ரோட்டை மறித்து சிமென்ட் ரோட்டை இடித்து கட்டியுள்ளார்கள் பெண்கள் ஆண்கள் யாரும் உள்ளே வரக்கூடாது என்பதற்காகத்தான் சுவரே கட்டினோம் என்று எங்களிடமே சொல்லுகின்றனர்.

எவிடன்ஸ் கதிர் தலித் மக்களுக்கான பொதுத் தலைவராக இருந்தால் என்ன சொல்ல வேண்டும்? இந்தச் சுவரை இடியுங்கள். சக்கிலியரும் பறையரும் ஒன்றாகப் பயன்படுத்தட்டும். புழங்கட்டும் என்று சொல்ல வேண்டாமா? அப்படிச் சொல்லிவிட்டால் பிரச்சனை அன்றே முடிகிறது. இடத்தைச் சுற்றிச் சுவர் வைத்துக்கொண்டு எங்களை உள்ளே விடாமல் வைத்துக் கொண்டு இது இடப்பிரச்சனை, தீண்டாமைப் பிரச்சனை இல்லை என்பது தவறு. இடம் கவர்மெண்ட் கொடுத்தது. அருந்ததிய மக்கள் உள்ளே வரக்கூடாது என்பதற்குத்தான் சுவர். நான் இதைக் கதிரிடமே சொன்னேன்.


காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு::
எரிதழல்
பெரியார்செல்வி
அ.ப.சிவா
பூங்கொடி
இளையகுமார்
விமல்பிரகாஷ்
செந்தில்குமார்

ஆலோசனைக்குழு:
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
மே.கா.கிட்டு
செல்லையா முத்துச்சாமி

பொறுப்பாசிரியர்
சி.இராவணன்
97868 89325

உரிமை-ஆசிரியர், வெளியீட்டாளர்
சி.விஜயராகவன்
99762 56821

ஆண்டுச்சந்தா தொடர்பு:
கிருஷ்ணவேணி 77084 58086

நன்கொடை, ஆன்லைன் சந்தா:
குமரேசன் 99943 65133

சட்ட ஆலோசனை:
வழக்கறிஞர் அ.கிருஷ்ணக்குமார்

வடிவமைப்பு:
முகிழ் மீடியா 97873 20044

அச்சு:
செந்தூர் ப்ரிண்டர்ஸ், கோவை

தொடர்புக்கு:
kaattaaru2014@gmail.com

இணையதளம்
www.kaattaaru.com

உடுமலை கவிதா

# பாஞ்சாலைகளில் பாலியல் வன்கொடுமைகள்



பஞ்சாலைகளில் பெண்கள் சந்திக்கும் பாலியல் தொல்லைகள் தற்போது அதிகமாகவே உள்ளது. இந்தப் பிரச்சனைகளைத் தொடர்ந்து சந்தித்து வந்தாலும் அது பற்றிய விழிப்புணர்வு இன்னும் ஏற்படவில்லை என்றே நான் கருதுகிறேன்.

பெரிய பெரிய நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களே வழக்குக் கொடுக்கத் தயங்கும் போது பஞ்சாலைகளில் பணியாற்றுகிற பெண்கள் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து கல்வி அறிவு குறைந்தவர்கள் எப்படி வழக்குக் கொடுக்க முன்வருவார்கள்.

பஞ்சாலைகளில் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகும் பெண்கள் பற்றிய தரவுகளும் இதுவரை இல்லை. வெளியே கூற அஞ்சுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதையும் மீறி ஒரு பெண் புகார் அளிக்க முன்வந்தால், அந்தப் பெண்ணுக்கு மேலும் அவமானங்களையே தேடித்தருவதால் பஞ்சாலைகளில் பணியாற்றும் பெண்கள் தயங்குகிறார்கள். பஞ்சாலை நிர்வாகம் அதைக் கௌரவ பிரச்சனையாகவே பார்க்கிறது.

மேலும், பாதுகாப்பானச் சூழலில் பெண்கள் பணியாற்ற அடிப்படை உரிமை படைத்தவர்கள் என்பதன் மீதான அடியாக பாலியல் தொந்தரவுப் பிரச்சனைகளை எந்த நிர்வாகமும் அணுகுவதில்லை. பஞ்சாலைகளில் பெண்களைத் தொந்தரவு செய்பவர்களைக் குறிப்பாக, உயர் பதவியிருப்பவர்களை நிர்வாகங்கள் கண்டுகொள்வதில்லை.

மாறாக, புகார் அளிக்கும் பெண் தொழிலாளர்களுக்கு இரு மடங்கு வேலை கொடுப்பது, வேலை இருந்தாலும் அன்று வேலை இல்லை இன்று உனக்கு விடுமுறை என்று வீட்டிற்கு அனுப்புவது. இந்த வேலையை இவ்வளவு நேரமா செய்வது என்று அனைவரின் முன்பும் அவமானப்படுத்துவது. ஒரு வேலை செய்து கொண்டு இருக்கும்போது மற்றொரு வேலையைக் கொடுப்பது. அந்த வேலை முடியும் முன்பே வேறு வேலையைக் கொடுப்பது, அவர்களுக்கும் மேல் அதிகாரிகள் வருகையில் எந்த வேலையும் செய்யவில்லை என்று புகார் கூறுவது. உடல் நிலை சரியில்லாதபோது விடுமுறை கொடுக்க மறுப்பது. வேலையை விட்டுத் தூக்குவது போன்ற பணி ரீதியான தொந்தரவுகளை நிறையக் கொடுப்பது எனத் தொடர்ந்து நடப்பதால், ஒன்று அந்தப் பெண் மௌனமாக வேலை செய்கிறாள் அல்லது வேலையை ராஜினாமா செய்வார். இதுதான் நடக்கிறது.

எதிர்த்து யாரும் போராட முடியவில்லை. சமீபத்தில் ஒரு கருத்துக்கணிப்பு. பணியாற்றும் பெண்களில் 17% பேர் பாலியல் தொந்தரவுக்கு ஆளாவதாகக் கூறியுள்ளது. பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகும் பெண் தொழிலாளர்கள் புகார் அளிக்க வந்தால் அவர்களது மானம் காக்கப்படுவதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவேதான் பல விஷயங்கள் வெளியே வராமல் அமுக்கப்படுகிறது.

இதுபற்றி தினகரன் நாளேட்டில் வந்த செய்தி,

> “ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒரு மில்லில் உள்ள விடுதியில் 15 வயதுப் பெண்களுக்குப் பாலியல் கொடுமை நடந்துள்ளது. இதேபோல் பல மில் தொழிற்சாலைகளிலும், இதர வணிக நிறுவனங்களிலும் பணியாற்றும் பெண்களும் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாகி வருகிறார்கள். பணியிடத்தில் பாலியல் கொடுமை தொடர்பாக 18 வயது விசாகா வழக்கில், உச்சநீதிமன்றம் பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் தடுப்புச் சட்டத்தின்கீழ் மாநில அரசுகள் விதிமுறைகளை வகுக்க வேண்டும் என்றும் உத்தர விட்டுள்ளது.
> அதன் அடிப்படையில் பணியிடங்களில் பெண் களுக்கு எதிராகப் பாலியல் கொடுமை தொடர்பாக புகார் கொடுப்பதற்காக அந்த நிறுவனங்களிலேயே புகார் குழுவை அமைக்க வேண்டும். பணியிடத் திலேயே தரப்படும் பாலியல் புகார்களைப் பெறவும் விசாரிக்கவும் குழுக்கள் அமைக்கு மாறு அரசு உத்தரவிடவேண்டும் என்றும் மனுவில் கூறப் பட்டுள்ளது.”

இதன்படி பல அரசு நிறுவனங்களில் இது போல குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்தக் குழுக்களில் இடம்பெற்றவர்களே பெரும் பாலும் குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அரசு நிறுவனங்களின் நிலையே இப்படி இருக்கும் போது, தனியார் நிறுவனங்களில் உருவாக்கப்படும் ஆய்வுக்குழுக்களில் பெண்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்?

அந்தந்தப் பகுதியில் இயங்கும் முற்போக்கு இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள், காவல்துறை, வழக்கறிஞர்கள், பெண்ணிய இயக்கங்கள் இணைந்த குழுக்களை அரசு அங்கீகரித்து, ஒவ்வொரு மில்லிலும் இப்படிப்பட்ட குழுக்களை அமைத்தால், ஓரளவு நிலைமை சரியாகும்.

பொள்ளாச்சி விஜயராகவன்

# நூல் அறிமுகம்

திராவிடர் இனத்தின் மாபெரும் தலைவர் கலகக்காரர் தோழர் பெரியாரை தோழர் அண்ணா அவர்கள் 1935இல் திருப்பூரில் சந்தித்து அவருடன் இணைந்து தன் பொது வாழ்க்கையைத் தொடங்குகிறார்.

அதன்பின் தோழர் அண்ணா அவர்களின் கல்வி, பேச்சாற்றல், எழுத்தாற்றல் முழுமையாக கலகக்காரர் தோழர் பெரியாரின் கருத்துக்கள் திராவிடர் நாட்டின் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்து, சுயமரியாதை இயக்கத்தின் பக்கம் பெரும் திரளாக திரளச் செய்தது. அவர் எழுதிய நூல்கள் மற்றும் பேச்சுக்களின் நூல் வடிவாக எண்ணற்ற வைகள் வெளிவந்து இருந்தாலும் அவற்றில் மகுடமாய் அமைந்தது, 'தீ பரவட்டும்' என்ற தொகுப்பு நூலே ஆகும்.

இந்நூல் 09.02.1943 இல் சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில், பார்ப்பன வேதமதமான இந்து மதத்திற்கு வலுசேர்க்கும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களை ஏன் தீயிட்டு கொளுத்த வேண்டும்? என்ற பொருளில் 'தீ பரவட்டும்' நடந்த சொற்போரின் தொகுப்பே இந்நூல். கூட்டத்திற்கு இந்துமத பரிபாலன நிலையத் தலைவர் தோழர் சி.என்.இராமசந்திரன் செட்டியார், பி.ஏ.பி.எல். அவர்கள் தலைமை வகித்தார். தோழர் அண்ணா அவர்கள் தலைமையில், தோழர் ஈழத் தடிகளும் எதிர்த்தரப்பில் தோழர்கள் ஆர்.பி.சேதுப் பிள்ளை பி.ஏ.பி.எல்., அவர்களும் சீனிவாசன் அவர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினார்கள்.




இதன் இரண்டாம் கட்டச் சொற்போர் 14.03.48 மாலை 6 மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கப் பாடசாலை மண்டபத்தில், பெரும் திரளான பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது. கம்பராமாயணமும், பெரியபுராணமும் ஒழிக்கப்படவேண்டும் என்று திராவிடநாடு ஆசிரியர் தோழர் சி.என்.அண்ணாதுரை பேசினார். ஒழிக்கவேண்டாம் என்பது பற்றிப் பேராசிரியர் தோழர் எஸ்.சோமசுந்தர பாரதியார் சொற்பொழிவாற்றினார். சேலம் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் தோழர் ஏ.இராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விரண்டு சொற்பொழிவுகளும் ஒன்றாக 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் 1996 நவம்பர் மாதம் (முதற்பதிப்பு) திராவிடர் கழக வெளியீடாக வெளியானது. 'இவர்தான் அண்ணா...!' என்ற தலைப்பில் தோழர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் எழுதிய முன்னுரையோடு வெளி வந்துள்ளது.

இந்நூல் திராவிடர், ஆரியர் இனப் பண்பாட்டுத் தளத்தில் மிகப்பெரிய ஆய்வாக வந்த, இந்நூலின் முன்னுரையில்,

"தோழர் அண்ணாவின் சொற்பொழிவு கற்றோருக்கு அறிவு விருந்து ஆகின்றது. கல்லாத வருக்கும் பகுத்தறிவுத் தூண்டுகோல் ஆகின்றது. கருத்து வேறுபாடு உடையவர்களுக்கும் ஆராய்ச்சிச் சுடர் விளக்கு ஆகின்றது"

என்ற தோழர் அண்ணாவைக் குறித்த அவரின் மதிப்பீடு எவ்வளவு கருத்தாழம் மிக்கது என்பதை தோழர் அண்ணாவின், 'தீ பரவட்டும்' விளக்கும். 09.02.1943 சென்னை உரையில், தோழர் அண்ணா அவர்கள்,

"கலையை அழிக்கின்றனர், கம்பன் புகழை மறைக்கின்றனர் என்று கூறப்படும் பழிச்சொல்லை நாங்களறிவோம். கலையிலே தேர்ந்து, அதிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரியபுராணமும், கலை என்று கருதும் அன்பர்கள், ஒரு பெரியாரின் பேரால், ஓர் அண்ணாதுரையின் அனலால் அக்கலை அழிந்துவிடும் என்று கருதுவரேல் அவ்வளவு சாமான்யமானது கலையாகாது; அத்தகைய கலை இருத்தலுமாகாது என்றுரைக்க ஆசைப் படுகின்றேன். கலையைக் குலைக்கும் செயலல்ல எமது செயல். கலையிலே புரட்சி உண்டாக்க விழைகின்றோம். .தக்க காரணங்களோடு......!

மக்களிடம் இத்தகைய புராணங்கள் கற்பனை என்பது எடுத்துரைக்காது, அவர்கள் மனப்பாங்கைக் கெடுப்பதன் பலனாக, மக்களின் நிலை கெட்டுவிட்டது. திருமூலர் வேறோர் விஷயத்துக்காகக் கூறினார், "குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளாது; குருட்டுக் குருவைக் கொண்டு, குருடுங் குருடுங் குருட்டாட்டமாடிக் குருட்டில் வீழ்ந்தனர்"

என்றுரைத்தார். நமது மக்களின் நிலைமை அதுவாக இருப்பதை உணருங்கள் என்று அசைக்க முடியாத ஆதாரங்கள் மற்றும் தரவுகளுடன் தனது முதற்கட்ட உரையை நிறைவு செய்து இருப்பார்.

தோழர் சேதுப்பிள்ளை அவர்கள் தனது மறுப்புரையில்,

"கம்பனின் காலம், தமிழ்நாடு சீர்குலைந்திருந்த காலம். எனவே, அவர் மக்களுக்குப் பெருமையை உணர்த்த ஓர் நூல் இயற்றக் கருதினார். எல்லா மக்கட்கும் தெரிந்த

ஓர் கதையை எடுத்து, அதிலே தமிழ்நாட்டுக் கலைச் செல்வத்தை அமைத்தார்.

கம்பரின் கவியால், சீதை நமக்கு ஓர் தமிழ் மங்கையாகவே தென்படுவது காண்போம். இராமன் வில் முறித்துச் சீதையை மணந்தான் என்கிறார் வால்மீகி. கம்பனோ தமிழருக்கு காதல் மணத்தைக் கூறலே சிறப்புடைத்து என்று எண்ணினார். அவர்கள் கூறியது போல, அகப்பொருள் தோன்றிய நாடு தமிழ்நாடு. காதல் இன்றேல் சாதல் என்பதை நாட்டியநாடு இது. எனவே இராமனும் சீதையும் ஒருவரை கண்டு காதலித்தனர் என்று கூறுகிறார். "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்றார் கம்பர். கண்ணைக் கண் கௌவிற்று என்று கூறுகிறார். இங்கு நாம், தமிழ்நாட்டு மாண்பு காண்கிறோம்."

தோழர் அண்ணாவின் கருத்துக்கு வலு சேர்க்கும் வகையில் தோழர் ஈழத்தடிகள் தனது உரையில்,

"சேதுப்பிள்ளை அவர்கள் இப்பொழுது திராவிட மன்னனான இராவணனை ஓர் ஆரிய னாகக் கூறுவது, ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் பொருந்தாக் கூற்றே என்பது எனது கருத்தாகும். என்றாலும் இராவணனுக்கும் ஓர் ஆரியன்தான் என்று சொல்லப் படும் இப்போதைய கூற்றுக்கும், தோழர் சேதுப்பிள்ளை அவர்களோ, இன்னும் மற்றுமுள்ள புலவர் குழாங்களோ தக்க ஆதாரம் காட்டுவார்களானால், ஒரு தமிழ்ப்புலவனாகிய கம்பன் இரண்டு ஆரிய மன்னர் களின் கதையைப் பாடியது திராவிட மக்களை இன்னும் அதிகமாக இழிவுபடுத்தியதாகும் என்று மேலும் கம்பனைக் காய்ந்து, அத்தகைய கலப்பற்ற ஆரியக் கதையாகிய இராமாயணத்தை இவ்வளவு காலமும் கொளுத்தாமல் இருந்தது எங்களுடைய பெருந் தவறென்று கருதி, அதனை உடனே தீயிடும் வேலையைத் துரிதமாகச் செய்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், நெறிமுறைக்கு மாறுபடாத முறையில் நின்று அரசோச்சிய இராவணனுடைய நற்பண்புகளை அறிவுடைய உலகம் ஒருபோதும் மறுக்காது, மறக்கவும் மாட்டாது என்பதையும் ஈண்டு நினைவூட்டுகிறேன்."

தோழர் அண்ணா மற்றும் தோழர் ஈழத் தடிகள் ஆகியோரின் கருத்துக்களை மறுத்து சட்டக் கல்லூரி மாணவர்களில் ஒருவராகிய தோழர் சீனிவாசன் என்பவர் "ஆரியர்களுக்கும், திராவிட - ருக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே இரத்தக் கலப்பு ஏற்பட்டு விட்டதாகையால், இப்போது ஆரியர் திராவிடர் என்று பேசுவது முறையாகாதென்று பேசவே" கூட்டத்தில் இருந்தவர்கள், அவர் பேசுவது ஆதாரமற்ற கூற்றென்று கூறச் சிறிது கலவர முண்டாயிற்று. உடனே தோழர் சீனிவாசன் அவர்கள் தம்முடைய பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டார்.

இந்தச் சொற்போரின் முடிவுரையாகத் தோழர் அண்ணா அவர்கள், "ஆரியக் கற்பனைகளைத் தமிழ்க்கலை எனும் நகாசு வேலை செய்தது, தமிழருக்குக் கம்பன் செய்த கேடு என்பேன். கண்ணகியின் மாண்பைக் கம்பன் சீதையைத் தீட்டுவதிலே காண்கிறோம் என்கிறார். கண்ணகி குறித்த ஏடு இருக்க இது ஏன்? என்று கேட்கிறேன். அவர் என் உரையிலே குறித்த பல விஷயங்களை மறுத்துரைக்காது இராவணன் ஆரியன் என்று ஆதாரமற்ற சொல் கூறி வாதத்திலிருந்து தப்ப முயன்றது காண வருந்துகிறேன். மன்றத்தினர் இதனை உணர வேண்டுகிறேன்" என்று பேசினார்.

இந்நிகழ்விற்குத் தலைமை வகித்த தோழர் சி.எம்.இராமசந்திரன் செட்டியாரவர்கள் "விவாதத் திலே இருவரும் அழகுறப் பேசினர். இனியும் பேசுவர் என்று நம்புகிறேன். எனவே, பிறகே என் கருத்தைக்கூற விரும்புகிறேன். இப்போது இது குறித்து ஒன்றும் கூறவில்லை. விவாதம் மிக மேலான முறையில் இருந்தது கண்டு மகிழ்ந்தேன்" என்று பேசினார்.

14.03.1948 இல் சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்க பாடசாலை மண்டபத்தில் நடந்த இரண்டாம் கட்ட விவாதத்தில், தோழர் அண்ணா அவர்களின், முத்தாய்ப்பான "ஏன் கொளுத்த வேண்டும்?" என்ற பத்தியில் உள்ள வரிகளை ஊன்றிப் படியுங்கள்.

"தமிழருக்குத் தமிழ்நெறி தமிழ்முறை. ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடிய கலையாக இருத்தல் வேண்டுமேயொழிய, வேறோர் இனத்தைப் புகழ்வதும், அதற்கு ஆதிக்கமளித்த தமிழ்மக்கள் மனத்திலே தன்னம்பிக்கையற்றுப் போகும்படியும் தமது இனத்தைப் பற்றியே தாழ்வாகக் கருதிக்கொள்ளும் படியான நிலைமை உண்டாக்குவதுமான கதை, காவியம், இலக்கியமென்பவை களைக் கொளுத்த வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். தமிழர் என்று நான் கூறும்போது தமிழ்மொழி பேசுவோர் என்பவரை மட்டுமல்ல நான் குறிப்பது, தமிழ் இனத்தை என்பதை நினைவூட்டுகிறேன்."

திராவிடர் நாடாம் தமிழ்நாட்டில் சூழ்ந்து உள்ள பார்ப்பன வேத சனாதன மதமான இந்துமதப் பண்பாட்டு கூறுகளை திணிக்க முற்படும் இந்துத்துவா சக்திகளுக்கு எதிராக தோழர் அண்ணா அவர்களின் அறிவாயுதமான இந்தத் 'தீ பரவட்டும்' என்ற நூலைத் திராவிடர் இயக்கம், திராவிடர் அரசியல் கட்சிகள், பொதுவுடைமைக் கட்சிகள், முற்போக்கு இயக்கங்கள் ஆகியவற்றில் பணி யாற்றும் இளைய தோழர்கள், கற்று உணர்ந்து பரப்பிட முன்வரவேண்டும் என்பதே. "காட்டாறு" தொகுப்புக் குழுவின் எதிர்பார்ப்பு ஆகும்.

புத்தகத்தின் விலை ரூ: 30
கிடைக்கும் இடம்: திராவிடர் கழக வெளியீடு,
பெரியார் திடல், 50 ஈ.வெ.கி. சம்பத் சாலை,
சென்னை-600007

அதி அசுரன்



# இந்து மத அழிப்பே சமூகவிடுதலை!

இந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் நாள் ஒரு பொங்கல் விழாவில் கலந்துகொள்ள எனக்கு அழைப்பு வந்தது. பொதுவாக, அமைப்புகளில் பொறுப்பாளராகப் பணியாற்றிய காலங்களில்கூட பொங்கல்விழாமீது எனக்கு மாற்றுக்கருத்துத்தான் இருந்தது. தொடர்ந்து பல ஆண்டுகளாக, கிராமங்களோடு மட்டுமே தொடர்புடையவன் என்பதால் பொங்கல் விழாக்களின் போக்கை நேரடியாக அறிய முடிந்தது.

சேரியில் தனிப்பொங்கல்; ஊரில் தனிப் பொங்கல். சேரியில் தனி ஜல்லிக்கட்டு; ஊரில் தனி ஜல்லிக்கட்டு. சேரியிலும், ஊரிலும் சமையலறையில் பெண்கள் மட்டும்; ஜல்லிக்கட்டில் ஆண்கள் மட்டும். இவை தான் தமிழ்ப்பண்பாட்டு அடையாளங்கள், பாரம்பரியங்கள் என்றால் - இவற்றைத்தான் மீட்டெடுக்க வேண்டும் என்றால் நாங்கள் தமிழர்கள் அல்ல! இவை இந்துப் பண்பாடு என்றால் நாங்கள் இந்துக்கள் அல்ல! இல்லை, இல்லை; இவை திராவிடர் பண்பாடுகள்தான் என்றால் நாங்கள் திராவிடர்களும் அல்ல! இவற்றையெல்லாம் மாற்ற முயற்சிக்காமல், புத்தர் சிலைக்கு மெழுகுவர்த்திகளையும், ஊதுபத்திகளையும் ஏற்றிக் கொண்டு மட்டும் இருந்தால் நாங்கள் பௌத்தர்களும் அல்ல!

நல்ல நேரம் பார்த்து, பொங்கல் பொங்கி வழியும் திசையையும் பஞ்சாங்கப்படிச் சரிபார்த்து, பானையில் பச்சை ஓலையைக் கட்டி - மின்சார அடுப்புகளும், கேஸ் அடுப்புகளும் கண்டுபிடிக்கப் படாத காலத்தில் சமைக்கப் பயன்படுத்திய கருங்கல், செங்கல் அடுப்புகளைப் பயன்படுத்தி - அலுமினிய, பித்தளை, இரும்பு, காப்பர் பாட்டம் பாத்திரங்கள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் பயன்படுத்தப் பட்ட மண்பானைகளைப் பயன்படுத்தி - இந்துக் கடவுள்களின் முன் படைக்கப்படும் பொங்கல் எந்த வகையில் தமிழ்ப் பண்பாட்டு அடையாளமாகும்?

நல்ல நேரமும், பஞ்சாங்கமும் பார்ப்பது இந்துப் பண்பாடு. இந்தியா முழுவதும் வேட்டி, சேலை தான் உயர்ந்த ஆடையாக உள்ளது. சங்கராச்சாரிகள் 'தூய இந்துக்கள்' என்பதற்கு அடையாளமாகப் பரிந்துரைப்பது வேட்டி, சேலைகளையே. சமத்துவப் பொங்கல் என்று எவராவது நடத்தினாலும், அதிலும் சமைப்பது பெண் மட்டும் தானே? இந்து - இந்திய - ஆணாதிக்கப் பண்பாடாக மீண்டும் மாறியுள்ள பொங்கலைப் புறக்கணிப்போம்!

இதுதான் பொங்கலைப் பற்றிய எனது நிலை என்றாலும், எனக்கு அழைப்புவிடுக்கப்பட்ட பொங்கல் விழாவில், தோழர் அம்பேத்கரின் 'நான் ஓர் இந்துவாகச் சாகமாட்டேன்' என்ற புரட்சி கரமான நூலை அறிமுகப்படுத்திப் பேசவேண்டும் எனத் தோழர்கள் கூறியதால், விழாவுக்குச் சென்றேன்.

தருமபுரி மாவட்டம், அரூர் அருகே உள்ள 'கௌாப்பாறை' என்ற கிராமத்தில் தான் விழா. காதல் இளவரசனின் நத்தம்காலனி, நாய்க்கன் கொட்டாய்களுக்கு அருகில் உள்ள ஊர் அது. ஊரின் நுழைவாயிலில் அந்தத் தொகுதியின் எம்.பி யான டாக்டர் அன்புமணி, சந்தனக்கட்டை வீரப்பன் இருவருக்கும் மிகப்பெரிய கட் அவுட். ஊரே விழாக் கோலம் கொண்டிருந்தது. முழுக்க முழுக்க வன்னியர்களின் அடக்குமுறைகளும், ஆதிக்கமும் கொண்ட ஊர் எனப் புரிந்தது. அந்த இடத்தில் அம்பேத்கரின் நூல் அறிமுகம் என்று நினைத்து மிகவும் மகிழ்ந்தேன்.

சில நொடிகளில், விழாக்கூட்டத்தைக் கடந்து வண்டி சேரியை நோக்கிச் சென்றது. இது வன்னியர்களின் பொங்கல். நமது விழா சேரிப் பொங்கலாகத் தனியாக நடக்கும். அங்குதான் நூல் அறிமுகம் என்றார்கள். விழா நடந்தது. முடிந்தது. மீண்டும் என்னை அரூர் நகருக்கு வழியனுப்ப, எனது காரிலேயே ஒரு தோழர் உடன்வருகிறேன் என்றார். "வேண்டியதில்லை தோழர் வந்த வழிதானே? தெரியும்" என்றேன்.

"இல்லை தோழர் அவங்க ஏரியாவக் கடந்து போகணும்...ஏதாவது சிக்கல் ஆகிடக்கூடாது" எனக்கூறினார். சரி உள்ளூரைப் பற்றி அவர்களுக்குத் தான் தெரியும் என்று சம்மதித்தேன். வன்னியர்கள் பகுதிக்கு கார் சென்றது. 20 அடி அகலமுள்ள

பொதுப்பாதையில் நட்டநடுவே இரண்டு டூவீலர் களை நிறுத்தியிருந்தனர். அந்த வண்டிகளை அப்புறப்படுத்த, காரில் இருந்த கோவைத் தோழர்கள் இறங்க முயற்சித்தனர். அதற்குள் அந்த உள்ளூர்த் தோழர் பதட்டத்துடன், "வேண்டாம் தோழர்...பிரச்சனை ஆயிடும்...நாம் வேறு வழியாப் போய்விடலாம்" எனக்கூறி, பாதையே இல்லாத காட்டுவழியில் மெயின்ரோட்டுக்கு அழைத்துச் சென்றார்.

வன்னியர்கள் வாழும் பகுதியில் வீம்பாக, பொதுவழியை அடைத்துக்கொண்டு நிற்கும் இரு வண்டிகளை அப்புறப்படுத்தக்கூட அச்சப்படும் மனநிலையில் அங்குள்ள பறையர்கள் வாழ் கிறார்கள். ஊரைச்சுற்றி, வன்னியர்களின் கிராமங் களும், ஒரு கவுண்டர் கிராமமும் சூழ்ந்துள்ளது. ஓட நினைத்தால்கூட ஏதோ ஒரு பிற்படுத்தப்பட்டவரின் ஊருக்குள் தான் ஓடமுடியும் என்பது தான் நிலை. வன்னியர், கவுண்டர்களின் வயல்களை நம்பித்தான் கௌாப்பாறை சேரி மக்களின் வாழ்க்கை இருக்கிறது.

சேரிப்பகுதியில் நூலகம் இல்லை. மருத்துவ வசதி இல்லை. குடிநீர், மின்சார, கழிப்பிட வசதிகள் எதுவும் இல்லை. ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனிச் சுடுகாடு. கிடைக்கும் சொற்பக்கூலிக்காக, அந்த வன்கொடுமைக் காட்டில் வாழ்ந்துவருகிறார்கள்.

நாய்க்கன் கொட்டாய் தாக்குதல் போன்று நடந்து விடக்கூடாது என்ற அச்சம், தொழிலும் வாழ்வாதாரமும் முடங்கிவிடும் என்ற அச்சம். இவற்றின் காரணமாக, கௌாப்பாறைச் சேரி மக்கள், தினமும் ஆதிக்க நடவடிக்கைகளை நேரடியாகச் சந்தித்தாலும், அவற்றை மனதுக்குள் போட்டு அழுத்திக்கொண்டு, குமுறிக்கொண்டே வாழ்கிறார்கள். அங்கே தீண்டாமைச் சுவர்கள் இல்லை. முள்வேலி முகாம்கள் இல்லை. ஆனால், அந்த இரண்டையும் விடக் கொடுமையாக, மனதிலேயே, சிந்தனையிலேயே ஒரு அச்சத்தையும், தடையையும், வேலியையும் உருவாக்கி வைத் துள்ளது இந்துமதம்.

சேரியில் பலர் அச்சமான மனநிலையிலும், பலர் அடிமை மனநிலையிலும் வாழ்ந்துவரும் நிலையில், அதை எதிர்த்துக் களமாட வேண்டிய முற்போக்கு அமைப்புகள் எதுவும் அப்பகுதியில் இயங்கவில்லை. இன்னும் நுழையவே இல்லை. விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பு மட்டும் உள்ளது. அங்குள்ள இளைஞர்களிடம் இயக்குநர் பா.இரஞ்சித் குறித்து ஒரு நல்ல நம்பிக்கை நிலவுகிறது.

நான் சென்றிருந்த பொங்கல் விழாவுக்காகக் கௌாப்பாறை ஊரின் பேருந்து நிறுத்தத்தில், விளம்பரம் எழுதப்பட்டுள்ளது. அதில் தோழர் பெரியார், தோழர் அம்பேத்கர் இருவரது படங் களும் வரையப்பட்டிருந்தன. இருவரது ஓவியங் களையும் கரியைப் பூசி அழித்துவிட்டனர் அப்பகுதி வன்னியர்கள். ஆனால் விழா விளம்பரம் அப்படியே உள்ளது.

பெரியாரைப் பிற்படுத்தப்பட்டவர்களின் தலைவராகவும், காந்தி, நேரு போன்ற ஒரு பொதுத்தலைவராகவும் காட்ட முயற்சிக்கும் சில புதிய மேதைகள் கௌாப்பாறை போன்ற கிராமங்களுக்குச் சென்றுவர வேண்டும்.

கடந்த 2014 பாராளுமன்றத் தேர்தலில், சேரிப்பகுதியின் சில இளைஞர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளரான அன்புமணிக்கே வாக்களித்துள்ளனர். மிரட்டி வாக்களிக்க வைத்தார் களா எனத் தோழர்களிடம் கேட்டேன். இல்லை. இங்கிருக்கும் "எங்களுக்கான இயக்கங்கள்" என்று நாங்கள் நம்பிய அமைப்புகளைவிட எதிரியே பரவாயில்லை என முடிவுசெய்துதான் அன்பு மணிக்கு வாக்களித்தோம் மனம் நொந்து பேசினர்.

ஜாதி ஒழிப்புப் பேசிக் கொண்டிருக்கும் அமைப்புகளைவிட - தங்களது பக்கத்து ஊர் களையே கொளுத்திய வன்கொடுமைக்காரர் களுக்கே ஓட்டுப் போடலாம் என்று முடிவெடுக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஜாதி - தீண்டாமை ஒழிப்பு அமைப்புகள் இதைக் கவனத்தில் கொண்டு சுயவிமர்சனத்தோடு பணி யாற்ற வேண்டும்.

அன்று அந்த ஊரில் அய்ந்து இடங்களில் பொங்கல் விழாக்கள் நடந்தன. வன்னியர் பொங்கல், பறையர் பொங்கல், சக்கிலியர் பொங்கல், மலைவாழ் மக்களில் உள்ள இரண்டு ஜாதியினருக்கும் தனித்தனியாகப் பொங்கல். 5 ஜாதிகளுக்கு 5 பொங்கல் விழாக்கள். அங்குள்ள மலைவாழ் மக்கள் பிற்படுத்தப்பட்டவர்களைவிட ஜாதி ஆதிக்கச் சிந்தனையில் வாழ்கின்றனர்.

சக்கிலியர்களின் நிலைதான் அங்கே மிகவும் கொடுமையானது. வன்னியர்களுக்கு எதிராகப் பறையர்களோடு ஒன்றிணைந்து போராடும் நிலை அங்கு உருவாக வாய்ப்பில்லை. அதுகூட நமது பேராசை என்று வைத்துக்கொள்வோம். பறையர் களோடு இணைந்து ஒரு விழாவைக்கூடக் கொண்டாட முடியவில்லை என்பது தான் இந்து மதப் பிரிவினைவாதத்தை நமக்கு முகத்தில் அறைந்து புரியவைக்கிறது.

பட்டியலின மக்களும் உட்ஜாதிகளை மறந்து இணைந்து பொங்கல் கொண்டாட முடியவில்லை. பிற்படுத்தப்பட்ட மக்களும் உட்ஜாதிகளை மறந்து இணைந்து விழாக் கொண்டாடமுடியவில்லை. இந்த நிலைதான் இந்து மதத்தின் ஆதிக்க வாதிகளான பார்ப்பனர்களின் திட்டமிடப்பட்ட - நிறுவனப் படுத்தப்பட்ட சுரண்டல் இயந்திரம். சுரண்டல் அமைப்பு. எனவே,

**முதன்மைக் காரியமாக, இந்து மதத்தைத் தகர்க்காமல் வேறு எந்த ஆதிக்கத்தையும் தனியாக, எதிர்த்துப் போராடி வென்றுவிட முடியாது. சாதி ஒழிப்பே சமூக விடுதலை என்பதற்கு மாற்றாக, "இந்து மத அழிப்பே சமூகவிடுதலை" என்ற முழக்கத்தை முன்னெடுப்போம்.**

அரசூர் அ.ப.சிவா

# நாலு பேரு நாலு விதமா பேசியது



**ஆண்டாள் பாடல்களோடு காதலர் நாள்**

திண்ணையில் அமர்ந்தபடி ஆண்டாள் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த போது வந்து சேர்ந்தார்கள் கொங்கு குலச் சிங்கமும், சமூக சேவகனும். போதாக்குறைக்கு கலாச்சாரக் காவலனும் உடன் வந்தான். சேலத்துக்காரர் சப்ளை செஞ்ச தேனி மிக்சரோடு அரட்டை ஆரம்பித்தது. நான் ஆண்டாள் பாடலை நிறுத்திய போது பாப்பா வந்து வைரமுத்து பாடலை போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தபோதே கடுப்பாகி விட்டான் கலச்சாராக் காவலன்.

ஒரண்டை இழுக்க ஒராயிரம் விசயங்கள் இருந்தாலும் பேச்சு காதலர் தினத்தை நோக்கித் திரும்பியது. பிப்ரவரி தொடங்கிடுச்சு... இவனுக ஆரம்பிச்சுக்குவானுங்க... என்றான் கலச்சாராக் காவலன். எதுக்கு நாய்க்குத் தாலி கட்டறதுக்கா என்றேன்.. நாய்கள் மாதிரித் திரியறதுகளைக் கட்டுப்படுத்த வேற என்ன செய்வது? அதனால் தானே அந்த மாதிரி செய்றோம்... அவிங்கெல்லாம் மனிதர்கள் மாதிரி தான் திரியிறாங்க... வடக்கே காசிப்பக்கம் போய்ப் பாரு அங்கதான் ஒட்டுத்துணி கூட இல்லாமல் நாய் மாதிரித் திரியிறாங்க முதல்ல அவனுகளுக்கு ஒரு மீட்டர் கோவணத்துணி வாங்கிக் கொடுங்க..

ஆயிரம் சொல்லுங்க...இந்தக் காதலர் நாள் எல்லாம் கலாச்சாரத்தைச் சீரழிக்கிற சமாச்சாரம் என்றான் கொ.கு.சி. என்னடா உங்க கலாச்சாரம் சீரழியுது என்றேன். பின்ன இல்லியா? காதல்ங்கற பேரில் கண்ட ஜாதிப் பசங்க கூடச் சேர்ந்து திரியறாங்க..

அப்ப உங்க பிரச்சனை ஜாதி மாறி காதலிச்சு திருமணம் செய்வதுதான் இல்லியா? என்றபடி என் அடுத்த கேள்வியைத் தொடர்ந்தேன். போன வாரம் நாலு நாளா ஊரில் இல்லியே எங்க போன? வேறெங்க பழனிக்குப் பாதயாத்திரை தான் போனேன் என்றான் கொ.கு.சி. முருகன் வள்ளியைக் காதலிச்சுத்தானே கலியாணம் செஞ்சாரு.. காதலிச்சுக் கலப்புத் திருமணம் செஞ்ச சாமியைக் கும்புடிறீங்க, ஆனால் உங்க வீட்டுப் பொண்ணுங்க காதலிச்சா மட்டும் தப்பு இதென்னடா நியாயம்.

அது சாமியெல்லாம் அப்படிச் செய்யலாம்... நாம செய்யக் கூடாது என்றபடி சமாளித்தான். ஆனா ஆயிரம் இருந்தாலும் இந்தப் பழனி பாதயாத்திரை சமாச்சாரம் வருட வருடம் தொடரணும். அட இதபாருடா நாத்திகனுக்கு ஆத்திகம் வளர்றதுல்ல இருக்கற ஆர்வத்த என்ற கொ.கு.சிங்கத்தைப் பார்த்துத் திருப்பிச் சொன்னேன்.. ஆத்திகம் வளருதோ இல்லையோ ஐம்பது பேரு போற கூட்டத்தில் முருகனையும் வள்ளியையும் உண்மையா வேண்டிட்டுத் தனியாப் போயிட்டு ஜோடியாத் திரும்பி வர்ற அந்த இரண்டு பேருக்குக் காகவே நாங்க ஆதரிக்கிறோம்.

ஆனாப் பாருங்க, இந்தக் காதலர் நாள் மாதிரியான கொண்டாட்டங்கள் மேற்கத்திய நாடு களிலிருந்து இறக்குமதியானவை இதெல்லாம் நுகர்வுக் கலாச்சாரம், நம்ம மண்ணுக்கேற்ற விழா இதுவல்ல என்று பொங்கினான் சமூக சேவகன்.

அட நீ வேற இருக்கறியா, அத மறந்துட்டேன்.. காதலர் நாள் இல்ல காதலே நுகர்வு தான் அது உன்னை மாதிரி ஆளுகளுக்குப் புரியாது தம்பி.. ஒரு டைம் மிசின் இருந்தா சங்க காலத்தில் உடன்போக்கு போன உன் முப்பாட்டன், பாட்டிக்கிட்ட போய்ச் சொல்லு... காதலர் நாள் பற்றி இதெல்லாம் நம்ம சமாச்சாரம்டா பேராண்டின்னு சொல்லுவாங்க.. உங்களுக்கெல்லம் பிரச்சனை காதலால் ஏற்படுகிற ஜாதி கடந்த காதல் திருமணங்கள் தான்... அதை நேரடியாகத் தமிழ்நாட்டுச் சூழலில் சொல்ல முடியாததாலே இப்படி முற்போக்கு முகமூடி போட்டுக்கறீங்க அவ்வளவுதான் சமாச்சாரம்.

சங்கத்தைக் கலைக்கிற நேரமாச்சு... அப்பப் பார்த்துக் கலைக்குழு நாராயணன் கிட்ட இருந்து போன். அப்பறங்க.... இந்தக் காதலர் நாளுக்கு என்னங்க ஸ்பெஷல்? என்றவரிடம்.. வேறென்ன.. இந்தக் காதலர் நாளை ஆண்டாள் பாடல்களோடுக் கொண்டாடுவோம்

## கோவிலும் பக்தியும்

திராவிடக் கட்சிகள் நாட்டைக் கெடுத்தது பத்தாதுன்னு இப்பக் கோவிலையும் கெடுக்கறாங்க.. தெய்வத்தை நிஞ்சித்தா கோவிலெல்லாம் பத்திட்டு எரியுது என்றபடி பழனி பஞ்சாமிருதமும் கையுமாக வந்தான் பச்ச வேட்டி பாலமுருகன்.. என்னடா.. நடைப் பயணமெல்லாம் எப்படி முடிஞ்சது என்றேன்.. ம்... அதெல்லாம் நல்லாத்தான் முடிஞ்சது..

சரி நம்ம பெருமாள் பொண்டாட்டியை அந்த முத்துப் பய எதோ சொல்லிட்டனாம் விசயம் தெரியுமா? உனக்கு விசயம் தெரியுமா என்றேன்.. இல்லயே எனக்குத் தெரியாதே, நான் பழனி போயிட்டேனே.. சரி அதுக்குப் பெருமாள் என்ன செஞ்சான்? என ஆர்வமாய்க் கேட்டான் ப.வே. பாலமுருகன்.. பெருமாளுக்குக் கோபம் வந்து வீட்டை எரிச்சுட்டான்.. யார் வீட்டை முத்து வீட்டையா? இல்ல முருகா பெருமாள் அவன் வீட்டையே எரிச்சுட்டான் என்றேன்..

சரியான லூசுப்பயலா இருப்பான் போல..என்றான் ப.வே.பாலமுருகன்.. ஏன்னடா முருகா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் தெய்வத்தை நிஞ்சித்தா கோவிலெல்லாம் பத்திட்டு எரியுது.. அப்படின்னு சொன்ன இப்ப அதேமாதிரி செஞ்ச நம்ம பெருமாளை லூசுப்பயன்னு சொல்ற.. என்னவோ போடா முருகா... தெய்வத்தை நிஞ்சித்தா, தெய்வம் என்ன செய்யணும்? நிஞ்சித்தவனை ஏதாவது செய்யணும் அதை விட்டுட்டுக் கோவிலை எரிச்சா அது என்னடா தெயவம்..

அதெல்லாம் இல்லை...திராவிடக் கட்சிகளின் இந்து சமய அறநிலையத்துறை தான் இதுக்குக் காரணம்... தெய்வ பக்தி உள்ளவங்கக் கிட்ட கோவில் நிர்வாகத்தைக் கொடுத்தா.. அவா சரியா நிர்வாகம் செய்வா... இதுதான் சரி என்றான் ப.வே.பாலமுருகன்..

ம்ம்.. சரியா உங்களை நல்லாத்தான் பாப்பானுக மூளைச்சலவை செஞ்சிருக்காங்க....என்றவனிடம் இந்தக் கருப்புச் சட்டைக்காரனுகளுக்கு எப்பப் பார்த்தாலும் அய்யமாருகளைத் திட்டறதே வேலையாப் போச்சு.. நான் சொன்னது கடவுள் பக்தியுள்ள என்னை மாதிரி ஆளுககிட்டக் கொடுத்தா கோவில் நிர்வாகம் சீரா இருக்கும்...

சரிடா.. முருகா பழனிக்கு நடந்து போறயே... எத்தன வருசமா போற.. என்றேன். உள்ளூர்க்காரன் உனக்குத் தெரியாதா 15 வருசமாப் போறேன் நம்ம கோவில் தர்மகர்த்தா தான் கூட்டிட்டுப் போயிப் பழக்குனாறே....சரி அவரு வீட்டில் பல பிரச்சனைகள் இருக்கே ஊருக்குள்ள என்ன பேசிக்கறாங்க தெரியுமா? என்றேன்.. தெரியலை என்று முருகன் சமாளித்த போது முருகன் அம்மா வந்துவிட்டார்.. அவரிடம் கேட்டேன்.. ஏம்மா.. இந்தத் தர்மகர்த்தா வீட்டில் ஏன் இவ்வளவு பிரச்சனை? உடனடியாகப் பதில் வந்தது. இது தெரியாதா கண்ணு.. "சிவன் சொத்து குல நாசம்" திரும்பி முருகனைப் பார்த்தேன் ஆளைக் காணோம்

## இந்து மேட்ரிமோனி

இந்த வருடம் இத்தனை கலப்புத் திருமணம் நடத்தி வச்சிருக்கோம் என முகநூலில் பதிவு போடுகிற தோழர்களுக்கு சரியான போட்டி... இனி தமிழகத்தில் ஜாதி மறுப்புத் திருமணங்கள் அதிகமாகும், சுலபமாகும். காதலர்கள் தங்கள் காதலைத் திக்கித் திணறிப் பயந்து பயந்து வீட்டில் சொல்ல வேண்டியதில்லை..

நீங்க செய்ய வேண்டியது ஒன்னே ஒன்னு மட்டும்தான் காதலர் நாள் அன்னிக்கு இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத் அவர்கள் கண்ணில் படுகிற மாதிரி மட்டும் போனீங்கினாப் போதும். அவரே உங்களுக்கு ஜாதி பார்க்காம, ஜாதகப் பொருத்தம், நல்ல நேரம் பார்க்காம, பார்ப்பானைக் கூப்பிடாம உடனடியாத் திருமணம் செஞ்சு வைச்சுடுவாரு, அப்பறம் ஒரு பய உங்களை ஒண்ணும் செய்யமுடியாது உடுமலையில் சங்கரை நடு ரோட்டில் வச்சு வெட்டிய மாதிரி யாரும் உங்களை வெட்ட முடியாது..

திடீரென்று போனில் வந்தார் பொள்ளாச்சியிலிருந்து ஓனர்.. ஆமா இந்த சர்வீசுக்கு என்ன பெயர் தம்பி என்றார்..

அவிங்க எதும் வைக்கலைங்கண்ணா.. நம்ம வேணா பெயர் வைக்கலாம் இந்து மேட்ரிமோனி சரி விடுங்க தம்பி எங்க ஊர்ல கூட நாய்க்கு ஊசி போட்டுட்டு இருந்த வெட்னெரி டாக்டர் ஒருத்தரு இப்பத் திடீரென மனுசனுகளுக்கு ஊசி போட ஆரம்பிச்சுட்டாரு.. அதே மாதிரி நாய்க்குத் தாலி கட்டிட்டுத் திரிஞ்ச பசங்க இப்ப மனுசனுக்குத் தாலி கட்டச் சொல்றாங்க ஏதோ நல்லது நடந்தாச் சரி என்றார்.

அப்புறம் தம்பி, அந்த அர்ஜூன் சம்பத்துக் கிட்டச் சொல்லுங்க.. எனக்குத் தெரிஞ்ச பெண்ணொருத்தி ஒருத்தரைக் காதலிச்சு உருகி, உருகிப் பாட்டா பாடித் திரியறாங்க. அவிங்க இரண்டு பேருக்கும் முதல்ல கலியாணம் செஞ்சு வைக்க சொல்லுங்க என்றார்..

அண்ணன் செல்வேந்திரன் செட் என்பதை நினைவில் கொள்ளாமல், யாருண்ணே அந்தப் பெண் எனத் தெரியாமல் கேட்டு விட்டேன்.. அதிரடியாகப் பதில் வந்தது வேற யாரு ஆண்டாள் தான்...

## ஆண்டாள்களல்ல நாங்கள்

அரசூர் அ.ப.சிவா



விருப்பமில்லாமல்
பள்ளி சேர்த்தீர்க என்று..
அறியா வயது தெரியாதென..

விருப்பமில்லாமல்
பள்ளியறை சேர்க்கிறீர்க என்று..
அறியா வயது தெரியாதென..

பள்ளியில் பாடத்தை மட்டுமல்ல
பகுத்தறிவும் பயின்றிருக்கிறோம்..
பாட்டு மட்டும் பாடிக்கொண்டிருக்கும்
ஆண்டாள்களல்ல நாங்கள்

**விமல்பிரகாஷ்,**
கோவை அரசு கலைக்கல்லூரி



# கிழக்கையும் மேற்கையும் இணைத்த சூரியன்

தலைவன் - தளபதி, சமுதாயத் தலைவன் - அரசியல் தலைவன் என ஒன்றுக்கொன்று நெருங்கிய நிலைகளில் தத்தம் இயல்பை மாற்றிக் கொள்ளாமல் இயங்கியவர்கள் தோழர் பெரியாரும், தோழர் அண்ணாவும். தந்தை - மகன் என்ற உறவு நிலை அளவிலும் அவர்களது நெருக்கமும், முரண்களும் இருந்தன. தனக்குப்பிறகு இயக்கத்தையும், சொத்துக் களையும் காப்பாற்றுவார் என்ற அளவுக்குப் பெரியாரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தவர்தான் தோழர் அண்ணா.

ஆனால், கொள்கைரீதியாக முரண்பட்டு, தி.மு.க என்ற அரசியல் பயணம் தொடங்கப்பட்ட பிறகு, பெரியாரால் மிகக்கடுமையாக விமர்சிக்கப் பட்டார். தி.மு.கவையும், அண்ணாவையும் இன்று வரை வேறு எவரும் அவ்வளவு கடுமையாக விமர்சிக்கவே இல்லை என்ற அளவுக்குக் கடும் எதிர்ப்பைக் காட்டியவர் பெரியார்.

அரசியல் பயணத்தில், தமிழ்நாட்டு ஆட்சிபீடத்தைத் தி.மு.க பிடித்தபின், அண்ணாவின் அமைச்சரவை, பார்ப்பனரல்லாத அமைச்சர வையாக அறிவிக்கப்பட்டது. பெரியாருக்குப் பெரும் மகிழ்ச்சி. அந்த ஆட்சியே பெரியாருக்குச் சமர்ப் பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அண்ணாவின் இறப்புவரை பெரியார் அண்ணாவை முழுமையாக ஆதரித்துப் பல சமூகநீதிச் சட்டங்கள் வருவதற்குக் காரணமாக இருந்தார். இரு தலைவர்களின் இணைந்த செயல்பாடுகளும், எதிர் எதிர்ச் செயல் பாடுகளும் இக்கால இளம் தலைமுறையினருக்கு மிகவும் அவசியமான பாடங்களாகும்.

**முரண்**

அண்ணா பெரியாரிடம் இருந்து பிரிந்து செல்லக் காரணம் பெரியார் மணியம்மையாரைத் திருமணம் செய்ததே என்று கூறப்படுகின்றது. ஆனால் காரணம் அதுவன்று. அண்ணா ஆரம்ப காலத்தில் இருந்து பெரியாரிடமிருந்து முரண் பட்டே வந்தார். இதை அண்ணாவே பின்வருமாறு கூறகிறார்.

இராயபுரம் இராபின்சன் பூங்காவில் 17.9.1949 அன்று மாலை நடைபெற்ற தி.மு.க.வின் தொடக்க விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா பேசிய கருத்து கவனத்தில் கொள்ளத்தககது:

> "பெரியாரோடு நான் மாறுபட்ட கருத்துடையவன் என்று கூறப்படுகிறது. சிற்சில விசயங்களிலே, நான் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும், நெடுநாள் களாகவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும் அவைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. முடிந்த அளவு ஒத்துழைத்தே வந்திருக்கிறேன். முடியாத நேரத்தில் மிகமிகக் கண்ணியமாக ஒதுங்கியே இருந்திருக்கிறேன். பெரியார் காலம் வரை அவர் வழிப்படியே கழகம் நடக்கும். பிறகு பார்த்துக் கொள்வோம் என்ற போக்கைக் கொண்டிருந்தவன்."

- (டி.எம். பார்த்தசாரதி, தி.மு.க. வரலாறு, பாரதி பதிப்பகம், சென்னை, (1961) 1998, பக்.118)

தோழர் பெரியார் வெகுமக்களுக்கு விடுதலைக்குத் தேவையானதைப் பேசினார். தோழர் அண்ணா வெகுமக்கள் விரும்புவதைப் பேச விரும்பினார். இதை 1947 இந்திய விடுதலை தெளிவுபடுத்துகிறது. இந்தியா சுதந்திரம் பெற்றதை

அடுத்து பெரியார் 'ஆகஸ்ட் 15 துக்கநாள்' என்று அறிக்கை விடுகிறார் அதை மறுத்து அண்ணா 'ஆகஸ்ட் 15 இன்பநாள்' என்று பெரியாரின் அறிக்கைக்கு எதிராக அறிக்கை விடுகிறார். இது பெரியாருக்கும் அண்ணாவிற்கும் இடையில் மேலும் பிளவை அதிகப்படுத்தியது. பெரியார் சுதந்திர தினத்தை "பிரிட்டிஷ் - பனியா - பார்ப்பனர் ஒப்பந்த நாள்" என்று கூறகிறார்.

"வடநாட்டுக்காரர்களுக்கு இன்னும் அதிகமாக நம் மாகாணத்தின் பொருளாதாரத்தைச் சுரண்ட அதிகாரம் இந்த சுயராஜ்யத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிறதற்கு, அவர்களுக்குக் கொண்டாட்டம் ஏற்படலாமே தவிர, மானமுள்ள திராவிடன் இனி திண்டாட வேண்டித் தானே இருக்கப் போகிறது?"

- (எஸ்.வி. ராஜதுரை ,ஆகஸ்ட் 15 துக்கநாள்)

மக்களின் நலனுக்கு எதிராக இந்திய விடுதலை அமையும் என்று இந்திய விடுதலையைப் பெரியார் எதிர்த்தார். ஆனால் அண்ணா இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதுவரை வெளிப்படை யாக எந்த எதிர்க் கருத்தும் தெரிவிக்காத அண்ணா முதன்முறையாக எதிர்க்கருத்தை முன் வைக்கிறார்.

**அண்ணா சுதந்திர தினத்தை ஆதரிக்கும் காரணத்தைக் கூறகிறார்.**

"நாம் மட்டுமல்ல, வேறு சிலரும் கூட, ஆகஸ்டு 15 ஆம் தேதியைத் துக்கநாளாகக் கொண்டாடு கின்றனர் என்று கூறுவது, நியாயமாகாது. நாம், ஆகஸ்ட் 15 ஆம் தேதி, ஒதுங்கி இருப்பது, அல்லது, துக்க நாளாகக் கருதுவது என்ற போக்கு, எந்நாட்டிலேயும் துணைக் கண்டத்தி லேயும் மட்டுமல்ல, உலகிலேயே, நம்மைப்பற்றித் தவறான கருத்து கொள்ள, நாமாகவே, இடமளிப்பதாக வந்து சேரும். சுதந்திர தின விழாவை அசல் காங்கிரஸ் விழாவாக மாறும்படி, நாமே செய்தவர்களாவோம் – அந்த விழாவுக்கு, பாத்யதை கொள்ளக் கூடியவர்கள் காங்கிரசாரே, என்று நாமே அவர்களுக்குப் பட்டயம் தருவதாகவே முடியும் – அந்த நாளோ உண்மையில், எந்த துணைக்கண்டத்தினர் அனைவருக்கும், விடுதலை. விரும்பிகள் அனைவருக்கும், மகிழ்ச்சி தரும் நாள்."

- அண்ணாதுரை (திராவிடநாடு - 10.08.47)

இவ்வரிகள் மூலம், அண்ணா மக்கள் ஆதரவைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. மேலும், இந்த அறிக்கையானது அண்ணாவின் அரசியல் நோக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. அறிக்கையின் முடிவில் அண்ணாவே கூறகிறார்.

"தலைவரும் கட்சியும் என் போக்கு தவறு என்று கருதி என்னைக் கட்சியை விட்டு நீக்கினாலும் நான் சமூகச் சீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிடத் தனிஅரசு எனும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன் என்பதைக் கூறி இந்த அறிக்கையை முடிக்கிறேன்.''

என்றார். ஆனால் பெரியாரோ, அண்ணா மீது எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அண்ணாவும் பொதுச்செயலாளர் பதவியில் நீடித்தே வந்தார். 1948 மார்ச் மாதம் சென்னை மாகாண அரசு இந்தியைக் கட்டாயமாக்கிது. இந்தி எதிர்ப்பு மீண்டும் அண்ணாவையும் பெரியாரையும் நெருங்க வைத்தது. இந்த நெருக்கத்தை மக்களுக்கும், கழகத்தோழர்களுக்கும் எடுத்துக் காட்டும் வகையில் ஈரோட்டில் திராவிடர் கழகம் சார்பில் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் அண்ணா வையே தலைமைத் தாங்கச் செய்தார் பெரியார். அண்ணாவை மட்டும் நடுநாயகமாக சாரட் வண்டியில் நிற்கவைத்து, தள்ளாத வயதிலும் தரையில் நடந்து வந்து, தொண்டர்களை ஆச்சரியப் படுத்தினார் பெரியார்.

அம் மாநாட்டில் பேசிய பெரியார், "எனக்கு வயது 70 ஐத் தாண்டிவிட்டது. எனவே பெட்டியின் சாவியை அண்ணாவிடம் ஒப்படைக்கிறேன்"என்று கூறினார். அண்ணா பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும் என்று வேண்டுகோளும் விடுத்தார். இருந்தாலும் இந்த உறவு நீடிக்கவில்லை. அண்ணா திராவிடர்கழகத்தைவிட்டுப் பிரிந்தார்.

அந்தக் காலத்தில் வாரிசு உரிமைச் சட்டமில்லாததால், தனக்குப் பின் கட்சியையும் சொத்துக்களையும் பாதுகாக்க, தனக்கு நம்பிகை யான மணியம்மையாரைத் திருமணம் செய்ய முடிவு செய்தார். உடுமலைப்பேட்டை நீதிமன்றத்தில் இருந்து பெரியாருக்குச் சம்மன் வருகிறது. அடுத் தடுத்து மூன்று சம்மன்கள் காத்திருக்கின்றன. தான் சிறைக்குக் கொண்டு செல்லப்படுவோம் என்று பெரியாருக்குத் தெரிகிறது. உடனடியாக வாரிசை நியமித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டவர், மணியம்மையாரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். "திருமணம் என்பதுச் சட்டப்படியான பெயரே ஒழிய, காரியப்படி எனக்கு வாரிசுதான்" என்றார் பெரியார்.

அண்ணாவின், திராவிட நாடு ஏடு, மணியம்மையாரைத் திருமணம் செய்ததால் பெரியாரின் தொண்டர்கள் கண்ணீர் விடுவதாகவும் அந்தக் கண்ணீரில் பெரியார் மூழ்குவதைப் போன்றும் அட்டைப்படத்தை வெளியிட்டது. இதனால் பெரியார் தி.மு.க.வினரைக் 'கண்ணீர்த் துளிகள்' என்று விமர்சித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தத் திருமணத்தை காரணம் காட்டி அண்ணா கட்சியைவிட்டு வெளியேறி, தனிக்கட்சி யைத் தொடங்குகிறார். திராவிடர் என்ற பெயரி லிருந்து 'ர் ' என்ற எழுத்தை நீக்கி, திராவிட முன்னேற்றக் கழகம் என கட்சிக்குப் பெயர் சூட்டினார்கள். அதற்கு விளக்கமாக இங்கு 'திராவிடமும்' வாழலாம் 'ஆரியமும்' வாழலாம் என்றனர். திராவிடர் கழகக் கடவுள் மறுப்பு கொள்கையை 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று மாற்றியமைத்துக்கொண்டனர். பார்ப்பனர் களைக் கட்சியின் உறுப்பினர்களாகவும் சேர்த்துக் கொண்டனர். தேர்தலில் போட்டியிடவும் முடிவு

செய்தனர். பார்ப்பனர்களைப் 'பிராமணர்கள்' என்று எழுதிவந்தனர். இதை அப்போதே பெரியார் கண்டித்தார்.

**நட்பு**

இப்படி பல்வேறு முரண்பாடுகள் இருந்தாலும் 1967 இல் தி.மு.க தேர்தலில் வெற்றி பெற்ற உடனே தோழர் பெரியாரைத் தோழர் அண்ணா சந்தித்து வாழ்த்துப் பெறுகிறார். மேலும் தி.முக வின் வெற்றியை அய்யாவிற்கு காணிக்கையாக அளிப்பதாகக் கூறினார். அண்ணா அவர்கள் திருச்சி நகரிலுள்ள பெரியார் மாளிகையில் 07.06.1967 பெரியாரால் நடத்திவைக்கப்பட்ட திருமண விழாவில் பேசியபோது,

"நானும் அவரும் பிரிகிறபோதுகூட நான் அவரையே தான் தலைவராகக் கொண்டேன்; வேறு ஒருவரைத் தலைவராகப் பெறவில்லை. அன்று ஏற்றுக்கொண்டதைபோல் இன்றும் அவரையே தலைவராகக் கொண்டுதான் பணி செய்து வருகிறேன்.'' என்று கூறினார்.

திருச்சியில் 17.9.1967 இல் நடைபெற்ற பெரியாரின் 89 வது பிறந்த நாள் விழாவில் இரு நூற்றாண்டுப் பணியை 20 ஆண்டுகளில் பெரியார் செய்துகாட்டினார் என்றும் பெரியாரின் போராட்டப் பாதையில் நான் என்று பேசினார். பேசியது மட்டும் இல்லாமல் ஆட்சிக்கு வந்த உடனே பெரியாரின் கொள்கைகளில் சிலவற்றிக்குச் சட்ட வடிவம் கொடுத்தார்.

* சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடி யாக்கப்பட்டன.
* சென்னை ராஜ்யம் என்ற பெயரை மாற்றித் 'தமிழ் நாடு' என்ற பெயரைச் சூட்டினார்.
* மும்மொழி கொள்கையை மாற்றி தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித்திட்டத்தை கொண்டுவந்தார்.
* அரசு அலுவலகங்களில் கடவுள்கள், சாமியார்கள், படங்களை மாட்டக் கூடாது என்றும், ஏற்கனவே மாட்டப்பட்டிருக்குமானால் படிப்படியாக பிறர் கவனத்தை ஈர்க்காத வகையில் அகற்றிட வேண்டும் என்றும் தமிழக அரசு, தலைமைச்செயலாளர் ஒரு அரசாணையைப் பிறப்பித்தார்.

நிலச்சீர்திருத்தச்சட்டங்களை அமல்படுத்தினார்.

அண்ணா பதவியில் இருந்தது சிறிது காலமே என்றாலும், பெரியாரின் கொள்கைகளுக்குச் சட்ட வடிவம் கொடுத்து தனது சுயமரியாதை உணர்வை வெளிப்படுத்தினார். 'தான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியார்' என்று கூறினார். பின்னாட்களில் பெரியாரின் திருமணத்தைப் பற்றிய தனது தவறான நிலைப்பாட்டையும் உணர்ந்தார்.

அண்ணா அவர்கள் உடல் நலம் சரியில்லாத போது பெரியார் மிகுந்த வருத்தம் அடைந்தார். அமெரிக்காவிலிருந்து அண்ணா 10.10.1968 அன்று பெரியாருக்குக் கடிதம் ஒன்றை எழுதுகிறார். அதில்

"சென்னை மருத்துவமனையிலும், விமானத் தளத்திலும் தாங்கள் கவலையுடனும், கலக்கத்துடனும் இருந்த தோற்றம் இப்போதும் என்முன் தோன்றியபடி இருக்கிறது. ஆகவே தான் கவலைப்பட வேண்டிய நிலை முற்றிலும் நீங்கிவிட்டது என்பதனை விளக்க மாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் அன்புக்கு நன்றி.''

என்று அந்த கடிதத்தில் குறிப்பிட்டி ருந்தார்.

இது அண்ணா மற்றும் பெரியாரின் இருவரின் நட்பை எடுத்துக்காட்டுகிறது. அண்ணா 1969 பிப்ரவரி 3 அன்று மறைந்தார். 04.02.1969 அன்று சென்னை வானொலி மூலம், அண்ணா மறைவுற்ற மைக்குத் தோழர் பெரியார் அவர்கள் ஆற்றிய இரங்கல் உரை:

**அண்ணா முடிவெய்திவிட்டார்! அண்ணா வாழ்க!**

"அண்ணா முடிவெய்துவிட்டார். அண்ணா வாழ்க! அதாவது அண்ணா தொண்டு வாழ்க. தோழர்களே! நோய் வருவதும் முடிவெய்துவதும் மனித ஜீவனுக்கு இயற்கையேயாகும். இதில் யாரும் தப்ப முடியாது ஆனால், அதற்காக மக்கள் வருந்துவதும், துக்கம் கொண்டாடுவதும் மக்களுக்கு ஒரு சம்பிரதாயமேயாகும் என்றாலும், இவ் விஷயத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் சம்பிர தாயத்தை எல்லாம் தாண்டி மக்களின் உச்சநிலைத் துக்கக் கொண்டாட்டத்தைப் பெற்றுவிட்டார்.''

"சமுதாயச் சீர்திருத்தப்பணி, மற்ற பணிகளைப் போல் சாதாரணப் பணியல்ல. மக்களின் வெறுப்பிற்கும், ஏச்சுப் பேச்சுக்கும் ஆளாகி அவர்கள் நீண்ட காலமாகக் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும், நடப்பிற்கும் விரோதமாகச் செய்யும் பணியாகும். சமுதாயச் சீர்திருத்தப் பணிக்கு என்ன வேண்டுமோ அதையே சிறப்புப் பெயராகக் கொண்டவர் அண்ணா ஆவார். 'அறிஞர்' என்கின்ற பெயர் வேறு எவருக்கும் கிடைத்ததற்கரிய பெயராகும். அப்படிப்பட்ட பெயரை முதலில் அண்ணா பெற்றார். நம் நாட்டில் இதுபோல் பெயர் பெற்றிருந்தவர் 'புத்தர்' ஒருவர் தான் ஆவார். புத்தியைக் கொண்டு சிந்தித்தாலேயே அவர் புத்தரானார். அறிஞர் என்ற பெயர் பெற்றவர்களால் தான் சமுதாயச் சீர்திருத்தம் செய்ய முடியும்.''

- தோழர் பெரியார், விடுதலை, 20.03.1969.

அண்ணாவும் பெரியாரும் சில இடங்களில் முரண்பட்டாலும் பின் நாட்களில் ஒன்று சேர்ந்து செயல்பட்டனர். அண்ணாவை ஆதரித்த காலங் களில் கூட சில சமயங்களில் கொள்கைக்கு முரண் பட்டபோது, பெரியார் அண்ணாவை விமர்சிக்க மறக்கவில்லை. ஆதரிக்க வேண்டிய இடத்தில் ஆதரித்தார் எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்க்கவும் செய்தார். எதிர்க் கருத்துக் கொண்டவ ராயினும் சமூகநீதிக்காக ஒன்று சேர்ந்து நின்று எதிரிகளை (பார்ப்பனர்களை) வெல்வதே பெரியாரின் இயல்பு. அப்படி வென்றதே அண்ணா மற்றும் பெரியார் இருவரின் நட்பு.

அதி அசுரன்

# இடிக்கப்பட வேண்டியவை சுவர்கள் மட்டுமல்ல; கோவில்களும் தான்!

“

**சாதி**

**வெறும் சுவராகவோ, வேலியாகவோ இருந்தால் அதைத் தகர்த்து விடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம்; ஒரு மனநிலை.'' என்கிறார் தோழர் அம்பேத்கர். அந்த ‘மனநிலை' என்பது, பிற்படுத்தப்பட்டவர்களிடம் இருந்தால் எதிர்ப்போம். பட்டியலின மக்களிடம் இருந்தால் அதை ஆதரிப்போம் என்பது பார்ப்பன ஜாதி, இந்து மத ஆதிக்கத்திற்கே வழிவகுக்கும்.**

இந்து மதத்திலிருந்துப் பிரிக்க முடியாத - இந்து மதத்தின் அடிப்படையான பேராபத்து ‘ஜாதி முறை' ஆகும். இந்து மதத்தில் உள்ள அனைவரையும் அது தாக்கும். இந்து மதம் உள்ளவரை அனைவரையும் தாக்கும் என்பதற்கு மீண்டும் ஒரு சான்று தான் சந்தையூர் தீண்டாமைச்சுவர். தீண்டாமைச்சுவரே இடிக்கப் பட்டாலும், அங்கு தீராதசிக்கலாக இருப்பது ‘ஜாதிமுறை'. தீண்டாமைச் சுவர் என்பது அங்கு நடைமுறையில் உள்ள பல தீண்டாமைக் கொடுமைகளில் ஒரு அடையாளம் மட்டுமே.

சந்தையூருக்கு யார் நேரில் சென்றாலும், அங்கு பறையர்கள் கட்டியிருப்பது தீண்டாமைச் சுவர் தான் என்று மிகத் தெளிவாகத் தெரியும். அது இடிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதில் உண்மை யாகவே ஜாதி ஒழிப்பை இலக்காகக் கொண்டிருக்கும் எவருக்கும் மாற்றுக்கருத்து எழவே முடியாது.

தோழர் பெரியார் காலத்திலேயே திருச்சியிலும், இலால்குடியிலும் கிறிஸ்தவர்களின் தேவாலயத்திற்கு உள்ளேயே, வழிபாடு நடக்கும் அரங்கத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பறையர்களுக்கும் இடையே தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரியாரின் போராட்டத்தால் தான் பறையர்களுக்கு எதிரான தடுப்புகள் தகர்க்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டு, திருச்சி மேலப்புதூர் கிறிஸ்தவர் சுடுகாட்டில், கிறிஸ்தவப் பிள்ளைமார்களால், பறையர்களுக்கு எதிராகக் கட்டப்பட்டுள்ள தீண்டாமைச் சுவருக்கு எதிராகக் களம் கண்டது ‘பெரியார் திராவிடர் கழகம்'. அன்று பறையர்களுக்கு ஆதரவாக, பிள்ளைமார் மற்றும் பிற்படுத்தப்பட்ட ஜாதியினருக்கு எதிராகச் சுடுகாட்டுச்சுவரை இடிக்கக் கிளம்பியவர்கள்தான், இன்று சந்தையூரில், பறையர்கள் கட்டியுள்ள தீண்டாமைச் சுவரை அகற்றுங்கள் என பறையர்களிடம் கேட்கிறோம்.

**தொண்டு நிறுவனங்களின் நிலையும் பெரியாரின் நிலையும்**

தீண்டாமை ஒழிப்பு என்ற களத்தில்கூட மேலே கூறப்பட்ட கருவறைத் தீண்டாமையையோ, கிறிஸ்தவச் சுடுகாட்டுத் தீண்டாமையையோ, பறையர்கள் நடத்தும் தீண்டாமையையோ கண்டுகொள்ளாத பல தீண்டாமை ஒழிப்பு அமைப்புகள் இயங்குகின்றன. குறிப்பாக, ‘எவிடன்ஸ்' தொண்டு நிறுவனம்.

ஆணவக்கொலைகளுக்கும், பலவகையான தீண்டாமைக் கொடுமைகளுக்கும் எதிராக எவருக்கும் அஞ்சாமல் களத்தில் நிற்பது எவிடன்ஸ் நிறுவனம். மிருகபலம் கொண்ட அரசாங்கங்கள், காவல்துறை அதிகாரிகள், நீதிமன்றங்கள் என எந்த ஆதிக்கத்திற்கும் பணியாத நிறுவனம். ஆனால், சந்தையூரில் சக்கிலியர்களை ஒடுக்கும் பறையர்களுக்கு ஆதரவாகப் பணிந்து விட்டது என்பது வருத்தமளிக்கிறது.

அதன் இயக்குநர் தோழர் கதிர், சந்தையூரில் கட்டடப்பட்டது, 'வெறும் சுற்றுச்சுவர் தான்' என உறுதிப்படுத்த முகநூலில் பல அறிக்கைகளை வெளியிட்டார். அவை தான் அவரைப் புரிந்து கொள்ள உதவின. தோழர் கதிர் மட்டுமல்ல; தீண்டாமை ஒழிப்பு எனும் களத்தில் சமரசமின்றிப் போராடிய பல தோழர்களின் முகத்தையும் நாம் அறிய முடிந்தது.

அது சுற்றுச்சுவரோ, தடுப்புச்சுவரோ, பாது காப்புச் சுவரோ, வெறும் சுவரோ எதுவாக இருந் தாலும் - அந்தச் சுவரைத் தாண்டியுள்ள பொது இடத்தில் சக்கிலியர்கள் நுழையக்கூடாது என்று சந்தையூர்ப் பறையர்கள் அறிவித்துள்ளதால் இது தீண்டாமைச் சுவர்தான் என்பது நேரடியாக உறுதி யாகிறது. நேரடிச் சான்று மட்டுமல்லாமல், தோழர் பெரியாரின் வரிகளிலிருந்தும் இந்தச் சுவர் ஒரு தீண்டாமைச்சுவரே என்பதை உறுதிப் படுத்தலாம்.

> "ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக கிணறு, கோவில், பள்ளிக் கூடம் முதலியவைகள் ஏற்படுத்து வது புண்ணியம் என்று சிலர் கருதுகி றார்கள். நான் அதை ஒப்புக் கொள்ள முடியாததோடு வெறுக்க வேண்டியவனாகவும் இருக்கிறேன். சென்ற வருடம் இதே ஊருக்கு வந்திருந்த சமயம் காந்தி கிணறு என்ற ஒரு கிணற்றை ஆதி திராவிடர்களுக்கு மாத்திரம் என்று வெட்டி அதைத் திறந்து வைக்கும்படி கேட்டு கொண்டபோது நான் இதே அபிப் பிராயத்தை தான் தெரிவித்தேன். இம்மாதிரி ஒரு வகுப்பாருக்குத் தனி சௌகரியம் ஏற்படுத்திக் கொடுத்து நம்மோடு கலந்து வாழும்படி செய்யாததின் பயனாய் நிரந்தரமாய் இவர்கள் இழிந்தவர்கள் என்பதை நிலைநிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்தவர்களாகின்றோம்.
>
> ... தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கும் சமத்துவம் அடையச்செய்வதற்கும் பாடுபடும் பெரியோர்கள் அந்த சமூகத்திற்கென்று தனியாகக் கிணறும், கோவிலும் பள்ளிக்கூடமும், வெட்டவும், கட்டவும் ஏற்படுத்தவும் நினைப்பதானது அச்சமூகத்தாரை நிரந்தரமாய் இழிவுபடுத்தி வைப்ப தற்கு ஆதாரங்களையும், அவசியங்களையும், கற்சிலை களையும், சிலாசாசனங்களையும் உண்டாக்கி வைத்த வர்களே ஆவார்கள்"

*20.7.27 இல் சிறாவயல் காந்தி ஆசிரமத்தாரும்,*
*ஆதிதிராவிடர் சமூகத்தார்களும்*
*அளித்த வரவேற்பில் தோழர் பெரியார் உரை.*
*குடி அரசு - 31.07.1927*

> ..."நீங்கள் எவ்வளவு பக்தியுடையவராக வேஷம் போட்டாலும் உங்களை பறைச்சாமியார் என்றுதான் சொல்லுகிறார்கள். வெட்கமில்லாமல் உங்களுக்கு என்று வேறு கோயில் கட்டிக்கொள்கிறீர்கள். இதனால் நீங்கள் கீழ்ஜாதி என்பதை ஒப்புக் கொண்டவர்களா இல்லையா? அந்த சாமி உள்ளவரை அதாவது அந்த "பறையர் கோவில்" உள்ளவரை உங்கள் பறைத் தன்மையை நிலை நிறுத்தினவர்களாகிறீர்களா இல்லையா? இதற்கு ஆகவே மேல்ஜாதிகாரர்கள் உங்களுக்குப் பணம் கொடுத்து உங்கள் பறைத் தன்மையை நிலை நிறுத்தக் கோவில் கட்டச் செய் கிறார்கள்.

## ஜாதி

**ஆதிக்கச் சிந்தனையாளர்கள் வரிசையில் இன்று பறையர்கள் வந்தாலும், நாளையே சக்கிலியர்கள் வந்தாலும் அனைவரது சிந்தனைகளையும் எதிர்ப்பது தான் ஜாதி ஒழிப்புக்கு வழிவகுக்குமே ஒழிய - "ஜாதிகளை ஒழிப்போம். (என் ஜாதியைத் தவிர)" என்றோ - இன்னொரு ஜாதியினர் ஆதிக்கப் போக்குகளுக்கு இணையாக நாங்களும் ஆதிக்கச் சிந்தனையில் வாழ்வோம் என்பதோ மீண்டும் இந்துமதப் புதைகுழியில் விழுந்து அழியவே பயன்படும்.**

> உங்களில் பலர் முட்டாள்தனத்தாலும், அதிலிருந்து சிறிது பொருள் கொள்ளை கொள்ளலாம் என்றும் அந்த வேலையை ஜீவனோபாயமாகக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள் ஏமாறக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறேன்".

*07.03.1936 ஆம் நாள் திருச்செங்கோடு தாலுகா*
*சமுத்திரத்தில் நடைபெற்ற திருச்செங்கோடு*
*தாலுக்கா 5 வது ஆதிதிராவிடர் மாநாட்டில்*
*தலைமை வகித்து, தோழர் பெரியார் உரை.*
*குடி அரசு - 15.03.1936*

தனியாகக் கோவில் கட்டுவதோ, பள்ளிக்கூடம் கட்டுவதோ எதுவாக இருந்தாலும் அது தீண்டா மையைத் திணிக்கும் காரியங்கள் என்கிறார் பெரியார். தொண்டுநிறுவனத் தோழர்களோ, அந்தத் தனிக்கோவில்களுக்கு-அந்தத் தனிமைப்படுத்தலுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் கட்டப்பட்ட சுவர்களைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள்.

சந்தையூர் இராஜகாளியம்மன் கோவில் சுவர் என்பது சக்கிலியர்கள் மீது தீண்டாமையை ஏவுவதோடு மட்டும் நிற்கவில்லை. சுவரைக் கட்டிய பறையர்களும் தங்களைத் தாங்களே தனிமைப் படுத்திக் கொள்ளவும், இழிவுபடுத்திக்கொள்ளவும் காரணமாக இருக்கிறது.

இந்தச் சுவரும், இரண்டு தனித்தனி கோவில்களும் நீடித்து இருக்க வேண்டும் என விரும்புபவர்கள் அனைவருமே அறிந்தோ - அறியாமலோ பறையர், சக்கிலியர் ஆகிய இரண்டு ஜாதிகளையும் தீண்டத்தகாத மக்களாகவே நீடிக்க வைக்கவே பாடுபடுகிறார்கள். இந்தத் தனிமைப் படுத்தலை, ஒதுக்கலை நியாயப்படுத்தத் தொண்டு நிறுவனங்களும், சில தீண்டாமை ஒழிப்புப் போராளிகளும் சில வாதங்களை முன்வைத் துள்ளனர். அவை பற்றிப் பார்ப்போம்.

**தீண்டாமை ஒழிப்பில் பெரியாரிஸ்ட்டுகளின் அணுகுமுறை**

> “எஸ்.சி - பி.சி மோதலையும், எஸ்.சி பிரிவுக்கு உள்ளேயே நடக்கும், பறையர் - சக்கிலியர் மோத லையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. ஒரே வகையாக அணுகமுடியாது. ஒடுக்கப்படும் ஜாதிகளுக்குள் நடக்கும் மோதலைக் கவனமாகத்தான் கையாள வேண்டும்”

என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது. இரண்டு வகை மோதல்களுக்கும் வெவ்வேறான அணுகுமுறை வேண்டும் என்பது மிகவும் தவறானது. இரண்டு வகையான முரண்களுக்கும் அடிப்படையானவை ஜாதியும், இந்து மதமும் தான். நோய் ஒன்றுதான். இரு தரப்பினரும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தான். நோயை உருவாக்குபவை இந்து மதமும், சாஸ்திரங்களும், வேதங்களும், அவை உருவாக்கி வைத்துள்ள பண்பாடு, பழக்க வழக்கங்களும் தான்.

இந்து மதத்தின்படி பார்ப்பனர் தவிர மற்ற அனைவருமே ஒடுக்கப்பட்டவர்கள் தான். ‘தலித்’ என்ற சொல்லோ, வடநாட்டு ஜாதி ஒழிப்பு அமைப்புகள் பயன்படுத்தும் ‘பகுஜன்’, ‘மூல்நிவாசி’ போன்ற சொற்களோ பட்டியலின மக்களை மட்டும் குறிப்பவை அல்ல. தோழர் பெரியாரின் வரிகளிலேயே இக்கருத்தைக் காணலாம்.

> “இந்த நாட்டில் தீண்டப்படாதவர் என்று அழைக்கப் படாத ஜாதி ஒரே ஒரு ஜாதிதான் உண்டு. அதுதான் பார்ப்பன ஜாதி என்பதாகும். அதைத்தவிர மற்றெல்லா ஜாதி வகுப்பு மக்களும் தீண்டப்படாதவர்களாகவே தான் கருதப்படுகிறார்கள். ஐரோப்பியர்களும், முஸ்லிம் களும், இந்திய கிறிஸ்தவர்களும் பார்ப்பனரொழிந்த ஏனைய இந்துக்கள் என்பவர்களும், பார்ப்பனர் களுக்குத் தீண்டப்படாதவர்களேயாவோம். அவர் களுடைய கடவுள்களுக்கும் நாம் எல்லோரும் தீண்டப் படாதவர்களேயாவோம்”.

*- 05.03.1938 இல் பெரம்பலூரில் நடைபெற்ற ஆதிதிராவிட மாகாண மாநாட்டில் தோழர் பெரியார் ஆற்றிய உரை. குடி அரசு - 13.03.1938*

வரலாற்றில் இதுவரை தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் மோதல் என்றால் பெரியா ரிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்டோர் பக்கமே நின்றுள்ளனர். களத்தில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு எதிராக நின்றாலும், இரு தரப்புக்கும் பொது எதிரியான பார்ப்பனர் களையும், இந்து மதத்தையும், சாஸ்திரங்களையும் முதன்மைக் குற்றவாளிகளாக அறிவித்து, புரிய வைத்தே வந்துள்ளனர்.

அதே அணுகுமுறையைத் தான் சந்தையூரிலும் பின்பற்றுகிறோம். பாதிக்கப்பட்ட அருந்ததி யினருக்கு ஆதரவாக நிற்கிறோம். அதேசமயம் பறையர்களின் ஆதிக்கச் செயல்பாடுகளுக்குக் காரணம் பறையர்கள் அல்ல; பார்ப்பனர்களும், இந்து மதமும் தான் என்பதைப் புரிய வைத்தே வந்துள்ளோம்.

பிற்படுத்தப்பட்டவர்கள், பறையர்களைப் பார்த்து, “நீங்கள் மாட்டுக்கறி சாப்பிடுகிறீர்கள், உங்கள் உடலில் நாற்றம் அடிக்கிறது. நீங்கள் நுழைந்தால் தெரு தீட்டாகிவிடும். கோவில் தீட்டாகிவிடும். நீங்கள் வளர்க்கும் நாய் எங்கள் தெருவில் நுழைந்தால் கூட நாங்கள் தீட்டாகி விடுவோம்” என்று கூறுவதற்கும் - இதே வாக்கியங் களை பறையர் இனத்தினர், சக்கிலிய இன மக்கள் மீது பயன்படுத்துவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? எதற்காக இந்த முரண்பாட்டையும், எஸ்.சி - பி.சி முரண்பாட்டையும் பிரித்துப் பார்க்க வேண்டும்?

> **“சாதி வெறும் சுவராகவோ, வேலியாகவோ இருந்தால் அதைத் தகர்த்துவிடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம் - ஒரு மனநிலை.”**

என்கிறார் தோழர் அம்பேத்கர். அந்த ‘மனநிலை’ என்பது, பிற்படுத்தப்பட்டவர்களிடம் இருந்தால் எதிர்ப்போம். பட்டியலின மக்களிடம் இருந்தால் அதை ஆதரிப்போம் என்பது பார்ப்பன ஜாதி, இந்து மத ஆதிக்கத்திற்கே வழிவகுக்கும்.

**பட்டியலின மக்களின் ஒற்றுமை**

> “சந்தையூர், திட்டக்குடி சிக்கல்களைப் போன்ற, தாழ்த்தப்பட்ட ஜாதிகளுக்கு இடையே நடக்கும் முரண் பாடுகளைப் பேசுவதால், தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமை சீர்குலையும். நாம் அனைவரும் ஓர் இனம். இதைப் ‘பெரிது’ படுத்தவேண்டாம்”.

இந்த ஒற்றுமை எண்ணம் பாராட்டத்தக்கது. ஆனால், இந்த வாக்கியத்தின் பலன்கள் தொடர்ச்சியாக எந்த ஜாதிக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது? எந்த ஜாதியை அடக்கிவைக்கப் பயன்பட்டுள்ளது என்பதைப் பார்த்தால், இதன் நேர்மை விளங்கும்.

“இந்துக்களே ஒன்றுசேருங்கள்” என்று பார்ப்பனர்களும் - “தமிழர்களே ஜாதிகளை மறந்து ஒன்று சேருங்கள்” என்று தமிழ்த்தேசியத் தலைவர்களும் முழங்கும் வசனங்கள் பார்ப்பனர் களுக்கும், வளர்ந்த ஜாதிகளுக்கும் மட்டுமே பயன்படும்.

அதுபோலவே, பட்டியலின மக்களுக்குள் “தலித்துகளே ஒன்று சேருங்கள்” என்பதும் பட்டியலின மக்களுக்குள் ஆதிக்கம் செய்பவர் களுக்கே பயன்படும். முரண்பாடுகளை வெளிப் படையாகப் பேசி, ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வழி வகுக்காமல், வெறும் ஒற்றுமை பேசுவது பெரும் பார்ப்பனியம் ஆகும்.

இதே 'தலித் ஒற்றுமை' என்ற வாதத்தை முன்வைத்துத்தான் சக்கிலியர்களின் உள்ஒதுக் கீட்டுக்கு எதிராக டாக்டர் கிருஷ்ணசாமி போன்ற பலரும் முட்டுக்கட்டை போட்டார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**பட்டியலின மக்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் ஓரினமே**

ஒரே இனம் என்றால், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருமே ஒரே இனம் தான். சர்வதேச அளவில் நடைபெறும் மரபியல் ஆய்வுகளும், மரபணு ஆய்வுகளும் இதை உறுதிப் படுத்தியுள்ளன. இந்தியப் பகுதியைப் பொறுத்த வரைப் பார்ப்பனர்கள் மட்டுமே அந்நியர்கள். மற்ற அனைவரும் ஒரே இனம் தான். பார்ப்பனர்களுக்கு நாம் அனைவருமே தீண்டாதார் தான்.

தாழ்த்தப்பட்ட ஜாதிகள் அனைத்தும் ஓர் இனம், அதனால் அந்த ஜாதிகளுக்குள் நடக்கும் சண்டைகளைப் 'பெரிது' படுத்தக்கூடாது என்றால், பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் இரு தரப்புமே ஒரே இனம்தானே? அந்த வகையான தாக்குதல்களை மட்டும் ஏன் 'பெரிது' படுத்தி னோம்?

**சந்தையூர் இராஜகாளியம்மன் கோவில் சுவர் என்பது சக்கிலியர்கள் மீது தீண்டாமையை ஏவுவதோடு மட்டும் நிற்கவில்லை. சுவரைக் கட்டிய பறையர்களும் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்ளவும், இழிவு படுத்திக்கொள்ளவும் காரணமாக இருக்கிறது. இந்தச் சுவரும், இரண்டு தனித்தனி கோவில்களும் நீடித்து இருக்க வேண்டும் என விரும்புபவர்கள் அனைவருமே அறிந்தோ - அறியாமலோ பறையர், சக்கிலியர் ஆகிய இரண்டு ஜாதிகளையும் தீண்டத்தகாத மக்களாகவே நீடிக்க வைக்கவே பாடுபடுகிறார்கள்**

தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட் டோரும் ஒரே இனம் தான் என்று காலந்தோறும் பரப்புரை நடத்திக்கொண்டிருக்கும் பெரியார் இயக்கங்கள், ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விட எதிர்ப்பு, இரட்டைக்குவளை உடைப்பு, இரட்டைச் சுடுகாடுகள் உடைப்பு என பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் போராடியது ஏன்? ஜாதி ஆதிக்கச்சிந்தனையில் பார்ப்பான் வாழ்ந்தாலும், தேவர், வன்னியர், கவுண்டர் என யார் வாழ்ந்தாலும் அது, தவறு என்றுதான் அவர்களுக்கு எதிராகக் களத்தில் இறங்கின.

இந்த ஜாதி ஆதிக்கச் சிந்தனையாளர்கள் வரிசையில் இன்று பறையர்கள் வந்தாலும், நாளையே சக்கிலியர்கள் வந்தாலும் அனைவரது சிந்தனைகளையும் எதிர்ப்பது தான் ஜாதி ஒழிப்புக்கு வழிவகுக்குமே ஒழிய - "ஜாதிகளை ஒழிப்போம்.(என் ஜாதியைத் தவிர)" என்றோ - இன்னொரு ஜாதியினர் ஆதிக்கப் போக்குகளுக்கு இணையாக நாங்களும் ஆதிக்கச் சிந்தனையில் வாழ்வோம் என்பதோ மீண்டும் இந்துமதப் புதைகுழியில் விழுந்து அழியவே பயன்படும்.

இந்த உட்ஜாதி ஒற்றுமை குறித்துத் தோழர் அம்பேத்கர் எழுதியுள்ளவற்றைப் பார்க்கலாம்,

> "சாதிய சீர்திருத்தத்தில் தேவையான முதல் நட வடிக்கை, உட்சாதிகளை ஒழிப்பதே என்று ஒரு கண்ணோட்டம் இருந்து வருகிறது. சாதிகளுக்குள் இருப்பதைவிட, உட்சாதிகளுக்குள் நடை உடை பாவனைகளிலும், அந்தஸ்திலும் பெரும்பாலும் ஒத்த தன்மை இருக்கிறது என்ற எண்ணமே இந்தக் கண்ணோட்டத்துக்கு காரணம். ஆனால், இந்தக் கண்ணோட்டம் தவறானது என்றே நான் கருதுகிறேன்.... உட்சாதிகளை ஒழித்து விடுவது என்பதே சாதிகளை ஒழிப்பதற்கு வழி வகுத்துவிடும் என்று எப்படி உறுதியாக நம்ப முடியும்?
> இதற்கு மாறாக, சாதி ஒழிப்பு உட்சாதிகளை ஒழிப்பதுடன் நின்றுவிடலாம் அல்லவா? அப்படி யானால், உட் சாதிகளை ஒழிப்பது, சாதிகளை வலுப்படுத்தவே துணை போகும். சாதிகள் முன்பு இருந்ததைவிட வலிமை மிகுந்தவையாகி, முன்பைவிட மிகுந்த விஷமத்தனமாகிவிடும். எனவே, சாதியை ஒழிப்பதற்கு உட்சாதிகளை ஒன்றாக இணைத்து விடுவது என்கிற வழி, நடைமுறைச் சாத்தியமானது மல்ல, பயனுள்ளதும் அல்ல. இது தவறான வழி என்பது எளிதில் நிரூபணமாகும்."

- தோழர் அம்பேத்கர்
'ஜாதியை ஒழிக்கும் வழி' நூல்.

**ஜாதி ஒழிப்பாளர்களின் ஆபத்தான தயக்கம்**

தமிழ்நாட்டில், தாழ்த்தப்பட்டோர் மீது பிற்படுத்தப்பட்டோர் நடத்தும் வன்கொடுமைத் தாக்குதல்களின்போது, ஜாதி ஒழிப்பில் அக்கறை கொண்ட அனைத்து அமைப்புகளும் களமிறங்கு கின்றன. பொதுவுடைமை இயக்கங்கள், தலித் அமைப்புகள், திராவிடர் இயக்கங்கள் என அனைவரும் ஒடுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு எதிராகவும், ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாகவும் நிற்கின்றனர்.

ஆனால், சந்தையூர், திட்டக்குடி, கரடிச்சித்தூர் போன்ற பறையர் - சக்கிலியர் முரண்பாடுகள், வன் கொடுமைகள் நடக்கும் போது, இதே அமைப்புகள் அமைதியாகி விடுகின்றன. பார்ப்பனர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களே நமக்குப் பிறவி எதிரிகள் அல்ல. அவர்களது ஜாதி ஆதிக்கப் போக்குகளைத் தான் நாம் எதிர்க்கிறோம். அப்படியானால், ஒரு இடத்தில் பள்ளர்களோ, பறையர்களோ, சக்கிலியர் களோ இந்து மத சமுதாய மதிப்பு நிலையில், தங்களுக்குக் கீழான மற்றொரு ஜாதியினரை ஒடுக்கினால், அதையும் எதிர்ப்பது தான் நேர்மை.

அதைவிட்டு விட்டு, உட்ஜாதி ஒற்றுமை, அது வெறும் இடப்பிரச்சனை, அதுவெறும் சொத்துப் பிரச்சனை, அது தனிப்பட்ட இரண்டு நபர்களின் பிரச்சனை என்று பூசி மெழுகிக் கொண்டிருந்தால் - இதே போன்ற காரணங்களைச் சொல்லிக் கொண்டிருந்த இராமதாஸ், அன்புமணி, காடு வெட்டிகுரு, யுவராஜ் போன்றவர்களுக்கும், இந்த ஜாதி - தீண்டாமை ஒழிப்புப் போராளிகளுக்கும் என்ன வேறுபாடு என்று தான் கேட்கத்தான் தூண்டும். இளவரசன், சங்கர், கோகுல்ராஜ் படுகொலைகளை நியாயப்படுத்தும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் இந்தத் தீண்டாமை ஒழிப்பாளர் களுக்கும் என்ன வேறுபாடு என்றுதான் கேட்கத் தோன்றும்.

**ஊர்ப்பொதுக்கோவில் நுழைவு**

சந்தையூரில் பிற்படுத்தப்பட்ட தேவர், முத்தரையர், பிள்ளைமார், நாயக்கர் ஜாதியினரும், பட்டியலினங்களான பறையர், சக்கிலியர் ஜாதி யினரும் வாழ்கின்றனர். அந்தக்கிராமத்தில் பறைய ருக்குத் தனிக் கோவில், சக்கிலியர்களுக்குத் தனிக் கோவில், பிற்படுத்தப்பட்ட ஜாதியினருக்குத் தனிக் கோவில் அதாவது ஊர்ப்பொதுக்கோவிலாக முத்தாளம்மன் கோவில் என போட்டி போட்டுக் கொண்டு இந்து மதத்திற்குச் சேவை செய்யும் பணியை அனைத்து ஜாதிகளும் செய்கின்றன.

ஊருக்குப் பொதுவாக ஒரு கோவில் இருக்கும் போது, சக்கிலியர்களுக்கும், பறையர்களுக்கும் எதற்காகத் தனித்தனிக் கோவில்கள்? எதற்காக அந்தக் கோவில்களுக்குக் கோட்டைச்சுவர்கள்? எதற்காக அவற்றை வைத்து இத்தனை சண்டைகள்?

ஜாதி ஒழிப்பில் அக்கறை உள்ளவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஜாதியைப் பற்றியோ ஜாதி ஒழிப்புத் தலைவர்களான பெரியார், அம்பேத்கரின் கருத்துக்களைப் பற்றியோ சிறிதள வாவது தெரிந்திருந்தால், என்ன செய்திருக்க வேண்டும்?

முதற்கட்டமாக, பறையர்கள் கட்டியுள்ள தீண்டாமைச்சுவர் தகர்க்கப்படவேண்டும். ஆக்கிர மிக்கப்பட்டுள்ள அரசு நிலம் அதற்குரிய மக்கள் அனைவருக்கும் பொதுவாக வேண்டும்.

இரண்டாம் கட்டமாக, தங்களுக்கென்று தனித்தனியாகக் கட்டப்பட்டுள்ள கோவில்களை இடித்துத் தள்ளிவிட்டு, சந்தையூர் முத்தாளம்மன் கோவிலில் சக்கிலியர்களும், பறையர்களும், தேவர்களும், முத்தரையர்களும், நாயக்கர்களும் இணைந்து விழா எடுக்க முயற்சிக்க வேண்டும். அனைத்து ஜாதியினரிடமும் வரிவசூல் செய்யப்பட வேண்டும். மாலை மரியாதைகள் அனைத்து ஜாதியினருக்கும் ஒன்றாக, பொதுக் கோவிலிலேயே நடைபெற வேண்டும். அந்த நிலைதான், சமத்துவத்தின் தொடக்கம்.

**இந்து மத வேத, சாஸ்திரச் சுவர்கள்**

உத்தபுரத் தீண்டாமைச் சுவரும் சந்தையூரைப் போல வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரியும் சுவர்தான். இவைபோல அல்லாமல், கண்ணுக்குத் தெரியாத இந்துமத வேதங்களின் சுவர், சாஸ்திரங் களின் சுவர் என்று பல சுவர்கள் உள்ளன. இன்று வரை பறையர், பள்ளர், சக்கிலியர், கள்ளர், கவுண்டர், வன்னியர், நாயக்கர், பிள்ளைமார் என அனைத்து ஜாதியினரையும் கோவில் கருவறைக்குள் நுழையவிடாமல், அந்த இந்துமதச்சுவர்கள் தடுத்தே வைத்துள்ளன.

சந்தையூர், உத்தபுரச் சுவர்களோ - இந்து ஆகம விதிகளின்படி நடக்கும் பார்ப்பனக் கோவில் கருவறைச் சுவர்களோ எவையாக இருந்தாலும், சாஸ்திரப்படியும், இந்திய அரசியல் சட்டப்படியும் நாம் அனைவரையும், அனைத்து ஜாதியினரையும், 'பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள்' என்று எழுத்தி லேயே குற்றம்சாட்டி ஒதுக்கி வைத்துள்ளன.

இன்று வரை எந்த ஜாதியினரின் சங்கங்களும் நம்மைத் தேவடியாள் மக்களாக அறிவித்து, ஒதுக்கி வைத்துள்ள கண்ணுக்குத் தெரியாத, கருவறைச் சுவர்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. அந்தச் சுவர்களை உடைக்க வேண்டும் என இதுவரை எண்ணியதும் இல்லை.

எனவே, சந்தையூரிலுள்ள அனைத்து ஜாதி களும் முதலில் முத்தாளம்மன் கோவில் சமத்து வத்தை நிலைநாட்டிவிட்டு, உடனடியாக, அருகிலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவிலில் பார்ப் பனர்களுக்கு மட்டுமே உரிமையாக உள்ள கருவறையில் நுழைந்து வழிபடும் போராட்டங் களை முன்னெடுக்க வேண்டும்.

> "இந்தப் பொதுக்கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு" என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களைச் சிறையிலிட வேண்டும். இதைப் பொது ஜனங்கள் கூட்டம் போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோவிலை இடித்தெறிந்து விடவேண்டும்.
>
> - தோழர் பெரியார், குடி அரசு - 09.12.1928

இந்தத் திசையில் வழிகாட்டாத எந்தத் தீண்டாமை ஒழிப்பாளர்களாலும், எந்த ஜாதி ஒழிப்பாளர்களாலும், எந்தக் காலத்திலும் தீண்டா மையோ, அதற்கு அடிப்படையான ஜாதியோ ஒழியவே ஒழியாது.

> "இந்துக்கள் மிக ஆழமான மதப்பற்று உள்ளவர்களாக இருப்பதால்தான் சாதியைப் பின்பற்றுகிறார்கள். சாதியைக் கடைப்பிடிப்பதில் மக்களின் தவறு எதுவுமில்லை. சாதி என்கிற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்து இருக்கிற இந்து மதத்தின் மீதே தவறிருப்பதாக நான் கருதுகிறேன். என்னுடைய இந்தக் கருத்து சரியானதென்றால், நீங்கள் வீழ்த்த வேண்டிய எதிரி – சாதியைக் கடைப்பிடிக்கும் மக்கள் அல்ல; சாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாஸ்திரங்களே உங்கள் பயங்கர எதிரி".
>
> - தோழர் அம்பேத்கர்,
> 'ஜாதியை ஒழிக்கும் வழி' நூல்

மதுரை வாசுகி



# காதலை ஆண்டாள்

ஆண்டாள் நாள்தோறும் நாளிதழ்களைக் கையில் எடுத்தால் ஆண்டாள் சர்ச்சை என்று பக்கத்துக்குப் பக்கம் செய்திகள். அப்படியென்ன ஆண்டாளுக்கு ஆகிவிட்டது? கவிப் பேரரசு வைரமுத்து ஆண்டாளைத் தேவதாசி என்று கூறி விட்டார். உண்மையில் அவர் அவ்வாறு கூறவில்லை என்பது வேறு விஷயம்.

அவர் “தமிழை ஆண்டாள்” என்னும் தலைப்பில் ஆண்டாள் எழுதிய திருப்பாவை என்னும் ஆண்டாள் பாசுரத்தில் உள்ள தமிழின் சிறப்பைக் குறித்து எழுதிய கட்டுரையின் இறுதியில், “வேறொரு ஆய்வாளர் ஆண்டாள் கோயிலில் தேவதாசியாக இருந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். இதை பக்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்று தெரியவில்லை” என்றுதான் குறிப்பிட்டுள்ளார்.

அதற்குள் இந்துமதக் காவலர்கள் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள், ஆண்டாள் கோயிலுக்கு வந்து வைரமுத்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறி உண்ணாவிரதம் இருந்தனர். ஒருநாள் மட்டும்தான். அடுத்த நாளே வைரமுத்துவுக்கு 03.02.2018-க்குள் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கெடு வைத்துவிட்டு உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

சரி,தேவதாசி என்றால் யார்? ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்த பெண்களைக் குறிப்பிட்ட வயதில் பொட்டுக்கட்டி, கோயில்களில் விட்டுவிடுவார்கள். அவர்கள் கோயிலில் நடனமாடுவது மட்டுமல்ல, இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் , இறைவனுக்குப் பணிசெய்ய பிறந்தவர்கள் என்று கூறிக் கொள்வார்கள். இந்த நடைமுறையை எதிர்த்து, இது பெண்களை மிகவும் இழிவுபடுத்துவதாக உள்ளது, இதைத் தடைசெய்யவேண்டும் என்று பெரியார் குரல் கொடுத்தபோது பார்ப்பனர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர்.

சட்டமன்றத்தில் தேவதாசி முறையை ஒழிக்க மசோதா நிறைவேற்றியபோது, காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்தியமூர்த்தி அய்யர் அதைக் கடுமையாக எதிர்க்கிறார். எதிர்த்தது மட்டுமல்லாமல், தேவதாசி என்பவர் கடவுளுக்குத் தொண்டு செய்பவர், அந்தப் பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்காது. ஏற்கனவே உள்ள மரபுகளை மாற்றக்கூடாது என்று வாதிடுகிறார்.

அப்போது சட்டமன்றத்தின் முதல் பெண் உறுப்பினரான டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், தோழர் பெரியாரின் ஆலோசனையைப் பெறுகிறார். பிறகு சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தி அய்யருக்குப் பதிலளிக்கிறார், “இத்தகைய கடவுள் தொண்டினை இவ்வளவு நாளும் எங்கள் இனப்பெண்கள் செய்து வந்தார்கள். இனிமேல் உங்கள் வீட்டுப் பெண்கள் செய்யட்டும்” என்றார். சத்தியமூர்த்தியால் இதை மறுத்துப் பேசமுடியவில்லை. இதற்குப் பிறகுதான் தேவதாசி ஒழிப்பு சட்டமாக்கப்பட்டது.

அன்று தேவதாசி என்பவர்கள் கடவுளுக்குத் தொண்டு செய்பவர்கள் என்று கூறிய பார்ப்பனர்கள் இன்று ஆண்டாளைத் தேவதாசி என்று வைரமுத்து கூறியதற்கு, அதாவது அவர்கள் மொழியில் சொன்னால் கடவுளுக்குத் தொண்டு செய்பவர் என்று கூறியதற்காக ஏன் கோவப்படுகிறார்கள் என்பதுதான் புரியவில்லை. இதிலிருந்து தேவதாசி என்பது பெண்களை இழிவுபடுத்தும் சொல் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது தெரிகிறது. அந்த இழிவை நீக்கவும் பெரியாரால்தான் முடிந்தது.

உண்மையில் ஆண்டாள் என்று ஒரு பெண் இருந்தாளா? அவள் பெரியாழ்வாரின் மகளா? அல்லது அவரால் கோயிலில் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவளா? என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. ஆனால், உண்மையில் அப்படியொரு பெண் இருந்து பெருமாளைத் தன் கணவனாக மனதில் நினைத்து உருகி உருகிக் காதலித்து அந்த உணர்வுகளைப் பாசுரங்களாக பாடியிருப்பதாகவும் எடுத்துக்கொண்டால்,

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு பெண் தன் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தியதைப் பாராட்டி அவளைக் கடவுளாக ஏற்றுக் கொண்டிருப்பார்களா? என்பது சந்தேகத்துக் குரியது. ஏனென்றால், இந்த நூற்றாண்டில் கூட குட்டிரேவதி எழுதிய "முலைகள்" கவிதை நூல் சக ஆண் எழுத்தாளர்களால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. ஒரு பெண் இப்படி யெல்லாம் எழுதலாமா? என்று ஆளாளுக்கு விமர்சனம் செய்தார்கள். எனவே பல நூற்றாண்டு களுக்கு முன் ஒரு பெண் தன் காம இச்சைகளைப் பாசுரங்களாகப் பாடியிருப்பாள் என்பதோ, அவளைக் கடவுளாக மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதோ நம்பும் படியாக இல்லை.

இப்படிப்பட்ட கற்பனைக் கதாபாத்திரமான ஆண்டாளை வைரமுத்து இழிவுபடுத்திவிட்டார் என்றும் அவர் மன்னிப்புக் கேட்கும்வரை உண்ணா விரதம் இருக்கப்போகிறேன் என்றும் திருவில்லி புத்தூர் ஜீயர் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறார். இரண்டாவது நாளன்று பா.ஜ.க.தேசிய செயலாளர் எச்.ராஜா மற்றும் நடிகர் எஸ்.வி.சேகர் (பார்ப்பனர்) ஆகியோரது வேண்டுகோளை ஏற்று எந்த நிபந்தனையும் இன்றி உண்ணாவிரத்தைக் கை விடுகிறார்.

ஆனால், இதே எச்.ராஜா வைரமுத்துவை சாதாரண மனிதர்கள்கூட பேசத் தயங்கும் தகாத வார்த்தைகளால் திட்டுகிறார். அவரைத் திட்டு வதற்குப் பதிலாக அவரது தாயார், மனைவி ஆகியோரை இழிவுபடுத்துகிறார். மேலும், இந்துக் கடவுளை இழிவுபடுத்தியதுபோல் பிற மதக் கடவுளைப் பற்றி பேசியிருந்தால் இந்நேரம் அவரது தலை தரையில் உருண்டிருக்காதா? என்றெல்லாம் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிப் பார்க்கிறார். தமிழக மக்கள் 60 ஆண்டுகளாக பண்படுத்தப் பட்டவர்கள். அவர்களுக்குத் தெரியும் எந்த விஷயங்களுக்கெல்லாம் எதிர்வினையாற்ற வேண்டுமென்று ஆண்டாளைப் பற்றிய கவலை நமக்கில்லை. நாம் நமது பகுத்தறிவு பரப்புரையைத் தொடர்வோம்.

**கவிஞர் தமிழ்மன்னன்,** திண்டுக்கல்

# பார்ப்பான் பண்ணையம் கேட்பாரில்லையா?

சண்டித்தனம் பண்ணுகின்ற
சங்கராச் சாரியே! - கால்
நொண்டியாகிப் போனதா? - உனக்கு
மண்டைவெடித்துப் போனதா?

எப்படி வந்தது இந்தத் துணிச்சல்? - அற்ப
எத்தனாம் காஞ்சி சங்கராச் சாரிக்கு
துப்பிலா இனமாய்ப் போனதா தமிழினம்? - சற்றும்
சுரணையே இன்றித் தூங்கிக் கிடக்குதே!

பெற்றநம் தாயை இழிவு செய்தால் - அதனைப்
பிள்ளைகள் பொறுத்து சும்மா திரிவரோ?
கற்றநல் லோரே! கனித்தமிழ் மாந்தரே - பார்ப்பனக்
கசடன் தமிழை இகழ்வது தகுமோ?

தமிழ்த்தாய் வாடிநத்துப் பாடல் இசைக்கையில் - எழுந்தே
தரத்தக்க மரியாதை செய்யாத் தருக்கனின்
திமிர்த்தனம் ஒடுக்க திரண்டெழு வோமே - தமிழ்த்
தேசமே கொதித்துக் குரல்கொடுப் போமே.

'இந்து'என்று நினைந்தே இத்தனைக் காலமாய் - நாம்
இளித்த வாயராய் இருந்துவிட் டோமே
சொந்தநம் இனத்தை தூயநற் றமிழை - இத்
தூர்த்தரிட மிருந்து காத்திடு வோமே.

இந்திய தேசிய கீதம் ஒலிக்கையில் - நீ
எழுந்துநின் றாயே தொழுதுகொண் டாயே
செந்தமிழ் உனக்கே இளப்பமாய் ஆனதோ- அட!
தியானம் செய்ததாய்ப் புளுகுகின் றாயே.

அன்னைத் தமிழை அவமதிக்கும் கும்பலே! - தமிழர்
அனைவரிட மும்நீர் மன்னிப்பு கேட்டிடு!
மொன்னையாய் மூங்கையாய் எமைநீர் எண்ணினால் -
அதற்கு
முடிவுரை எழுதுவோம்! நின்செய்கை மாற்றிடு!




கீற்று நந்தன்

# பாதுகாப்பான உடலுறவு குறித்துச் சொல்லிக் கொடுங்கள்

**மணமுடிக்காத காதலர்களுக்கு**

1. 'விக்கிரமன் குரூப்' இயக்கிய தமிழ்ப் படங்களைப் பார்த்து அதுதான் காதல் என்று நினைத்து விடாதீர்கள். 'பிரேமம்' வகைப் படங்கள்தான் உங்களுக்கு முன்மாதிரி. ஒரு வாசல் மூடினால், இன்னொரு வாசல் திறக்கும்.

2. கல்யாண வாழ்க்கைக்கான முன்னோட்டம் தான் காதல் வாழ்க்கை. கொஞ்சம் எச்சரிக்கை உணர்வுடன் அதை முழுமையாக அனுபவியுங்கள்; ஒன்றும் குடிமுழுகி விடாது.

3. காதலிக்கும்போதும் சரி, கல்யாணத்திற்குப் பின்னும் சரி - ஒருவரை ஒருவர் பிறாண்டிக் கொண்டிருப்பதை விட, ஒத்து வரவில்லை என்றால், கை குலுக்கிப் பிரிவது நல்லது.

4. ஆணை விட, பெண்ணுக்கு ஆயிரம் மடங்கு சமூக, குடும்ப அழுத்தங்கள் உள்ளன. உங்கள் காதலி பின்வாங்கினால், அதைப் புரிந்து கொள்ளுங்கள். "அடிடா அவளை, உதைடா அவளை" என்பதெல்லாம் காட்டுவிலாங்காண்டித்தனம்.

5. காதலில் தோல்வி என்பது சுகமான வலி; திருமணத்தில் தோல்வி என்பது துயர்மிகுந்த வலி. பல முறை யோசித்த பின்பே திருமணத்திற்குச் செல்லுங்கள்.

6. சாதி, மதவாதிகளின் எதிர்ப்பு, திருமணத்திற்குப் பின்னான பொருளாதாரப் பிரச்சினைகளை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து தீர யோசியுங்கள். தோள் கொடுக்க மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய இயக்கத் தோழர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**பெற்றோர்களுக்கு**

1. நீங்கள் அனுமதிக்கவில்லை என்றாலும், உங்கள் பிள்ளைகள் காதல் வயப்படுவார்கள். இயற்கை நியதியை உணர்ந்து அனுமதிப்பது உங்கள் மரியாதையை அவர்களிடம் உயர்த்தும்.

2. சாதி, மதம் என சுற்றம் உங்களை நெருக்கும். அதற்குச் செவிசாய்த்து அரிவாளைத் தூக்கினால், உங்களுக்குத் தூக்குத் தண்டனையோ, இரட்டை ஆயுள் தண்டனையோ நிச்சயம். தூண்டி விட்டவர்கள் அடுத்தவன் குடி கெடுக்கப் போய் விடுவார்கள்.

3. பாலியல் குற்றங்கள் அதிகமாக நடக்கும் இந்த சமூகத்தில், பருவ வயதை அடைந்த பெண் பிள்ளைக்கு ஒரு காதலன் இருப்பது அவளுக்கு மிகப் பெரும் பாதுகாப்பு. வீடுவரை பாதுகாப்பாக அவன் வருவான்.

4. 14 வயதில் பாலியல் பசி கொள்ளும் பிள்ளைகளுக்கு 25 வயதிற்கு மேல் உணவிடுவது, பெற்றோர் என்ற அதிகாரத்தில் நீங்கள் செய்யும் மிகப் பெரும் வன்முறை.

5. பசி, காமம் இரண்டும் அனைத்து விலங்குகளுக்கும் பொதுவானது. ஆனால், பெற்றோர் அனுமதி இல்லாமல் காமம் கொள்ளக் கூடாது என்று சொல்வது மனித சமுதாயத்தில் மட்டுமே நடைபெறுகிற அசிங்கமான செயல். 'தாலி கட்டிய நாளன்றுதான் காம உணர்வு முகிழ்க்க வேண்டும்' என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

6. இயற்கை நியதிக்கு எதிராகக் காமத்திற்கு ஆயிரம் கட்டுப்பாடுகள் விதிப்பதை விட, பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான உடலுறவு குறித்துச் சொல்லிக் கொடுங்கள்.

7. திருமணம் ஆன பிள்ளைக்குத் துணையுடன் தனித்திருக்க தனிஅறை ஒதுக்குகிற நீங்கள், காதலிக்கும் பிள்ளைக்கு ஒதுக்குவதில் என்ன கேடு வந்துவிடும்?

8. பிள்ளைகளின் காதல் திருமணத்திற்குச் சம்மதம் கொடுங்கள். இல்லையேல், அவர்கள் உங்களை ஏமாற்றிவிட்டு திருமணம் செய்வார்கள் அல்லது கண்ட நாய் எல்லாம் காதலர் தினத்தன்று உங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும்.

மௌ.அர.ஜவஹர், பழனி

# மத்திய பட்ஜெட் நமக்கானதல்ல!

## பார்ப்பன - பனியா - பன்னாட்டுக் கூட்டத்திற்கே!!

நாடாளுமன்றத்தில் 2018 - 2019 க்கான மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இதில் அறிவிக்கப்பட்ட சில விசயங்கள் சிறப்பாகப் புகழப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால் அவைதான் பி.ஜே.பியின் தேர்தல் பிரச்சாரத்தில் முதலிடம் பிடிக்கும். அவற்றில் முதன்மையானது இன்ஸூரன்ஸ் திட்டம்.

**இன்ஸ்யூரன்ஸ் திட்டம்**

1. 10கோடி குடும்பங்களுக்கு ரூ.5,00,000 காப்பீடு என்னும் திட்டம். இது மக்கள் தொகையில் 40 % அதாவது ஏறக்குறைய 50 கோடி பேருக்கு. இதற்கான செலவு ரூ.50,000 கோடி ஆகும்.

2. (அரசு மருத்துவமனைகளை மேம் படுத்தாமல்) இந்தப் பணம் அப்போலோ போன்ற கார்ப்பரேட் தனியார் மருத்துவமனைகளுக்குத் தானே போகும்? அடுத்து எந்த இன்சூரன்ஸ் கம்பெனியிடம் அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது என்பதை அதன் பெயரைப்பார்த்தாலே தெரியும் அதுவும் கார்ப்ப ரேட் கம்பெனி என்று. இதற்கான தொகை 50,000 கோடி.

3. அடுத்து பொதுத்துறை நிறுவனங்களை விற்பதன் மூலம் (De Investment) அரசுக்கான வருவாய் 80,000 கோடியிலிருந்து 1,00,000 கோடி வரை. இதில் கிடைக்கும் பணம்தான் நமக்கு இன்சூரன்ஸ் என்று கார்ப்பரேட்டுக்கு அள்ளி விடப்படும். மேலும் பொதுத்துறையை De Investment செய்வதால் அப் பொதுத் துறைகளும் கார்ப்பரேட் வசமாகும்.

4. இதில் இந்தியாவில் காப்பீட்டுத் துறையின் மதிப்பு 28,000 கோடி டாலராக உயரும் என்று துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கூறியுள்ளார். அதாவது நம் மதிப்புக்கு ரூ 16,80,000 கோடி. மேலும் அவர் கூறியதுதான் முக்கியமானது. காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீடு உயர்ந்திருப்பதைப் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

5. இத்திட்டத்திற்கு அவர்கள் வைத்துக் கொண்ட பெயர் ‘நமோ கேர்’அல்லது ‘மோடி கேர்’.அதாவது அமெரிக்காவில் ஒபாமாவின் மக்களின் வரவேற்புக் குள்ளான திட்டத்திற்கு ‘ஒபாமா கேர்’ என்ற பெயரைக் காப்பி அடித்து வைத்துக் கொண்டது. ஒபாமா கேர் வெற்றி பெற்றதா தோற்றதா என்று தெரியாது ஆனால் மோடிகேர் வெற்றி பெறும் என்று நக்கல் வேறு.

6. ஒபாமாகேர் எனப்படும் திட்டமே கட்டுப் படியாகும் மருத்துவக் காப்பீடு ஆகும். அதாவது அனைத்து அமெரிக்கர்களும் வசதி படைத்தவர் களும் நடுத்தரக் குடும்பத்தினரும், ஏழைக் குடும்பத்தினருக்கும் கட்டுப்படியாகும் விலையில் மருத்துவக் காப்பீட்டை அளிப்பதாகும். பொதுச் மக்களுக்கு சலுகை அடிப்படையில் அதாவது வரிச் சலுகையாக அரசு ஆதரவிலான காப்பீட்டுத்திட்டம் வழங்கப்படும்.

7. ஒபாமா கேர் திட்டத்தில் 2.6 கோடி குழு மருத்துவக் காப்பீட்டுக்கு 4,200 கோடி டாலர் அதாவது நம் மதிப்பில் சுமார் ரூ2,52,000 கோடி யாகும். ஆனால் மோடிகேருக்கு ஒதுக்கப்பட்ட தொகையோ வெறும் ரூ.1800 கோடி. ஆனால் இத்திட்டம் செயல்பட ரூ.1,00,000 கோடி தேவைப் படும்

8. இதில் இன்னொரு கூத்து இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் 60 % மத்திய அரசின் பங்காகவும் மீதமுள்ள 40% பங்கு மாநில அரசின் பங்காக இருக்கு மென்று சில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் இதுபற்றி மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தியதாகத் தெரியவில்லை.

9. ஏற்கனவே தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் காப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. மோடி கேர் நடைமுறைக்கு வந்தால் அத்திட்டங்களைத் தொடர வேண்டுமா? அல்லது கை விட வேண்டுமா? என்னவாகும் என்று தெரியவில்லை.

**விவசாயிகளுக்கான திட்டம்**

1. வேளாண் விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 1.5 மடங்கு உயர்வு. ஆனால் இது எப்படி வழங்கப்படும் என்று தெளிவாக இல்லை.

2. உரமானியம் என்பது செயற்கை உரத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கானது. அப்படி யானால் அந்த மானியம் முழுக்க செயற்கை உர நிறுவனங்களுக்கே போய்சேருமல்லவா! அவை யனைத்தும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுப் பெரு நிறுவனங்களேயாகும். இந்த மானியப்பணம் விவசாயிகளின் கைகளுக்குக் கூடச் செல்லாமல் அரசிடமிருந்து நேரடியாக அந்நிறுவனங்களுக்கே போய்ச் சேரும்.

3. விவசாயிகளுக்கு 11 இலட்சம் கோடி ருபாய் கடனுதவி என்பதில் கூட ஒரு நேர்மையில்லை. இந்தக் கடன் வங்கிகள் தரும் கடன். இதற்காக பட் ஜெட்டில் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. ஏற்கனவே கடந்த பட்ஜெட்டில் 10 இலட்சம் கோடி அறிவிக்கப் பட்டது. அது அறிவிப்பாகவே போய்விட்டது.

4. அப்படியே வங்கியில் வாங்கப்படும் கடனும் டிராக்டர் போன்ற பொருட்கள், அதாவது பெரு நிறுவனங்களின் பொருட்கள் வாங்கவே பயன்படும்,

5. உணவு பதப்படுத்தப்படும் திட்டத்திலும் இப்பெரு

நிறுவனங்களே இம்மய்யங்கள் தொடங்க முடியும். எனவே இதற்கான பணமும் இவைகளுக்கே போய்ச் சேரும்

**மற்ற திட்டங்கள்**

1. அடிப்படைக் கட்டமைப்புக்குச் சுமார் 6 லட்சம் கோடி. இது பட்ஜெட்டில் 25%

2. இந்தக் கட்டமைப்பிற்கான முழுத் தொகையும் தனியார் பெருநிறுவனங்களிடமே (CORPORATE) ஒப்பந்தமிடப்பட்டுக் கொடுக்கப் படும்,

3. இந்தத் தனியார் துறைகளில் இடஒதுக்கீடே கிடையாது. இந்நிறுவனங்களில் பெரும் உயர் பதவிகளில் பெரும்பான்மையினர் பார்ப்பனரே.

4. இராணுவத்துக்குச் சுமார் 3 லட்சம் கோடி. இது பட்ஜெட்டில் 12%.

5. இப்பணத்தில் பெரும்பகுதி பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சென்றுவிடும்.

6. இதில் உள்நாட்டு நிறுவனங்கள் சில இருந்தாலும் அவற்றில் இடஒதுக்கீடே கிடையாது. அங்கு பார்ப்பன ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது.

7. சாதாரண மக்கள் பயன்படுத்தும் தரைவழிப் போக்குவரத்து, இரயில்வே துறை, நீர் வழிப் போக்குவரத்து போன்றவற்றுக்கு அதிகநிதி ஒதுக்க வில்லை. அதற்கு மாறாக 1% க்கும் குறைவான மக்கள் பயன்படுத்தப்படும் விமானத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

8. பயணிகள் விமானத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ.6000 கோடியில் 4000 கோடிக்கு இரண்டு மிக சொகுசு விமானங்கள் மட்டும் வாங்கப்படுகிறது. அது மோடி போன்றோர் ஊர்சுற்ற.

9. இறக்குமதிக்கு அதிகவரி என்று சொல்லப் பட்ட நிலையில் ஏற்றுமதிக்குச் சலுகைகள் எதுவும் சொல்லப்படவில்லை. அப்படியானால் இதன் பொருள் என்ன?

**அடுத்து முக்கியமாக**

1. தேசியப் பயிற்றுனர் திட்டத்தில் 2020 க்குள் 50 லட்சம் இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி அளிக்கப்படும். ஆனால் நம் நாட்டில் உள்ள நிலையோ தலை கீழ். வருடத்துக்கு சுமார் பத்திலிருந்து - பனிரெண்டு இலட்சம் பேர் தொழிற் கல்வி உட்பட படித்துவிட்டு வேலைக்காக கல்லூரி களை விட்டு வெளியே வருகின்றனர். ஆனால் நாட்டில் வேலைவாய்ப்பு என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

2. 11.02.2018 இல் (ஞாயிறன்று) நடைபெற்ற TNPSC தேர்வில் Grade - 2 வுக்கு 9,351 இடங்களுக்கு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டோர் எத்தனை பேர் என்றால் பெண்கள் ஆண்கள் உட்பட 20 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள்.

3. "வேலை இழப்பு பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி" - இதைச் சொன்னவர் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல்.

4. ஸ்டார்ட் - அப் நிறுவனங்கள் 2015 இல் 6,636 மில்லியன் டாலர் முதலீடு செய்யப்பட்டது. ஆனால் 2016-இல் அது 3,450 ஆகக் குறைந்து 2017-இல் 2,870 மில்லியன் டாலராகக் குறைந்துவிட்டது. 2014-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் குறைந்து வரும் வேலை வாய்ப்பு, பணமதிப்பு நீக்கம், GST போன்றவற்றால் மீள முடியாத நிலையில் உள்ளது. மேலும் உற்பத்தித் துறை ஊதியமும் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்துவருகிறது என டீம் லீஸ் ஆய்வு கூறுகிறது.

5. கடந்த ஆண்டில் 40% வேலை இழப்பு உருவாகியுள்ளது என்கிறது புளூம்பெர்க் அறிக்கை. இதில் உள்ள ஹை லைட்டே கார்ப்பரேட் நிறுவனங் களுக்கு வரி 30% லிருந்து 25% ஆகக் குறைப்பு என்பது தான்.

ஆக நூற்றுக்கு தொண்ணூறு சதவிகிதம் கார்ப்பரேட்டுகளுக்காகவே போடப்பட்ட பட்ஜெட் இது என்றால் மிகையில்லை. இதன் பயனாக கார்ப்பரேட்டுகளிடம் இவர்கள் வாங்கப் போகும் நிதியால் கார்ப்பரேட்டுகளுக்குத் தொல்லை வராமல் இருக்க, தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் என்னும் முறையைக் கொண்டு வந்துள்ளனர். மேம்போக்காகப் பார்த்தால் என்னவோ நன்கொடைக்கான வெளிப்படைத்தன்மைக்காகத் தான் என்று இருக்கும். ஆனால் இம்முறையில்,

1. யார் வேண்டுமானாலும் பாரதஸ்டேட் வங்கியில் இந்தத் தேர்தல் நன்கொடைப் பத்திரங் களை வாங்கி, தாங்கள் விரும்பும் கட்சிகளுக்கு கொடையாக அளித்து விடலாம்.. இத்தொகை அரசியல் கட்சிகளின் வரவுக் கணக்கில் பற்று வைக்கப்படும். ஆனால் யார் கொடுத்தார்கள் என்ற பதிவு அதில் இடம் பெறாது.

இந்த ஏற்பாட்டால் தேர்தல் ஆணையம், வருமான வரித்துறை, வாக்காளர்கள் ஆகியோருக்குத் தெரியாமல் மறைத்தே வைக்கப்படும். இந்தப் பணம் எந்தக் கணக்கிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்டது எனபதை வங்கிகளில் உள்ள உயர் பொறுப்பில் உள்ள பார்ப்பன GM மற்றும் பார்ப்பன அதிகாரி களாலும் இவர்களின் துணையோடு ஆளுங்கட்சி யாலும் மட்டுமே கண்டு பிடிக்க முடியும்.

2. ஒரு நிறுவனம் தனது லாபத்தில் அதிக பட்சமாக 7.5% அளவுக்கு மட்டுமே நிதி அளிக்க வேண்டும் என்ற உச்சவரம்பை நீக்கியுள்ளது. எனவே பெரிய நிறுவனங்கள் எத்தனை வேண்டுமானாலும் தொடங்கலாம்.

3. அடுத்ததாக அந்நிய நன்கொடைகள் முறைப் படுத்தல் சட்டமும் இதே போல திருத்தப்பட்டு வெளிநாட்டில் ஆதரவாளர்களைக் கொண்டுள்ள பார்ப்பனச் சார்பு அமைப்புகளுக்குச் சாதகமாக்கி யுள்ளது.

எனவே இந்த பட்ஜெட் பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டு பெரு நிறுவனங்களுக்காகத் தானே ஒழிய, மக்களுக்காக இல்லை.

செங்கை நிலவன்.





# ‘தேவர்’ நீங்க படிச்சி வாங்கிய பட்டமா? ‘பாலு’ வான பெரியாரின் பெருந்தொண்டர் வி.எஸ்.குழந்தை

“பாலு உங்க பேரு... ‘தேவர்’ நீங்க படிச்சி வாங்கிய பட்டமா?” ‘வேதம் புதிது’ படத்தில் வரும் இந்த வசனத்தை யாரும் எளிதில் மறக்க முடியாது. இந்த வசனத்திற்குப் பின்னால் ஒரு உண்மைச் சம்பவம் இருக்கிறது.

தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியையும் விட தஞ்சாவூர் தனித்துவமானது. அதிலும் பட்டுக் கோட்டை மற்றும் பேராவூரணி அதிலும் சிறப்பானது. பட்டுக்கோட்டையில் அஞ்சாநெஞ்சன் அழகிரி போன்ற பெரியாரிய மற்றும் பொது வுடைமைத் தோழர்களும் நின்று களப்பணி செய்து மனித மாண்புகளை மீட்டெடுத்ததில் முக்கிய பங்காற்றி யவர்கள்.

அப்படிப்பட்ட எங்க ஊரில் அதாவது பேராவூரணியில் பெரியாரின் முற்போக்குக் கருத்து களால் ஈர்க்கப்பட்டு பெரியாரின் பெருந் தொண்டராக இருந்தவர் திரு. வி.எஸ்.குழந்தைத் தேவர் அன்றைய பேராவூரணியில் பெரும் பணக் காரராக அறியப்பட்டவர்.

பேராவூரணியை ஒட்டி இரண்டு கிராமங் களில் இராஜராஜ சோழன் காலத்தில் உருவாக்கப் பட்ட இரண்டு மடங்கள் இருக்கிறது. அதற்குப் பலஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள். அதை நிர்வகிக்க மடத்து அய்யர்கள் இன்றும் இருக்கிறார்கள். நிலம் ஓரளவு இப்போது கைமாறிப் போய் இருக்கிறது அல்லது போய் கொண்டு இருக்கிறது. இந்த மடத்தை நிர்வாகிப்பது காஞ்சி தலைமைப் பீடம். அதன் நிர்வாகத்தில் தான் இந்த மடங்கள் இயங்குகின்றன.

அப்படிப்பட்ட தென்னங்குடியில் உள்ள மடத்திற்கு இன்றைய ஜெயந்திரருக்கு முன்னால் இருந்த சந்திரசேகர சுவாமிகள் வந்திருந்தார். தென்னங்குடி மடத்திற்கு உட்பட்ட பகுதிகளைப் பல்லாக்கில் உட்கார்ந்து பார்வையிட்ட பின்பு அந்தப் பல்லாக்கைத் தென்னங்குடியில் இருந்து மாவடுக்குறிச்சி மடத்திற்குத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

இதைக் கேள்விப் பட்ட பெரியாரின் பெருந் தொண்டர் வி.எஸ்.குழந்தைதேவர் அவர்கள் மக்களைத் திரட்டிக் கொண்டு அவர்கள் வரும் வழியில் உள்ள ஆனந்தவள்ளி ஆற்றங்கரையில் மக்களுடன் உடகார்ந்துவிட்டார் ஒரு மனிதனை மற்ற மனிதர்கள் எப்படி பல்லாக்கில் சுமக்கலாம் இது சுயமரியாதை இல்லை என்று.

பல்லாக்கை நான்கு பேர் தூக்கி வர, பல்லாக்கின் முன்புறம் படை பரிவாளங்கள் வந்து கொண்டிருந்தது. முன்னாடி வந்தவர்களுக்குக் கூட்டத்தைப் பார்த்தவுடன் புரிந்துபோயிருந்தது. இது வி.எஸ்.குழந்தைத்தேவரின் வேலை என்று. வந்தவர்கள் தேவருடன் பேச்சுவார்த்தை நடத்தி னார்கள்.

இது மடத்தின் மரபு. காஞ்சிப் பெரியவாளைப் பல்லாக்கில் தான் தூக்கிச் செல்லவேண்டும் அதனால் பிரச்சனை பண்ணாமல் வழி விடுங்கள் என்று கேட்டார்கள்.

அதற்குத் தேவர் சொன்னார், “எங்க மரபில் செத்த பொணத்தைத் தான் நாங்க பல்லாக்கில் தூக்குவோம். அதுவும் எந்த ஊரில் செத்தாங்களோ அந்த ஊரிலையே புதச்சிடுவோம். அந்த ஊர்ப் பொணத்தை எங்க ஊர் வழியாக கொண்டு செல்ல விடமாட்டோம். அங்கேயே புதைச்சிடுங்க” என்று சொன்னாரே பார்க்கலாம். அதுவரை பல்லாக்கில் அமர்ந்திருந்த சந்திரசேகர சுவாமிகள் எந்த வார்த்தையும் பேசாமல் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டார். பல்லாக்கு, தூக்கி எறியப்பட்டு நடந்து செல்ல வைத்தது எங்க ஊரு வரலாறு.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு தொண்டர் ஒருவர் சுட்டிக்காட்ட, அவருக்குப் பின்னால் இருந்த தேவர் என்ற பட்டத்தை போடக்கூடாது என்றும் அழைக்கக் கூடாது என்று அன்பாகவும் அதே நேரம் கடுமையான உத்தரவு மூலம் கடைப்பிடித்து - தன் இறப்புவரை கொள்கைப் பிடிப்புடன் இருந்து வி.எஸ்.குழந்தையாகவே இறந்தார்.

இதைக் கேள்விப்பட்டு, இதனால் ஈர்க்கப் பட்ட பாரதிராஜா அவர்கள், தன் படத்தில் “பாலு... உங்க பேரு... ‘தேவர்’ நீங்க படிச்சி வாங்கிய பட்டமா” என்ற வசனத்தை வைத்தார். உண்மையில் குழந்தைத் தேவரின் பாதிப்புதான் பாலுத்தேவர்.